# திருக்கோயில்

செப்டம்பர் 1979 ரூ. 1-25





சிவசக்தி சாந்தம்

முகப்பு:

காஞ்சிபுரம்,
அருள்மிகு காமாட்சியம்மை திருக்கோயிற்
கோபுரத்தின் அழகிய தோற்றம்

# திருக்கோயில்

மாலை: 21 | சித்தார்த்தி ஆண்டு-புரட்டாசித் திங்கள்-செப்டம்பர்-1979 | மணி: 12

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் "சந்தாதாரர்" ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் [PINCODE] எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ. 25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

பத்துப் பாட்டும் கடவுட் கொள்கையும்.
—டாக்டர் திரு சொ. சிங்காரவேலன், எம்.ஏ, பிஎச்.டி.

சொற்குறுதிக்கு அப்பர் எனச்சொல்
—திரு புரிசை சு. முருகேச முதலியார்

உயர்வு பெற வழி
—திருமுருக. கிருபானந்த வாரியார்

திருக்குறளில் முரணா?
—டாக்டர் திரு மொ. அ. துரை அரங்கனார்

குமர குருபர சுவாமிகளும், தில்லைச்சிவகாமி அம்மையும்.
—திரு ப. வடிவேற்பிள்ளை.

குறள் காட்டும் நெறி
—திரு கி. ஆ. பெ. விசுவநாதம்.

தாராசுரத் திருக்கோயில், சிற்பங்களும் கல்வெட்டுக் களும்
—பேராசிரியர் திரு க. வெள்ளைவாரணனார்.

வாலி - ஒரு புதிய கண்ணோட்டம்
—பேராசிரியர் திரு அ. ச. ஞானசம்பந்தம், எம். ஏ.,

காசி விசாலாட்சி
—திரு மு. அருணாசலம், எம். ஏ.,

சேக்கிழாரடிகளும் இளங்கோவடிகளும்
—ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.

இந்தியத் தத்துவ ஞானம்
—பேராசிரியர் திரு கி. இலட்சுமணன், எம். ஏ,

பசித்திரு - தனித்திரு - விழித்திரு
—திரு எஸ். இராமலிங்கம், பி. எஸ்ஸி., பி. எல்.

திருஞான சம்பந்தர்
—திரு அ. ச. ஞானசம்பந்தம்.

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

இந்து சமய அறநிலைய (ஆட்சி)த் துறை வெளியீடு

# பத்துப்பாட்டும், கடவுட்கொள்கையும்

டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன், M.A., Ph.D.

**சங்கப்பாடற் பண்புகள் :**

''கவிஞனிடம் கவித் தன்மை இயல்பிலேயே முகிழ்க்கிறது; செயற்கையாக அஃது ஆக்கப்படுவதன்று'' என்று பழைய இலத்தீன் மொழியிலே ஓர் வழக்கு உண்டு. அது தமிழ் நூல்களைப் பொறுத்த வரைக்கும் தெளிந்த ஓர் உண்மை. தமிழ்க் கவிஞர்கள், சங்க காலம் தொடங்கித் தற்காலம் வரை வாழ்ந்தவர்கள், வாழ்ந்து வருபவர்களாகிய பாவலர்கள்-பாடும் கவிதைகளில் தெளிவும், இயல்பும், அமைதியும் ஆகிய பல பண்புகளைப் பார்க்கலாம். வாழ்வு திருந்துதற்கேற்ற கருத்துவளம் பலவற்றைக் கவிஞர்கள் காட்டுகிறார்கள்; தங்கள் உள்ளுணர்வையும், உயிர்ப்பையும் தங்கள் கவிதைகளில் வெளிப்படுத்துகிருர்கள். இயற்கை அன்னையின் இன்பத் திருக்காட்சிகளில் ஈடுபட்டுத் தம் இதயத்தைப் பறிகொடுத்து இனிக்கப் பாடும் சங்கப் புலவர்களைச் சங்க நூல்களிற் காணலாம். ஆங்கிலக் கவிஞர் வேர்ட்ஸ் வொர்த் இயற்கையன்னையின் மெய்யடியார் என்று கூறப்படுவார். இன்பம், அமைதி, காதற்கலப்பு ஆகிய முப்பெரும் பண்புகளை இயற்கையிற் கண்டு இன்புற்றுக் கவி பல பாடிய பண்பினர் அப்பாவலர். சங்கப் புலவர்கள் பாடல்களிலும் இவ்வின்ப அனுபவத்தை நாம் காணலாம். ஆயினும் அவற்றுக்குள்ளும் ஆங்காங்கு மன்பதை வாழ்வு மெய்யுணர்வு பற்றிய சீரிய கருத்துக்களையும் வெளிப்படுத்தாமல் இல்லை. சங்கத் தொகை நூல்களுள் ஒன்றாகிய 'பத்துப்பாட்டு' எனும் நூலுள் கடவுட் கொள்கை பற்றிய ஆராய்ச்சி ஈண்டு நம் நோக்கம்.

**பத்துப்பாட்டு நூல்கள் :**

பத்துப்பாட்டுள் அடங்கிய நூல்கள் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப் பாலை, மலைபடுகடாம் ஆகியவை. இவை அனைத்தையும் நினைவிற் கொள்ள ஒரு பழம் பாட்டு உதவும்: அது

''முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி-மருவினிய
கோல்நெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.

**பத்துப்பாட்டுப் பாடிய பாவலர்கள் :**

இவற்றைப் பாடிய ஆசிரியர்கள் முறையே நக்கீரர், முடத்தாமக்கண்ணியார், இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், கடியலூர் உருத்திரங் கண்ணனார், காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார், மாங்குடி மருதனார், நக்கீரர், கபிலர், கடியலூர் உருத்திரங்கண்ணனார், இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் ஆகியோராவர். பாடப்பட்டோரும் முறையே குமரவேள், சோழன்கரிகாற் பெருவளத்தான், ஓய்மானாட்டு நல்லியக்கோடன் தொண்டைமான் இளந்திரையன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், ஆரிய அரசன் பிரகத்தன், நன்னன் ஆகியோர்.

**திருமுருகாற்றுப்படையில் :**

திருமுருகாற்றுப்படை சங்க காலக் கடவுட் கொள்கையை விளக்கும் முழு நூலாய்த் திகழ்கின்றது. குமரவேள் இதனுள் வழிபடப் பெறுகின்றான். புலவராற்றுப்படை என்றும் வழங்கும் இவ்வாசிரியப்பா (317 அடிகள்) வினுள், வீடு பெற்றானோர் நல்லோன் வீடு பெறுதற்குச் சமைந்தா னொருவனை முருகனிடத்தே ஆற்றுப்படுத்துவது இதன் உள்ளுறை. நம் செந்தமிழ் நிலத்தின் அழகுக் கடவுளாக விளங்கும் முருகன் திருவருளை நம் முன்னோர் எவ்வாறு கொண்டொழுகினர் என்பதற்கு இந்நூல் நல்ல சான்றாக விளங்குகிறது. சீரிய செந்தமிழ்க் கவிஞராகிய நக்கீரரின் நாவன்மையும் பாவன்மையும் செந்தமிழ் முருகன் சீரருட்பிழிவே என்பதனை நன்கு விளக்குகிறது, திருப்பரங்குன்றம் முதலிய ஆறுபடை வீடுகளில் அவன் அருள் வழங்குவதை அழகாகப் பாடுகிறார் நக்கீரர்.

முருகக் கடவுளின் திருவுருவச் சிறப்பும், அணிந்துகொள்ளும் மாலை முதலிய சிறப்புக்களும், சூரர மகளிரின் செயல்களும், முருகப்பிரான் சூரனைக் கொன்ற அருளாற்றலும், கூடல்நகரின் பெருமையும், திருப்பரங்குன்றத்தின் இயற்கை வளமும் முதற்பகுதியிற் பேசப் பெறுகின்றன. திருமுருகன் அடியார்களுக்கு அருள்புரிதற்கு ஏறிவரும் யானையின்இயல்பு, ஆறுதிருமுகங்களின் செயல்கள், பன்னிரண்டு திருக்கரங்களின் செயல்கள், திருவேரகத்தில் எழுந்தருளியிருந்து அருள்வழங்கும் சிறப்பு ஆகி

யன இரண்டாம் பகுதியிற் பேசப்பெறுகின்றன. மூன்றாம் பகுதி முருகனை வழிபட முந்தும் முனிவர்கள் இயல்பு, தேவர்களுடன் வழிபட வரும் மகளிர் மாண்பு, திருமால் முதலிய தேவர்கள் இயல்பு முதலியவற்றைக் கூறுகின்றது. அந்தணர்கள் இயல்பும், அவ்வியல்புடைய அவர்கள் முருகனை வழிபடுமாறும் நான்காம் பகுதியிலிருந்து அறியப்பெறும் செய்திகள். குன்றக்குரவை, வழிபட்டுப் பாடி ஆடும் பெண்டிர் சிறப்பு முதலியவற்றை ஐந்தாம் பகுதி விளக்கும். ஆறாம் பகுதியில் முருகன் எழுந்தருளி அருள் வழங்கும் இடங்களும், தேவராட்டி அம்முருகப்பிரானை ஆற்றுப்படுத்தும் முறைகளும், முருகனிடம் சென்று அருள்பெறும் வழியும், அடியார் இயல்புகளும், அவர்க்கு அருள்புரியுமாறும், பழமுதிர் சோலை அருவிச் சிறப்புகளும் பேசப்பெறுகின்றன.

பழந்தமிழர் கடவுட் கொள்கையில் முருகப்பிரானுக்கு முன்னிடம் இருந்தது என்பதனை விளங்கிக் கொள்ளுதற்கு இத் திருமுருகாற்றுப்படை நல்ல சான்றாகும். இந்நூற் தொகுப்பினுள்ளும் ஏனையவற்றின் முதலிடம் இதற்குத் தந்திருப்பதும் இதனை நன்கு வற்புறுத்துவதாகும்.

முருகாற்றுப்படையின் தொடக்கத்தில் 'ஞாயிறு' ஆகிய சூரியன் புகழப் பெற்றிருத்தலையும் உற்று நோக்குதல் வேண்டும்:

''உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு''

முருகப்பிரானோடு ஒத்த பெருஞ் சிறப்பைக் கதிரவனும் பெற்றிருந்தான் என்பதற்கு இஃதோர் சான்றாகும் அன்றோ? பிற்காலத்தும் கதிரோனைச் சயங்கொண்டார்,

''பேராழி உலகனைத்தும் பிறந்தகலி யிருள் நீங்க
ஓராழி தனைநடத்தும் ஒண்சுடரைப் பரவுதுமே

எனப் பாடியமை இங்குக் கருதுக. முருகப்பிரான் திருவடிப்பேறு ஆகிய குறிக்கோளை,

''எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு''

என்று நக்கீரர் பாடியுள்ளார். இரவு முழுவதும் தாமரைக்குள் தூங்கியிருந்த வண்டினம், வைகறையில் வெளிப்பட்டு விழித்து இன்பக் குரல் கொடுக்கும் காட்சி, அறியாமைத் துயிலில் கிடக்கும் உயிர்க்குலம் அறிவு விழிப்பு ஏற்பட்டு வீடு பெற வேண்டும் குறிப்பை உடையது என்பர் வல்லோர்.

கருடக்கொடியோனாகிய திருமாலும், ஏற்றுக்கொடியோன் ஆகிய சிவபிரானும், உமையவளும், இந்திரனும், நான்முகனும் ஆகிய கடவுளர் பேசப்பட்டுள்ளனர். முருகன் எழுந்தருளியுள்ள இடங்களை,

''ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறியயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்''

என்று வரிசைப்படுத்தும் பகுதியும் அறிதற்குரியதாகும். வழிபட்டு ஏத்தும் மெய்யன்பர்களுக்கு,

''அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங்காட்டி''

அருளும் மாண்பையும் இங்கே காண்கின்றோம்.

நச்சினார்க்கினியர் ''கந்தழி பெற்றானொருவன் அதனைப் பெறாதானொருவனுக்குப் பெறுமாறு கூறி அவனை வழிப்படுத்துக் கூறுவான் என்பது பற்றிச் செய்யுள் செய்தாராயிற்று. கந்தழியானது ஒரு பற்றுமற்று அருவாய்த் தானே நிற்கும் தத்துவங் கடந்த பொருள். இதனை ''உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர் எழுதரு நாற்றம்போற், பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்'' (திருவாசகம்) என அதனை உணர்ந்தோர் கூறியவாற்றால் உணர்க'' என்று எழுதியுள்ள உரைப் பகுதி யொன்றே அக்காலத் தமிழ்மக்களின் கடவுட்கொள்கை உறுதியை இனிது விளக்குவதாகும்.

## பொருநராற்றுப்படையில் :

கடவுளர்களைக் குறித்து ஊர்கள்தோறும் விழாக்கள் கொண்டாடப்பட்டன. அங்குவந்து இசைவல்ல பாணர் பலரும் தம் இசை வலத்தால் இறைவனை எடுத்து ஏத்துவர். கூட்டமாக இறைவனைச் சிந்தித்தற்கு இத்தகைய விழாக்கள் ஏற்ற துணையாயிருந்தன. பொருநராற்றுப்படையில்,

''அறாஅ யாணர் அகன்றலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாட் சோறுநசை யுறாது
வேறுபுலம் முன்னிய விரகறி பொருந''

என்ற வரிகளைக் காண்க.

## பெரும்பாணாற்றுப்படையில் :

காஞ்சிபுரத்தில் திருவெஃகா எனுந் திருமால் திருத்தலம் மிக்க சிறப்பினை உடையதாயிருந்தது. அங்குத் திருமால் ஆதிசேடன் மேல் பள்ளிகொண்ட திருக்கோலம். அதனைப் 'பாம்பணைப்பள்ளி' என்பர். காந்தள் என்னும் பூக்கள் மலர்ந்த சிறுமலையிற் களிறு ஒன்று கிடப்பதுபோன்ற காட்சி அது. அத்திருத் தலத்தை அடுத்த தீர்த்தத்துறை மிக அழகிய பூந்துறை, அங்குப் பாணர்கள் தம் கையாழ்

களைமீட்டி 'அருந்திறற் கடவுளை' வாழ்த்தி வழிபடுவர் என்ற குறிப்புக்களைப் பெரும்பாணாற்றுப் படையில் காணலாம். நீனிற உருவின் நெடியோனாகிய திருமாலின் உந்தியில் உதித்தவன் நான்முகன் என்றும், அவனாற் படைக்கப்பட்ட பேரழகுத் திருநகரம் கச்சி என்றும் பெரும்பாணாற்றுப்படை பேசுகின்றது. இவற்றால் திருமால் வழிபாடும், அவனருள் வழி நிற்றலுமாகிய செய்திகளை அறியலாம்.

**மதுரைக்காஞ்சியில் :**

மதுரைக் காஞ்சி மாங்குடி மருதனாரின் சீரிய பனுவலாக விளங்குகின்றது. 782 வரிகளை உடைய இந்நெடும் பாடலின் அடிப்படையே அறநெறியாகும். வீடுபேறு நிமித்தமாகப் பல்வகை நிலையாமைகளை இனிது விளக்குவது இது. போர்புரிந்த மறச் செயலே விரும்பும் மன்னனை அறநெறிக்குத் திருப்ப முற்படும் மருதனார் கொண்டுள்ள முறை மிக அழகியதாகும். முன்னோர் இயல்புகளையும், அவன் கொடை வீரம் முதலியவற்றையும், பாராட்டித் தம்முடைய கருத்தைச் சிற்சில வரிகளிற்குறிப்பாகவே கூறிப்பின் மதுரைமாநகரின் பெருவளத்தைப் புலப்படுத்தியுள்ளார். மதுரையிற் கொண்டாடியனவாகக் கூறும் வகையிலும் உவமைகூறும் வகையிலும் (1) திருப்பரங்குன்றவிழா, (2) மதுரைக் கோயில்களில் நிகழும் விழா (3) அந்திவிழா (4) ஏழுநாள் நிகழும் பெருவிழா (5) திருவோணநாள் (6) நன்னன் நாண்மங்கல விழா ஆகியவை பேசப்பெற்றுள்ளன.

இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்த அகத்தியனார் பற்றி மருதனார் இதனுள் பாடியுள்ளார்.

''தென்னவற் பெரிய துன்னருந் துப்பிற்
தொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத் தாழருவிப் பொருப்பிற் பொருந''

இவ்வரலாறு சிவபெருமானைக் குறிக்கும் என்ற கருத்துப் பொருந்தாது என்பர் நச்சினார்க்கினியர். கடவுள் என்று முனிவரையும் குறிப்பதுண்டு என்பது அவர் கருத்தாகும். அகத்தியருடன் தலைச் சங்கத்துப் பாண்டியன் இருந்து தமிழாராய்ந்த சிறப்பையே இதுகுறிக்கும் என்பர் அவர்.

யாக்கை நிலையாது என்ற உணர்ச்சி வந்தாலேயே அறநெறியில் கடவுட் கொள்கையில் உறுதி நிலைக்கும். ஆதலின்,

''பணைகெழு பெருந்திறற் பல்வேல் மன்னர்
கரைபொரு திரங்கும் கனையிரு முந்நீர்த்
திரையிடு மணலினும் பலரே, உரைசெல
மலர்தலை உலக மாண்டுகழிந்தோரே''

என்று விளக்கியுள்ளார்.

நச்சினார்க்கினியர் ''நாயன்மார் கோயில்களிற் சேவிக்கும் மகளிர்'' என்றும். ''நாயன்மார் எழுந்தருளுங்காற் கொடியெடுத்தல் இயல்பு'' என்றும் கூறியிருக்கும் பகுதிகளிலிருந்து மதுரைமாநகரில் தெய்வம் தெளிந்து வழிபடும் தமிழ் முன்னோரின் பண்பு தெளியலாம். தெய்வங்களை 'நாயன்மார்கள்' என்று அழைத்தல் தமிழ்வழக்கு.

**குறிஞ்சிப்பாட்டில் :**

குறிஞ்சிக் கடவுளாகிய முருகனைக் குறிஞ்சிப்பாட்டில் எடுத்தேத்தியுள்ளார். முருகன் அடியார்களல்லாதாரை ஒறுத்தற்கெனக் கொண்டுள்ளவேலும், அவன் மலைக்கடவுள் என்ற செய்தியும் கபிலராற் கூறப்பெற்றுள்ளன. மலைவாணர்குலக் கடவுளாகச் செவ்வேள் விளங்கினன் என்ற பேருண்மையை இதனின்றும் அறியலாம்.

''பரவியுந் தொழுதும் விரவுமலர்தூயும்
வேறுபல் லுருவிற் கடவுள் பேணி

என்ற வரிகளால் பல்வேறு வடிவங்களிற் பல கடவுளார் அம் மக்களாற் பரவப்பட்டனர் என்று அறியலாம். அவருள் முருகனே தலைவனாக விளங்கினன் என்று உணரலாம். முருகனுக்குரிய 'காந்தள்' முதலாகப் 'புழுகு' ஈறாகச் சற்றே குறைய நூறு பூக்கள் இதனுட் கூறப்பெற்றுள்ளன. அவற்றுள்ளும் முருகனுக்குரிய காந்தள் முதலில் வைக்கப்பட்டுள்ளமை, கடவுட் கொள்கையில் முதலிடம் முருகனுக்கே என்பதைக் காட்டுவதாகும்.

நன்னனுக்குரிய நவிரம் என்னும் மலையில் அமைந்த காரி உண்டிக் கடவுள் மலைபடுகடாத்தில் பேசப்பட்டுள்ளார். அக்கோயிலைப் பற்றிய அருஞ்செய்திகளும் கூறப்பெற்றுள்ளன.

''நீரகம் பனிக்கும் அஞ்சுவரு கடுந்திறற்
பேரிசை நவிரம் மேஎ யுறையும்
காரி யுண்டிக் கடவுள தியற்கையும்''

என்ற வரிகள் அவை. காரி உண்டிக் கடவுள் என்ற தொடர்க்கு நச்சினார்க்கினியர் 'நஞ்சை ஊணாக உடைய இறைவன்'' என்று உரை கண்டுள்ளார். இது சிவபிரானைக் குறிக்கும் என்பது கூறவேண்டாமலேயே அமையும். ''நீலமணிமிடற்று ஒருவன்'' என்ற புறப்பாட்டுப் போற்றும் சிவபிரானே இக்கடவுள். நவிரம் என்றமலைஇக்காலத்துத் திருவண்ணாமலைக்கு வடமேற்கே உள்ள திரிசூலகிரி அல்லது பருவதமலை என்றும், அங்கேயுள்ள இக் காரி உண்டிக் கடவுள் இப்போது காளகண்டேசுவரர் என்று வழங்கப்படுகிறார் என்றும் டாக்டர் திரு உ.வே.சா. ஐயரவர்கள் உரைப்பர். சிவபிரானைப் பழந்தமிழ்க் கடவுளாகக் கொண்டு வழிபட்டமைக்கு இத்தொகைநூல் தரும் சான்றுகளில் இது தலையானதாகும்.

நவிரமலையில் இக்கடவுட்குரிய திருக்கோயிலை நன்னன் நன்கு போற்றி வந்தனன் என்ற செய்தியை இம்மலைபடுகடாம் நன்கு தெரிவிக்கின்றது. இத் திருக்கோயிற் காவலாக

நன்னன் வைத்த படைமாட்சியை இவ்வரிகள் தெரிவிக்கின்றன.

''மாரியின் இகுதரு வில்லுமிழ் கடுங்கணை
தாரொடு பொலிந்த வினைநவில்யானைச்
சூழியிற் பொலிந்த சுடர்ப்பூ இலஞ்சி
ஓரியாற் றியனின் மூத்த புரிசைப்
பராவரு மரபிற் கடவுள்''

மன்னனைப் பாடுவதற்கு முன்பு கடவுளை வாழ்த்திப் பிறகு, தாம் இயற்றிய பாடல்களைப் பாடுவது பாணர், புலவர் வழக்கமாயிருந்தது என்பதனை மலைபடு கடாத்திலிருந்து அறிகின்றோம்.

''அருந்திறற் கடவுள் பழிச்சிய பின்றை
விருந்தின் பாணி கழிப்பி''

என்ற வரிகள் இதனை விளக்கும். 'பொறுத்தற்கு அரிய வலியை உடைய கடவுளை முதலில் வாழ்த்தின பின்பு சென்றாற் புதிதாகப் பாடும் பாட்டுக்களைப்பாடி'' என்பர் நச்சினார்க்கினியர். இவ்வாறு கடவுளைப்பாடும் பாடல் ''தேவபாணி'' என வழங்கப்படும்

**முடிவுரை :**

இவ்வாறு இத்தொகை நூலாகிய பத்துப் பாட்டினுள் கடவுளர் தொடர்பான பல்வேறு கருத்துக்களைக் காணலாம். பழந்தமிழர் வாழ்வு, நாகரிகம் முதலியவற்றைத் தெள்ளிதின் விளக்கும் இத்தொகை நூலில் கடவுட் கொள்கை பற்றிய இச் செய்திகளைக் காணுங்கால், நம் முன்னோரின் சமய உணர்ச்சியை நாம் நன்கு உணரமுடியும். சிவன், திருமால், முருகன் முதலிய கடவுளர் வழிபாடுகள் மிக்க செம்மையுடன் எங்கும் நடைபெற்றன. அன்பு நிலையில் வழிபாடு நடந்தது. மன மொழி மெய்த் தூய்மையோடு நிகழ்த்திய இவ்வழி பாட்டினால், நல்வாழ்வும் நனிசிறந்த பண்பாடும் பெருகி வளர்ந்தது தமிழகம்.

## "வைகுந்தத்து இருப்பார்"

இறைவனின் திருவருளைக் குருவின் திருவருளாலேயே நாம் பெறுதல் இயலும். குருவின் அருளாலேயே நமக்கு இறைவனின் திருவடிகள் எளிதில் கிடைக்கப் பெறுகின்றன. இறைவனின் திருவருளாகிய பெருஞ்செல்வம், நமக்கு ஆசாரியன் அருளாலேயே எளிதில் கிடைத்தது என்று, திண்ணமாகத் தெளிந்திருப்பவர்கள், ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி, இறைவனுக்கு வழுவிலா அடிமை செய்யும் நற்பெரும்பேறுடையவர்கள் ஆவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஞானம் அநுட்டானம் என்னும் இரு திறத்தாலும், குறைவற்ற ஆசாரியனுடைய திருவருளால், திருமகள் கேள்வனான திருமாலினுடைய ஒப்பற்ற திருவடிகள், நமக்கு நெஞ்சில் உறையும் பெருஞ் செல்வங்களாகக் கிடைத்தன என்று தெளிந்திருக்குமவர்கள், ஒளிமிகுந்து விளங்குகின்ற வைகுந்தம் ஆகிய பரமபதத்திற்குச் சென்று, அங்கே பெருமாளுக்குத் தொண்டு செய்யும் சிறப்புமிக்கவர்களாக விளங்குவர்.

தப்பில் குருவருளால் தாமரையாள் நாயகன்றன்
ஒப்பில் அடிகள்நமக் குள்ளத்து-வைப்பென்று
தேறி இருப்பார்கள், தேசுபொலி வைகுந்தத்து
ஏறியிருப் பார்,பணிகட்கு ஏய்ந்து. —ஞானசாரம்

[தப்புஇல்-குறைவற்ற. ஒப்பில்-சமானம் இல்லாத, வைப்பு-செல்வம். தேறி-தெளிந்து, நம்பி. தேசு-ஒளி. பணி-தொண்டு, கைங்கரியம்.] —ஆசிரியர்.

## "கண் இல்லாதவன்காண் இறை"

நாம் செய்யும் பாவங்கள் இருவகைப்படும். அவற்றைப் பூர்வாகம், உத்தராகம் என நூல்கள் வழங்கும். இறைவனுக்கும் நமக்கும் உள்ள உறவு உரிமையை, உணர்ந்து கொள்ளுதலாகிய சம்பந்த ஞானம். தோன்றுவதற்கு முன்னே, நாம் செய்த பாவங்கள் பூர்வாகம் எனப்படும். சம்பந்த ஞானம் உதித்த பின்னர், நாம் செய்த பாவங்கள் உத்தராகம் எனப்படும். பூர்வாகம் என்னும் வினைகளைப் பற்றிக் கவலைப்படவேண்டா என்று, முன்னைய பாடல் கூறிற்று. உத்தராகங்களைப் பற்றிக் கவலை கொள்ள வேண்டா என்கிறது பின்வரும் இப்பாடல். இறைவனுக்கு 'அவிஜ்ஞாதா' என்று ஒரு பெயர் வழங்கும். 'அறியாதவன்' என்று அதற்குப் பொருள். முற்றுணர்வினன் ஆகிய இறைவனை அறியாதவன் என்று சொல்லுவது பொருந்தாது. எனினும், இறைவனை 'அவிஜ்ஞாதா' என்று சாத்திரங்கள் கூறுதற்குக் காரணம், இறைவன் முற்றுணர்வினன் ஆயினும், தன் அடியவர்களின் குற்றங்களைக் குற்றங்கள் என்று, தன் உள்ளத்தில் உட்கொள்ள மாட்டான்; அவற்றைத் தன் பெருங்கருணையினால் காணாதவன்போல் இருப்பான் என்பதேயாகும்.

வண்டு படிதுளப மார்பனிடைச் செய்தபிழை
உண்டு பலஎன் றுளந்தளரேல்!—தொண்டர்செயும்
பல்லா யிரம்பிழைகள் பார்த்திருந்தும், காணும்கண்
இல்லா தவன்காண் இறை. —ஞானசாரம்

[வண்டுபடி-வண்டுகள் மொய்க்கின்ற. துளபமார்பன்-துளசிமாலையை அணிந்த திருமால். இறை-கடவுள். கடவுள் தன் அடியவர்கள்பால் காட்டும் பெருங் கருணைத் தண்ணளியினை, இப்பாடல் மிக இனியதாக விளக்கிக் கூறுகின்றது]. —ஆசிரியர்.

# "சொற்குறுதிக்கு அப்பர் எனச்சொல்"

'முதுபெரும் புலவர்'
புரிசை திரு. சு. முருகேச முதலியார், திருவண்ணாமலை.

''கோளில் பொறியில் குணமிலவே எண் குணத்தான்
தாளை வணங்காத் தலை''

இத் திருக்குறளில் ''இல்'' என முதற்கண் வருவது பெயர்எச்சம்: இரண்டாவதாக வருவது உவம உருபு. கோள் என்ற சொல் கொள்ளுதல் என்ற பொருளை உடையது. கொள்ளுதல்-ஒன்றை அறிந்து கொள்ளுதல். மக்களுக்குள்ள பொறிகள் (கருவிகள்) ஐந்து. அவை முறையே, கண், காது, மூக்கு, வாய், உடம்பு என்பன. கண்கள் உருவத்தை அறிந்து கொள்ள வேண்டும். இல்லையேல் குருடு. காதுகள் ஓசையை அறிய வேண்டும். இல்லையேல் செவிடு. இப்படியே மற்றனவும் தாம் கொள்ள வேண்டியவற்றை (அறிந்து) கொள்ளவில்லையானால் அவையிருந்தும் இல்லாதனவாகும். அவ்வகையில் தலை அறிந்துகொள்ள வேண்டியதும் ஒன்றுளது. அதனை அதுஅறிந்து கொள்ள வில்லையானால், அத்தலை இருந்தும் இல்லாதது போலத்தான். காது கண் இல்லாதவர்களுக்குக் குருடர் செவிடர் என்று பெயரிடுவதானால், தலையில்லாதவர்களை என்னவென்று அழைப்பது?

மக்களுக்கு, அத்தகைய பெயர் வராதிருக்க என்ன செய்ய வேண்டும்? தலை எந்தப் பொருளைக் கொள்ள வேண்டுமோ, அப்பொருளை அது கொள்ள முயல வேண்டும். தலையெதை அறிந்து கொள்ளுவது? இந்த ஐம்புலன்களும் அறிந்து கொள்ளும் ஐவகைப் பொருள்களிலும் மறைந்து வைகும் ஒரு பொருளை அறிய வேண்டும். உதாரணமாக, ஒரு கரும்பை எடுத்துக் கொள்ளுவோம். கண் இல்லாத ஒருவன் அதனைத் தடவிப் பார்த்து, இது ஒரு மூங்கிற் கம்பு போலுளது, ஆனால் அது நீண்ட கணுக்களுடையது, இதன் கணுக்கள் நெருங்கி நெருங்கியுள்ளன, அவ்வளவுதான் எனக்கிதில் தெரியும் என்று விடுவான். அதனைக் காதாற் காண்பவன், தட்டிப் பார்த்துத் திண்ணென்று ஒலிக்கின்றது என்றும், மூங்கிலில் கெட்டிப்பட்ட பொருளாகத் தெரிகின்றதென்றும் கூறுவன். மூக்கோ, முகர்ந்து பார்த்து இது ஒருவகை மணமுடையது; மூங்கிலுக்கேது இம்மணமென மறுக்கும். வாய் தனக்குள்ள பற்களிலிட்டும், நாவிலிட்டும் அதுக்கிப் பார்த்துச் சுவைத்து, அப்புலன்களுக்கெல்லாம் எட்டாத சிறப்பியல்புகளை உணரக்கூடும். அது, இது மூங்கிலே அல்ல. இது மிக மென்மையானது; மேன்மையானது; யான் இதுவரையில் கண்ட இனிப்புச் சுவை எதற்குந் தாயகமாகத்தோன்றுகின்றது: என்னுமல்லவா? இப்படி கைகளாலும் கண் காதாகிய கருவிகளாலும் உணருகின்ற உணர்ச்சிகளுக் கெல்லாம் உடனிருந்து துணை செய்வதும், அப்புலன்களைக் கொண்டு அவை கண்ட ஐந்து பொருள்களையும் கண்டறிந்ததும் எந்த அறிவோ அந்த அறிவிற்கிருப்பிடம் தலை தானே?

இப்புலனைந்தால் கண்ட உயர் பொருளாகிய கரும்பை, மேலும் ஆய இத்தலையறிவு முற்படுமானால் பல அரிய பெரிய ஆற்றல்களைக் காணலாம். ஒரு கரும்புக்கழி சுமார் ஒரு ரூபாய் விலையாகுமானால், அதில் சில்லரை வியாபாரிக்குப் பத்துக்காசும், மொத்த வியாபாரிக்குப் பத்துக்காசும், சுமைக்கூலி சத்தமாக ஒரு இருபது காசும், மிகுதி அறுபது காசுகளில் பண்ணைச் செலவுக்காக முப்பது காசுகளும், பண்ணை முதல்வனுக்கு ஒரு முப்பது காசுகளும் பயனாக அமையுமெனக் கொள்ளலாம். இதற்கெல்லாம் முதன்மைப் பொருளாகிய கரும்பின் விதையை உண்டு பண்ணிய ஒரு பொருளுண்டே அதற்குப் பயனாக எத்தனை காசுகள்? ஒரு காசிற்பட்ட தூசுகூடத் தருவதில்லை யல்லவா? இப்படி ஒரு பயனையும் பெறாமலே எத்தனையோ கோடி மூலப் பொருள்களைத் தருகின்ற ஓர் உண்மைப் பொருள் உளதே?

அதைக் கடவுள் என்றோ இயற்கையென்றோ பெயரிட்டுக் கொள்ளுவோம். அதற்குள்ள செல்வச் சிறப்பு எவ்வளவினதாகும்? ஏன்? கண்ட ஒன்றை நட்டவர் தொட்டவர் சுமந்தவர் விற்றவர்களுக்கெல்லாம், பத்தும் இருபதும் முப்பதுமான காசுகள் கிடைப்பினும் கட்டுபடியில்லை என்று வருந்துகின்றார்களே, ஒன்றுமே வாங்காது எதற்கும் உயர்ந்த பொருள்களை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்ற ஒன்று எவ்வளவு செல்வமுள்ளதாக இருக்க வேண்டும்? சரி, செல்வமிருந்தால் யாருக்கும் வழங்கலாம்; வள்ளலாகலாம்;யாராலும் செய்ய முடியாத ஒன்றைச் செய்ய முடியுமா? அதற்கு அறிவல்லவா வேண்டும்? ஆகவே அப்பொருள் எவ்வளவு அறிவுள்ளதாக இருக்க வேண்டும்? அறிவும் செல்வமுமிருந்தாலும், கண்டுபிடித்த ஒன்றை ஓயாது செய்து செய்து உலகத்திற்கெல்லாம் உதவ

வேண்டுமே, அது யாராலாகும்? அப்பொருளுக்கு எவ்வளவு வலிவிருக்க வேண்டும்? வலிவிருந்து அறிவிருந்து வளமுமிருந்தாலும், தான் படைத்த பொருள்களைப் பிறருக்கு வழங்க ஒரு தயவான குணமிருக்க வேண்டாமா? அப்பொருளுக்கு எவ்வளவு தாராளம் இருக்க வேண்டும்? இனி, பரந்த உலகத்தில் நிறைந்த உயிர்களுக்கு எங்கெங்கே எவ்வெவற்றிற்கு எவ்வெப்பொருள் தேவையானதென அறிந்தல்லவோ உதவ வேண்டும்? இது எளிதா? அப்பொருள்களை எல்லாம் ஒருங்கே காண நிற்கும் காட்சி ஆற்றல்தான் எவ்வளவு?

எல்லாம் சரி. ஆயிரம் இருப்புள்ளஒருவன் பதினாயிரம் தேவையுள்ளவனுக்கு உதவ முடியுமா? உலகருக்கெல்லாம் இன்பமளிக்கும் ஒரு பொருள் எவ்வளவு இன்பமயமானதாக இருக்கும்? உலகம் எத்தனையோ வகைப்பட்ட உடலமைப்பு உளவமைப்புகளைக் கொண்டதாக இலங்குகின்றதோ எல்லாவற்றிற்கும் பொதுவான அருள் வரவேண்டுமானால் அப்பொருள் ஒன்றிலும் சேராததாயிருக்க வேண்டுமல்லவா? அதன் தனித் தன்மைதான் எவ்வளவு சிறந்தது? இப்படி எதற்கும் அருள் செய்யும் ஆற்றலுள்ள ஒரு பொருள் ஒருக்கால் முடிந்துவிடுமானால் உலகத்திற்கு ஆதரவுமிருக்காது, அனைத்தையும் ஆக்கிக் காக்கும் அப்பொருளுக்கு மகிழ்ச்சியுமிருக்க முடியாதே! அப்பொருள் அழிவற்றதாகவல்லவா இருக்க வேண்டும்? என்ற எண்ணங்கள் ஒரு கரும்பை ஆயப்புகுந்த அத்தலை யறிவிற்கு முன்வந்து நிற்குமல்லவா?

''கானமே மருவும் விலங்கினுங்கடையேன் கற்பவை கற்றிலேன் விடய ஞானமே உடையேன் அறிஞரைக் காணின் நாணி லேன் உய்யும்நாளுளதோ'' என்றனர் ஒரு பெரியவர். ஒன்றுந் தெரியாத முழுமகன், யாருக்கும் வணங்க மாட்டான். கொஞ்சம் தெரிந்த ஒரு கலைச் செல்வன், தன்னைவிட மிகுதியாகத் தெரிந்தவன் திறத்தை நோக்கும்பொழுது, தலை குனியத்தானே செய்வான்? இங்கே மேற்கூறிய அளவற்ற குணங்களையெல்லாம், துறைதொறுங் கண்ட அறிவிற்கிடமான தலையென்ன செய்யும்? தானே வணங்குமல்லவா?

இக் கருத்தைத் தொடக்கத்திலேயே உலக முதல் ஒன்றுளது எனக் கூறிய பெருநூல், அப்பெரு முதலின் திறந்தெரியாத கல்வி கல்வியல்ல என்பதனைத் தெளிவிக்கக் ''கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்'' எனக் கூறிற்று. அப்படியெடுப்பில் கூறிய அந்நூல் ''நூலறிவு பேசி நுழைவிலாதாரைத் திருத்த வேண்டி, வாலறிவனைக் காணுந் தலை வணங்கும்'' எனத் தொடுப்பில் உரைத்தது. இவ்வரிய நூல் உரை வடிவத்தில் மிகப் பல உரைகளைப் பெற்றிலங்குகின்றது. அவ்வுரைகளுக்கெல்லாம் மேலாய உரையைப் பாடவல்ல பரமகுருபரர் களும் செய்திருக்கின்றார்கள். அருள்வடிவமான அவ்உண்மையுள்ள உரைகளிலொன்றே நமது அப்பர் பெருமானருள் மொழியாகிய திருஅங்கமாலை.

பொதுநூல் ''கோளில் பொறிகளில் எண்குணத்தான் தாளை வணங்காத் தலை குணமில'' எனக் கூறி விடுத்தது. அவ்வெண்குணத்தான் யாவன் என விளக்கம் வேண்டாமா?

பொதுநூல் தலையென்று விடுத்ததிலிருந்து அந்தாதித்தொடையாகத் தமது மொழி கேட்கும் அன்பர்களை எண்குணத்தான் தாளை வணங்குந் தலையினராக்குகின்றனர், அருள்மொழி அரசர்.

''தலையே நீ வணங்காய்
தலைமாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேரும்
தலைவனைத்-தலையே நீ வணங்காய்''

சிவபெருமான் பிரமன் தலையோட்டைக் காட்டிப் பிச்சை கேட்கின்றனனாம். ஏன் அப்பொழுதுதான் மக்கள் பரிந்து இடுவார்களாம். எப்படி? உங்களை ஆக்கிய அயனுக்கு ஆயுள் முடிந்துவிட்டது பாருங்கள், நீங்கள் நிலைத்திருப்பது எங்கே? ஆதலின் இப்பொழுதே அறஞ்செய்து நல்வினையாளராகுமின்கள் என.

''பிரியா அறஞ்செய்யப் பிரமன் சிரங்காட்டிப் பிச்சைய தேற்றான் பிரமன் தலையோட்டில்'' (திருமூலர்). இக் குறிப்பு இறைவனின் முடிவின்மையைக் காட்டுகின்றது.

''கண்காள் காண்மின்களோ கடல்
நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பிரான் தன்னைக்
கண்காள் காண்மின்களோ''

உலகத்தவர் துன்பமகன்று இன்பவசத்தராக இறைவன் நஞ்சுண்டான். மருந்துமரம் போலத் தான் கெட்டு உலகை வாழ்விக்க வரும் தெளிந்த சான்றவர் போலல்லன் அவன். கடுவுண்டதனால் தானும் கெடாமல் இன்ப நடனமும் ஆடுகின்றனன் எண்திசையும் அறிய. இது இறைவன் இன்பமயத்தைக் குறிக்கின்றது.

''செவிகாள் கேண்மின்களோ,
சிவன்எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப் பிரான்திறம் எப்போதும்
செவிகாள் கேண்மின்களோ''

கண்கள் அறிவுபெற வேண்டுமானால் ஒளிவேண்டும். இரவியொளி இரவில் துணை செய்யாது; திங்களொளி பகலில் துணை செய்யாது; தீயினொளி இருமையிலும் அகத்தும் புறத்தும் துணைதரும். எம்மையினும் உயிருடனிருந்து உணர்த்தி உதவ இறைவன் எரிவண்ணனானான் என்ற குறிப்பிது.

''மூக்கே நீ முரலாய்
முதுகாடுறை முக்கண்ணனை
வாக்கே நோக்கிய
மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய்''

அறிந்து அறிவிக்கும் திறத்தைக் குறித்த பின், மக்கள் தாம் அறிந்ததை வெளியிட வேண்டுமானால், இனிய ஒலி வேண்டுமாதலால் அதனை அருளுகின்ற அம்மையுடனாய குறிப் பினையும் இங்கு விளக்கியபடி. ''வாக்கும் அர்த்தமுமாகிய பார்வதி பரமேசுவரரைப் போற்றுகின்றேன்'' என்பர் காளிதாசர்.

''வாயே வாழ்த்துகண்டாய்
மதயானையுரி போர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்
பிரான்தன்னை வாயே வாழ்த்து
கண்டாய்''

காட்டில் ஆடுபவனல்லன்; காட்டு அகத் தில் ஆடும் பிரான். இக் காட்டு அகம் ஆலங் காட்டு இரத்தினமன்றம். இது பேய்கள் அலையும் காடல்ல. ஒரே ஒரு பேய். அதுவும் நித்திய தத்துவமாய் வாழும் பேய்; இவ்வம்மை யின் திருவாயே முதல் முதல் இறைவனை வாழ்த்தி, மூத்த திருப்பதிகம் ஓதியதால், மற்றவர் வாழ்த்தும் வாய்களுக்கு அது வழி காட்டியாயிற்று. மதயானை உரி போர்த்தல் இறைவன் பேராற்றலை விளக்கிற்று.

''கைகாள் கூப்பித்தொழீர்!
கடிமாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரையார்த்த
பரமனைக் கைகாள் கூப்பித்தொழீர்''

பார்வதியாரை மணக்கக் கயிலை யிலிருந்து புறப்படும்போது, இறைவனது வலப்புறத் திருக்கரமாதியவற்றிற்குப் பிரம தேவன் அணிகலங்களை அணித்தனன். இடப் புற அவயவங்களை இறைவன் நோக்க முன்பு அங்குள்ள பைந்நாகப்பணிகளே அழகிய பணி யணிகளாயின. பொன்னணிகளைவிட மணி யணிகள் மதிப்புள்ளன. அவற்றுள் மாணிக் கக் கற்பணிகள் அளவற்ற மதிப்பின. இறை வன் மேனியெல்லாம் பைந்நாகப்பணி. அவ னணி எவ்வகை? அவை பைவாய்ப் பாம்புகள். அப் பைகள் நிறைய மாணிக்கங்கள். இக்குறிப்பு அவன் அளவில் செல்வந்தன் என்பதை நன்கினிது உணர்த்தும்.

''ஆக்கையால் பயனென்
அரன்கோயில் வலம்வந்து
பூக்கையா லட்டிப் போற்றி
என்னாதவிவ் ஆக்கையாற் பயன்என்?''

கோயில் அரசமாளிகை. அரன்கோயில், ஆள்பவரை- ஆண்டவரை - ஆளப்போகின்ற வரை யெல்லாம் ஆண்டு நிற்கும் ஆண்டவன் உறைவிடம். அது கோயில்; அரன் கோயில். இக்குறிப்பு நிகரிலாணையன் என்பதாகும்.

''கால்களாற் பயனென்
கறைக்கண்டன் உறைகோயில்
கோலக் கோபுரக் கோகரணம்
சூழாக் கால்களாற் பயன்என்?''

திருக்கோகரணம் இராவணன் வலியை உணர்த்திய தலம். இராவணன் செய்தி நாவேந்தர் நாடொறும் பாடுவது.

''தேடிக் கண்டுகொண்டேன்
திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை
என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்''

இக்குறிப்பு இறைவன் எங்குமுறைவதனை யும் ஆயினும் அவன் அன்பருக்கு உள்ளிருந்து உணர்த்துவதனையும் குறித்தது.

''இறுமாந் திருப்பன்கொலோ ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமான் ஏந்திதன் சேவடிக் கீழ்ச்
சென்றங் கிறுமாந்திருப்பன்கொலோ?''

ஆணவத்தோடு அத்துவிதமாக உள்ள செம்மாப்பு நிலையற்றது. மெய்ஞ்ஞானத்தா னுவினோடு அத்துவிதமாகும் செம்மாப்பு நிலைபேறுடையது. தலைதலையா நின்று தேடும் மெய்ப்பொருளினால் இப்பெரும் பேறுற்றவ ராகலாம் என்று அருளுகின்றார் அப்பர்பெருமான்.

இப்பெருமானுடைய "பண்சுமந்த பாடல்" திறத்துத் தோய்ந்து தோய்ந்து மகிழும் நாவ லூர் நம்பிகள்,

''கண்ணா ய் ஏழுலகும்
கருத்தாய அருத்தமுமாய்ப்
பண்ணாரின் தமிழாய்ப்
பரம்ஆய பரஞ்சுடரே''

''மண்ணார் பூம்பொழில்சூழ்
மழபாடியுள் மாணிக்கமே
அண்ணா நின்னையல்லால்
இனி யாரை நினைக்கேனே!

என்றெல்லாம் உரைத்தருளும் ஒன்றிற்கொன் றான விளக்கங்களையெல்லாம் நினைந்துருகி, திருமுறைத் தொண்டுகளைப் பரவுவோமாக.

வாக்கிற் கருணகிரி; வாதவூ ரர்கனிவில்;
தாக்கில் திருஞான சம்பந்தர்;—நோக்கிற்கு
நற்கீர தேவர்; நயத்திற்குச் சுந்தரனுர்;
சொற்குறுதிக்கு அப்பர்எனச் சொல்''

—தனிப்பாடல்

# உயர்வுபெற வழி

"அருண் மொழியரசு"

திருமுருக. கிருபாநந்த வாரியார் சுவாமிகள்.

ஐந்து கண்டங்களிலும் மக்கள் வாழுகின்றார்கள். மக்கள் மனங்கள் எப்போதுமே மாறுபட்டவையாகவே அமைந்திருக்கின்றன. ஒருவர் இனிப்பை விரும்புகின்றார். மற்றொருவர் காரத்தை விரும்புகின்றார். ஒருவர் பெரிய புராணத்தை விரும்புகின்றார். மற்றொருவர் கம்பராமாயணத்தை விரும்புகின்றார்.

ஒருவர் கடற்காட்சியை ரசிக்கின்றார். மற்றொருவர் படக்காட்சியை ரசிக்கின்றார். ஒருவர் சொல்நயத்தை உவக்கின்றார். மற்றொருவர் பொருள் நயத்தை உவக்கின்றார். ஒருவர் பாடலில் இன்புறுகின்றார். மற்றொருவர் ஆடலில் இன்புறுகின்றார். ஒருவர் உடுப்பதையும், மற்றொருவர் விலாப்புடைக்க உண்பதையும், ஒருவர் உறங்குவதையும், ஒருவர் உலாவுவதையும் விரும்புகின்கிறனர். இங்ஙனம் மனிதருடைய மனம் மாறுபட்ட விருப்பங்களை உடையன என்பதை அனுபவக்காட்சியால் அறிகின்றோம்.

ஆனால் ஒரு தன்மையில் மட்டும் எல்லோருடைய மனங்களும் ஒன்று படுகின்றன. அது எந்த ஒன்று? என்ற வினா எழுகின்றது. உயர்வு அடையவேண்டும் என்ற ஒன்றில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாதுதானே? நான் தாழ்வு அடைய வேண்டும் என்று எவன் நினைப்பான். உத்தியோகத்தில் உயர்வு வேண்டும், பட்டம் பதவிகளில் உயர்வு வேண்டும், புகழ் புண்ணியம் பெருமை இவைகளில் உயர்வு வேண்டும் என்றுதான் எல்லாரும் நினைக்கின்றார்கள்.

ஆனால் யாராவது எண்ணியபடி உயர்கின்றார்களா? இல்லை. இதற்கு என்ன காரணம்? அந்தக் காரணத்தைக் கண்டுபிடிப்பது அறிவு உடையவனுடைய முதற் கடமையன்றோ? உயர்வு பெறவேண்டும் என்று எண்ணுகின்றார்களேயன்றி உயர்வுக்கு மூலகாரணம் எது என்றும், அதனை அடைகின்ற வழிவகை என்ன என்றும் சிந்திப்பவர்கள் மிகக் குறைவு. செல்வத்தை உயர்த்திக் கொண்டால் உயர்வு பெறலாம் என்று பலர் கருதுகின்றார்கள். செல்வம் மட்டும் உயர்வுக்குக் காரணம் ஆவதில்லை. செல்வம் கீழ் மக்களிடமும் நிறைந்திருகின்றது. செல்வம் படைத்தவனைச் சில சமயம் மனைவி கூட மதிப்பது இல்லை. மற்றவர்களும் மதிப்பதுபோல், மேல் வாரியாக நடிக்கின்றார்கள். உன்னைப்போல் உண்டா என்று உதடு மட்டும் உரைக்கின்றது. "பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள" என்கின்றார் திருவள்ளுவர். "சிறியரே மதிக்கும் இந்தச் செல்வம்" என்பது குசேல உபாக்கியானம். குலமும் உயர்வுக்குக் காரணம் ஆவதில்லை.

கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதராகும்மே

என்பது நறுந்தொகை. இனி கல்வி உயர்வுக்குக் காரணம் ஆகுமா? என்று சிந்திப்போம்

"கற்றதனால் ஆயபயன் என்கொல்"

என்கின்றார் பொய்யில் புலவர். "கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்" என்கின்றார் மாணிக்கவாசகனார்.

"கல்லாதவர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றும் அறிவில்லாத என்
கர்மத்தை என் சொல்கேன்"

என்கின்றார் தாயுமான சுவாமிகள்.

கல்வியும் கல்வியினால் வருகின்ற அறிவும் கத்தியும் கத்தியின் கூர்மையும் போன்றவை. கூர்மையான கத்தி மாம்பழம் நறுக்கவும்ஆகும்; பிறருடைய விரலை நறுக்கவும் ஆகும். சில சமயங்களில் அறிவு பிறருக்குத் தீங்குபுரியவும் முற்படுகின்றது.

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

என்று கூறிய திருவள்ளுவர்,

அறிவினான் ஆகுவ துண்டோ? பிறிதின்நோய்
தன்னோய் போல் போற்றாக் கடை

என்று கூறுகின்றார். செடி கொடிகளுக்குவரும் துன்பத்தையும் தனக்கு வந்ததாக எண்ணி இரங்கி, அத்துன்பத்தை முடிந்த அளவில்நீக்க முடியாத ஒருவனுக்கு அறிவிருந்து என்ன பயன்? என்று வினாவுகின்றார். எனவே வெறும் கல்வியும் அறிவு மட்டும் உயர்வுக்கு வழியாகாமை பெறப்பட்டது.

கல்வியும் அறிவும் இந்தப் பாடுபடுமானால் பிற உத்யோகம் அழகு பருமை உயரம் இவைகளைப் பற்றிக் கூற வேண்டுமோ? நன்கு சிந்

த்துப் பார்த்தால் உயர்வுக்கு ஒரே ஒரு காரணம் உண்டு. அது உள்ளத்தில் விளைகின்ற பண்பாடு. குளத்தில் உள்ள தாமரை உயர வேண்டுமானால் குளத்தில் உள்ள நீர் உயர வேண்டும். அதுபோல் மனிதன் உயரவேண்டுமானால் உள்ளம் உயர வேண்டும். இந்த அரிய கருத்தை நமக்கு உபதேசித்த பெரியவர் யார்? உலகம் போற்றும் உத்தமர், திருவள்ளுவர்.

''வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம் உள்ளத் தனையது உயர்வு

சுருக்கமாக-விளக்கமாக, யாருக்கும் விளங்குகின்ற முறையில் ஒரு உவமை கூறி உயர்வுக்கு வழியுரைக்கின்றார். இனி உள்ளம் உயர்வது என்றால் என்ன என்று சிந்திப்போம்.

எல்லா மக்களும், ஆடு மாடு புழு எறும்பு புல் செடிமரம் ஆகிய அனைத்தும் வாழட்டும் என்று எண்ணி, அவைகளுக்கு வரும் இடையூறுகளை ஒல்லும் வகையால் நீக்கி, நீக்கினோம் என்ற எண்ணமும் இன்றி, அன்பும் அருளும் களிநடம் புரிகின்ற உள்ளம்தான் உயர்ந்த உள்ளம்.

அநேகருக்கு உள்ளம் குவிந்திருக்கின்றது. தான் மட்டும் வாழவேண்டும்; பிறர் வாழக் கூடாது, பிறர் உயர்ச்சியடையக்கூடாது என்று எண்ணுகின்ற உள்ளம் குவிந்த உள்ளம். சுருங்கிய உள்ளம் படைத்த இவர்கள் பிறவிப்பெருங் கடலில் கிடந்து துன்புறுவார்கள். எல்லாரும்-எல்லாம் (சராசரங்கள்) வாழவேண்டும் என்று சொல்லாலும் செயலாலும் சிந்தனையாலும் உழைக்கின்ற மலர்ந்த உள்ளம் உடைய உத்தமர்கள் பிறவிப் பெருங்கடலைக் கடந்து முத்திக் கரை சேர்ந்து இன்புறுவார்கள்.

சென்னைக் கடல் துறைமுகத்தில் பத்துப் பாய்மரக் கப்பல்கள் இருக்கின்றன. ஒரு கப்பலில் மட்டும் பாய் விரிந்திருக்கின்றது. ஒன்பது கப்பல்களில் உள்ள பாய்கள் சுருண்டிருக்கின்றன. மேல் காற்று வீசுகின்றது. விரிந்த பாய் மூலம் காற்றை வாங்கிக் கொண்டு அக்கப்பல் சுகமாகக் கடலில் அன்னப்பறவைபோல் அழகாக அசைந்து பிரயாணம் புரிகின்றது.

சுருங்கியுள்ள பாய்களில் காற்றுப் படுகின்றது. காற்றை வாங்கிக் கொள்ளும் தன்மையின்மையால் ஒன்பது கப்பல்களும் கடற்கரையில் நிற்கின்றன. இது யார்குற்றம்? காற்றின் குற்றமா? சுருங்கிய பாயின் குற்றமா? சிந்தியுங்கள். ஒன்பது கப்பல்களும் ஒன்றுகூடி 'காற்று ஒழிக; காற்று ஒழிக' என்று முழக்கம் புரிகின்றன. காற்று காய்தல் உவத்தல் இன்றி ஒன்றுபோல் வீசுகின்றது. எனினும் சுருங்கிய பாய் காற்றை வாங்காது பிரயாணம் புரியாது ஏங்கி நிற்கின்றன. இதுபோல் திருவருள் காற்று ஒன்றுபோல் வீசுகின்றது. வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் திருவருளுக்குக் கிடையாது.

முன்கூறியபடி விரிந்த உள்ளத்தில் மட்டும் திருவருள் மாருதம் படிந்து, உள்ளம் மலரப் பெற்ற மகான்கள் சுகமாகப் பவசாகரத்தைக் கடக்கின்றார்கள். உள்ளம் மலராத பாவிகள் பிறவிக்கடலில் அழுந்தி அல்லல் படுகின்றார்கள். இந்த உவமையை நன்கு சிந்தியுங்கள். உள்ளம் விரிவதனால் எய்தும் பலன் விளங்கும்.

நால்வர்களும், ஆழ்வார்களும், ஏசுநாதரும், நபிநாயகமும், புத்தரும், பட்டினத்தாரும், அருணகிரிநாதரும், தாயுமானவரும், இராமலிங்க அடிகளும், பாம்பன் சுவாமிகளும் மலர்ந்த உள்ளம் படைத்தவர்கள்.

ஆதலால் அன்பர்கள் அனைவரும் இதனை உற்று நோக்கி உன்னி உணர்ந்து உள்ளத்தை மலரச் செய்து உயர்வுபெறுக. உயர்வுக்கு வழி உள்ளம் உயருதல். அனைத்தும் வாழ நினைக்கின்ற உள்ளம் உயர்ந்த உள்ளம். இதுவே வள்ளுவர் காட்டிய வழி. வாழ்க வள்ளுவர் நெறி.

---

## சங்க நூல்களின் சிறப்பு

இயற்கைஎழிற் கின்புறுதல், வாழ்வியலைத் தேர்தல்
மயற்கைஅறும் மெய்யுணர்வு வானில்-உயர்ச்சியுறல்,
நல்லொழுக்கில் நின்றருளை நாடல், உடையவர்கட்கு
இல்லை, சங்க நூல்கள்போல் இன்பு! (1)

கருத்தெளிமை, நல்இயற்கைக் காட்சி நுணுக்கம்,
திருத்தமிகு வாழ்க்கைத் திறங்கள், - பொருத்தமிகு
தூய கலைமாட்சி, தொல்வரலாற் றுக்குறிப்பும்,
மேவியொளிர்ம் சங்கநூல் மிக்கு! (2)

—ந. ரா. முருகவேள்.

# "திருக்குறளில் முரணா?"

டாக்டர் திரு மொ. அ. துரைஅரங்கனார், M.A., Ph.D., மதுரை.

முன்னுரை :

திருவள்ளுவர் யாத்த திருக்குறள் உலகப் பொதுமறை என்று யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். இவ்வாறு கூறும்பொழுது சிலர், ''மறையெனின் யாதொரு குற்றமும் இல்லாதிருத்தல் வேண்டுமே! முன்னுக்குப்பின் முரணாகச் சில கருத்துக்கள் திருக்குறளில் காணப்படுகின்றனவே! முன்னுக்குப்பின் முரணுதலாகிய குற்றமுள்ள திருக்குறளை, மறை என்று எவ்வாறு ஏற்க முடியும்? என்று தடை எழுப்புகின்றனர்.

உண்மையில் நோக்குங்கால் முன்னுக்குப் பின் முரணாகத் திருவள்ளுவர் யாண்டும் கூற வேயில்லை என்பதுஉணரலாம். அங்ஙனம் உணர்வதற்கு மரபுவழிப்பயிற்சியும், நுண்மாண் நுழைபுலமும் இன்றியமையாதன. எனவே அவையில்லாமல் நம் சிற்றறிவையே துணையாகக் கொண்டு திருக்குறளில் முன்னுக்குப்பின் முரணாகக் கருத்துக்கள் உள்ளன என்பாரைத் தெருட்டுதல் கருதி இவ்வாராய்ச்சிக் கட்டுரை எழுதுவதாயிற்று.

ஊழ்:

திருவள்ளுவர் அறத்துப் பாலினிறுதியில் அமைத்துள்ள 'ஊழ்' என்னும் அதிகாரத்தின் இறுதியில்,

''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்''

என்று கூறி அவ்வதிகாரத்தை முடிக்கிறார். ஊழதிகாரத்தில் இவ்வாறு கூறிய திருவள்ளுவர் 'ஆள்வினையுடைமை' என்ற அதிகாரத்தின் இறுதியில்,

''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்றுபவர்''

என்று கூறி அவ்வதிகாரத்தை முடிக்கின்றார். இவ்விரண்டு குறள்களையும் நுனிப்புல் மேய்வதாக ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவை தம்முள் ஒன்றற்கொன்று முரணுதலாகவே தோன்றும். ஆனால் உண்மை யாது?

முதலில் ஊழ் என்பது யாது என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். ஊழ் என்பதைப் பரிமேலழகர் உணர்த்தப் புகுந்து, அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைவதற்கு ஏதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், விதி என்பன ஒரு பொருட் கிளவி'' என்று கூறியிருத்தல் ஈண்டு நினைவு கூர்தற்கு உரியது.

கடந்த பிறப்புக்களுள் ஒருவன் செய்த வினைகளின் பயன் ஊழ்த்து அல்லது முதிர்ந்து அவனை வந்தடைவதே ஊழ் எனப்படும். சஞ்சிதம் பிராரப்தம் ஆகாமியம் என மூன்றாக வினைப்பயன்களை வழங்குவர் வடநூலார். கடந்த பிறப்புக்கள் பலவற்றுள் செய்த வினைகளின் பயன், மலைபோல் குவிந்திருப்பதே சஞ்சிதம் எனப்படும். இதைப் பழவினைப் பயன் எனலாம். அதிலிருந்து இப் பிறப்பில் நுகர்தற்கு என மொண்டுகொண்ட வினைப் பயன்பிராரப்தம்ஆகும். இதனை நுகர்வினைப் பயன் எனலாம். இப்பிறப்பில் புதுவதாகச்செய்யும் வினை இனிமேல் பயன்தர நிற்பது 'ஆகாமியம் ஆகும். இதனை வருவினைப்பயன் அல்லது எதிர்வினைப்பயன் எனலாம்.

எடுத்த இப்பிறப்பில் நுகர்தற்கு என ஒருவனுக்கு அமைந்துவிட்ட வினைப்பயன் எவ்வாற்றாலும் அவனை நுகரவே செய்யும். ஊட்டாமல் ஊழ்வினை கழியவே கழியாது. ஆகூழ் என்றும் போகூழ் என்றும் ஊழ்இரு வகையாக வழங்கப்படும். ஆகூழால் சோம்பலின்மை, அறிவுடைமை, மறதியின்மை, செல்வமுடைமை முதலியன வெல்லாம் உண்டாம். இவற்றை நுகர்பவர் இன்பவுணர்ச்சி பெறுவராதலின் நீக்கவோ விடவோ விரும்பார். போகூழால் மடியும் (சோம்பலும்), அறிவின்மையும், மறதியும், வறுமையும் உண்டாம். இவற்றை நுகர்பவர் துன்பவுணர்ச்சியுறுவராதலின், நீக்கவோ விடவோ விரும்புவர்; முயல்வர். இந்த நுகர்ச்சிகளை முன்னிட்டுக் கொண்டு திருவள்ளுவர் ஒரு நுட்பமான கேள்வியைக் கேட்கின்றார். அஃது யாதோவெனின்,

''நன்றாங்கால் நல்லவாக் காண்பவ ரன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்''

என்பது இதற்கு விளக்கம் கூற வந்த பரிமேலழகர், ''தாமே முன்செய்து கொண்டமையாலும், ஊட்டாது கழியாமையாலும் இரண்டும் இயைந்து அனுபவிக்கற்பால; அவற்றுள் ஒன்றற்கு இயைந்து அனுபவித்து, ஏனையதற்கு அது செய்யாது வருந்துதல் அறிவன்றென்பதாம்'' என்று கூறி யிருத்தலை நினைவில் நன்கு பதித்துக் கொண்டால், ஊழையும் உப்பக்கம் காண்பர் என்று ஆள்வினையுடைமை என்ற அதிகாரத்தில் கூறப்பட்ட குறளுக்கு முரண்பாடில்லாத கருத்தை எங்ஙனம் கொள்ள வேண்டும் என்பதற்குத் திருவள்ளுவர் இக் குறளை ஈண்டே அடிப்படையாகக் கூறியிருப்பதை நாம் நன்குணர்ந்து கொள்ளலாம்.

ஊழைப்பற்றிய எல்லாக் கருத்துக்களையும் எடுத்தோதிய திருவள்ளுவர், அதன் ஊட்டாது கழியாத ஆற்றலை ஊழதிகாரத்தின் இறுதிக் குறளால்,

''ஊழிற் பெருவலியாவுள; மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்''

என்று அழுத்தம் திருத்தமாக உணர்த்திவிட்டார். இதற்குப் பரிமேலழகர் கூறும் உரை, போற்றுதற்கு உரியது. ''தன்னை விலக்குதற் பொருட்டுத் தனக்கு மறுதலையாவதோர் உபாயத்தைச் சூழினும், தான் அவ் உபாயமேயானும் பிறிதொன்றானும் வழியாக வந்து அச் சூழ்ச்சியின் முற்பட்டு நிற்கும். அதனால் ஊழ்போல் மிக்க வலியுடையன யாவையுள'' என்பது அவருரை.

**ஆள்வினையுடைமை :**

ஊழைப்பற்றி இதுகாறும் கூறியவாற்றால் ஆகூழ் போகூழ் என இருவகையாக நுகர்தற்கமைந்த வினைப்பயனை நுகராமல் ஒருவன் கழித்தல் ஒல்லாது என்ற உண்மை தெளியப்படும். இஃது இங்ஙனமாகவும், ஆள்வினையுடைமை என்னும் அதிகார இறுதியில்,

''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்''

என்று கூறியிருக்கும் குறள், எவர்க்கும் முதலில் சிறிது திகைப்பையே உண்டாக்கிவிடும். முன் கூறிய, ''ஊழிற் பெருவலியாவுள'' எனத் தொடங்கும் குறளுக்கு இக்குறள் முரணானதாகவே தோன்றும்.

இதற்குப் பரிமேலழகர் கூறியுள்ள உரையை முதற்கண் நோக்குவோம். அவ்வுரை, ''பயனை விலக்குவதாகிய ஊழினையும் புறங்காண்பர், அவ்விலக்கிற்கு இளையாது வினையைத் தாழ்வற முயல்வார்'' என்பதாகும்.

''ஊழ் ஒரு காலாக இரு காலாகவல்லது விலக்க லாகாமையிற், பலகால் முயல்வார் பயனெய் துவரென்பார், உப்பக்கம் காண்பார் என்றார்''

என்று மேலும் அவர் விளக்கியுள்ளார்.

இக்குறளில், 'உப்பக்கம் காண்பர்' என்ற தொடர் திருவள்ளுவரால் விழிப்புடன் கையாளப்பட்டிருத்தல் ஊன்றி நோக்குதற்கு உரியதாகும்.

ஊழை அழித் தொழிப்பர் என்பது வேறு; உப்பக்கம் காண்பர் அல்லது புறங்காண்பர் என்பது வேறு.

போரில் எதிர்த்த பகைவரை அழிப்பது வேறு; புறங்காண்பது வேறு; அழித்த பகைவரால் நற்பயனோ அற்பயனோ ஏற்படாது. புறங்காணப்பட்ட பகைவரால், அப்பொழுது நற்பயனோ அற்பயனோ நேராதென்றாலும், பின்னொருகால் அவற்றுளொன்று நேரலாம். ஆனால், அப்பொழுது அவர் அடங்கியொழுகுவராதலின், அவரால் நற்பயனோ அற்பயனோ அப்பொழுது நேராது என்று கொள்ளுவது பொருத்தமேயன்றோ! இவ்வேறுபாட்டையுணர வல்லவர், 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்று கூறப்பட்ட கருத்து; 'ஊழிற் பெருவலி யாவுள' என்ற கருத்திற்கு முரண்பட்டதன்று என்பதைத் தெளிய உணரலாம்.

நுண்ணுணர்வினர்க்கு இதுகாறுங் கூறியதே முரண்பாட்டுக் கருத்தை நீக்கிவிடும். மற்றவர்களுக்கு மேலும் சிறிது விளக்கம் தேவைப்படும். ஊழ் ஊட்டாது கழியாது. அஃது அதன் இயற்கை. எனவே அதனை யாராலும் நுகராமல் ஒழிக்கவே முடியாது என்பது தேற்றம். இறைவன், வினையின் நீங்கியவனாதலால் அவனுக்கு வினைப்பயனாம் ஊழ் என்பது இல்லை.

என்றாலும், புராண வழக்கில், செருக்கு மீதூர்ந்த நான்முகனுடைய ஒரு தலையைச் சிவபெருமான் கொய்த தீவினையால், அவனுக்கு அந்தணனைக் கொன்ற பாவம் ஏற்பட்டதென்றும், அதனால், கழுவாய் கருதி அத்தலையோட்டில் பலகாலம் பிச்சையெடுத்துத்திரிய வேண்டி வந்ததென்றும், அதன்பிறகே அவன் பாவத்தினின்றும் விடுதலை பெற்றான் என்றும் ஒரு செய்தியுண்டு. இஃது ஊழானது யாராயிருப்பினும் ஊட்டாது கழியாதென்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாம். இறைவனே இதற்கு விலக்கல்லன் என்றபின் மற்றவர்களைப் பற்றிக் கூறுவானேன்?

அவ்வாறாயின், ஊழ் பெருவலி உளதெனின், அதனைப் புறங்காணல் என்பது எவ்வாறு பொருந்தும்?

மெய்ந்நூல்களை ஆராய்ந்தால். அவற்றின் பிழிவாக மூன்று உண்மைகளை நாம் உணரலாம். அவை யாவை? இறைவன் ஒருவன் உளன். அவன் எல்லா ஆற்றலும் உடையவன். அவனை வேண்டினால் வேண்டியாங்கு எய்தலாம். ஈதோருண்மை. பழவினைப் பயனுள் இப்பிறப்பில் நுகர்தற்கென அமைந்த ஊழ் என்பதொன்றுண்டு. அது தன்னைச் செய்தவனை ஊட்டாது கழியாது. ஈதோருண்மை. மக்களுயிர்க்கு முயற்சி என்பது இயல்பாகஅமைந்த ஒன்று. இயல்பூக்கமாக ஈது மக்களைத் தொழிலில் ஈடுபடுத்துவது. கை கால்கள் முதலிய

உறுப்புகளைப் பெற்ற மக்கள் அவற்றைப் பயன்படுத்தாமல் ஒரு நொடிப் பொழுதேனும் இருத்தல் இயலாது'' ''யாரும் ஒரு நொடிப் பொழுதும் தொழிலாற்றாது இருத்தல் இய லாது'' என்பது பகவத்கீதை. ஈதோருண்மை. மக்களுக்கு இயல்பூக்கமாக உள்ள முயற்சி வேறு என்பதையும் ஆகூழ் காரணமாக ஏற் படும் முயற்சிவேறு என்பதையும் ஈண்டு உணர் தல் வேண்டும்.

இறைவனை வேண்டினால் வேண்டியாங் குப் பெறலாம் என்ற உண்மையில், ஈடுபாடும் நம்பிக்கையும் உடையவர் அவனை வேண்டி ஊழைப்புறங் காணலாமன்றோ! பதினாறாம் ஆண்டில் கூற்றுவனுக்கு ஆளாக அமைந்த ஊழ் பெற்ற மார்க்கண்டேயன், இறைவனிடம் ஈடு பட்டுக் கூற்றத்தின் பிடியிலிருந்து தப்பியுய்ந் தான் என்பது புராணங்களில் கண்ட உண்மை. நம்பிக்கையும் உண்மை ஈடுபாடும் உடையவர் இந்த நெறியைக் கடைப்பிடிக்கலாம். ஆனால் இக்கால மக்கள் இதைப் பொருட்படுத்தார்.

அடுத்தபடி, ஊழைப் புறங்காண்பதற்கு உறுதுணை ஆவது மக்களுக்கு இயல்பாக அமைந்த முயற்சியேயாம். ஊழ், ஊட்டுவதற்கு வரத்தான் செய்யும். அதைப் பொறுமையோடு உண்டு, அமைதியாக இருத்தல், மக்கள் தம் இயல்பான முயற்சியினால் ஒல்லுவதேயாகும். ஆகூழால் நல்லது வரினும் அதனால் மகிழ்ச்சி மீதூராதும், போகூழால் தீயதுவரினும் அத னால் வருத்தம் மீதூராதும், ஒப்பக் கோடல் மக்கள் முயற்சியால் ஆவதேயாகும். இக்கருத் தைத்தான் ஊழ் என்ற அதிகாரத்திலேயே 'நன்றாங்கால் நல்லவாக் காண்பவர், அன்றாங் கால் அல்லற்படுவதெவன்? என்ற குறளால், திருவள்ளுவர் நுட்பமாக ஊழைப் புறங்காணும் கருவியாகக் கூறிப் போந்தார்.

உலகியல் நிகழ்ச்சியில் இதற்கு ஒரு எடுத் துக் காட்டுத் தரலாம். கல்லூரிப் படிப்பை முற்ற முடித்த ஒருவன் வேலைக்கு மனுச்செய் கிறான். ஊழ் காரணமாக அவனுக்கு நீண்ட காலமாகப் பயனொன்றும் ஏற்படவில்லை. ஒருநாள் அவனுக்கு வயிற்றுக் கோளாறு ஏற் படுகின்றது. மலச்சிக்கல்; அதற்காக விடியவில் வயிற்றுக் கழிவிற்கென் அமைந்த மருந்தை விழுங்குகின்றான். அது தன் வேலையைத் தொடங்குகின்றது. காலை ஒன்பது மணி அள வில் அவனுக்கு ஒரு நற் செய்தி வருகிறது. அன்று காலை பத்து மணி அளவில் அவன் அரசாங்க அலுவலகத்தில் ஐந்நூறு ரூபாய் ஊதி யம் பெறும் பணியை ஏற்றுக் கொள்ள வேண் டும் என்பதும், அன்றைக்குத் தவறினால் அப் பணி வேறு ஒருவனுக்கு உரிமையாய் விடும் என்பதும் அச் செய்தியாகும்.

இப்போது அவன் யாது செய்வான்? மருந்து வேகத்தால் அவன் பணியேற்பதைக் கைவிட்டுச் சும்மா இருந்துவிடுவானா? உலகிய லில் இவ்வாறு ஒருவனும் ஒருபோதும் இருக் கவே மாட்டான். நீண்டகாலத்திற்குப்பின் பெறாது பெற்ற ஆணையை ஒருவன் ஒரு போதும் புறக்கணிக்கவே மாட்டான். மருந்தின் வேகத்தினைத் தடுக்கத் தனது நோவினையும் பொறுத்துக்கொண்டு, பத்து மணியளவில் பணியை ஏற்றுக் கொண்டு அதற்குப்பின்ஆவன செய்வான்.

## முடிவுரை:

ஊழையும் உப்பக்கம் காண்பதற்கு இத னைவிட எடுத்துக்காட்டு ஒன்றும் தேவை இல்லை. மனிதனுக்கு இயல்பாக அமைந்த முயற்சியைப் படிப்படியாகப் பயிற்சியினால் பயன்படுத்தினால் ஊழைச் சகித்துக் கொள்ளு தல் வாயிலாக அதனைப் புறங்கண்டு உயர்வு அடையலாம். இவ்வாற்றால் திருக்குறளில் மேல்நோக்கில் காணப்படும் முரண்பாடுகளை எல்லாம்-முரண்பாடுகள் அல்ல என்றும்-திரு வள்ளுவர் முன்னுக்குப் பின் முரணான கருத்தை யாண்டும் கூறவில்லை என்றும்தெளிய லாம்.

# சங்க நூல்களின் சிறப்பு

''சங்கத் தமிழ்மூன்றும் தா'' என்றே வேண்டிநின்று
துங்கமிகும் ஔவை தொழுததனால்,-நன்குயர்ந்த
இன்பளிற் சங்க இலக்கியநூல் மாண்பெல்லாம்
மன்பெரிதும் தேர்கோம் மதித்து. (1)

வையையும் காவிரியும் வான்பொருநை பாலாறும்
செய்யதமிழ் நாட்டைச் செழிப்புறுத்தும்;-மெய்யதுபோல்
சங்கஞ்சார் நூல்கள் தமிழ், தமிழர்ப் பண்படுத்தி
இங்கெஞ்சாச் சீர்விளைக்கும் இன்று. (2)

கலைநிரம்பிக் கற்றற் கினிதாய், அறிவின்
நலம்நிரம்பிச் சொற்பொருள்கள் நன்றாய், - விலைவரம்பின்
றுள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உவப்பிக்கும்,
தெள்ளுசங்க நூலின் திறம்! (3)

—-ந.ரா. முருகவேள்

# குமரகுருபர சுவாமிகளும், தில்லைச் சிவகாமி அம்மையும்

'முதுபெரும்புலவர்'
திரு. ப. வடிவேற்பிள்ளை, சிதம்பரம்

**முன்னுரை :**

தமிழகத்தில் தோன்றி விளங்கியருளிய அருட்பெருஞ் சான்றோர்கள் பலருள், ஞானத் தவமுனிவராகிய குமரகுருபர சுவாமிகள் தலைசிறந்த ஒருவராவார். குமரகுருபர சுவாமிகள் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தில் 4ஆம் பட்டத்தில் குருமூர்த்தியாக விளங்கியிருந்த திருவார்திரு மாசிலாமணி தேசிகர் அவர்களையடைந்து, தமக்கு ஞானோபதேசம் புரியவும், துறவுநிலை வழங்கவும் வேண்டிக் கொண்டனர். மாசிலாமணி தேசிகர், குமரகுருபரரை நோக்கிக் ''காசிக்குத் தலயாத்திரை சென்று வருக; வரின் பின்னர் யாம் ஞானோபதேசம் புரிந்து, துறவு நிலை வழங்குகின்றோம்'' எனத் தமது ஆதீனமரபு நெறியின்படி திருவாய் மலர்ந்தருளினார்.

அதுகேட்ட குமரகுருபரர், மாசிலாமணி தேசிகரை மிகவும் அன்புடன் வணங்கிப் பணிந்து, ''காசிக்குச் சென்று வருவதாயின் வாழ்நாளில் நெடுங்காலம் கழிந்து விடுமே'' என்று தம் கவலையைப் புலப்படுத்திக் கொண்டனர். குமரகுருபரரின் தீவிரதர பக்குவநிலையைக் கண்டறிந்த மாசிலாமணி தேசிகர், மிகவும் மனம் இரங்கி, ''அங்ஙனமாயின், சில காலம் சிதம்பர வாசமேனும் செய்து வருக'' என்று பணித்தருளினார். அதன்படியே குமரகுருபரர் சிதம்பரம் போந்து, சிலகாலம் தங்கித் தில்லை நடராசப் பெருமானையும், சிவகாமி அம்மையையும் நாள்தோறும் முறையே தரிசித்து மகிழ்ந்து வந்தார்.

அதனால் குமரகுருபர சுவாமிகளின் ஆன்மீக அருள் வாழ்க்கையில், சிதம்பரம் ஒருபெரும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது. குமரகுருபரர் தில்லை நடராசப் பெருமானிடத்தும், சிவகாமி அம்மையினிடத்தும், எல்லையில்லாத பெரும் பக்திமை பூண்டு வழிபட்டு மகிழ்ந்தார். அதன் பயனாகச் சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, தில்லைச் சிவகாமியம்மை இரட்டை மணிமாலை என்னும் சிறந்த மூன்று செந்தமிழ்க் கவிதை நூல்கள் குமரகுருபரரால் அருளிச் செய்யப்பெற்றன. இணையற்ற எழிலும் இனிமையும் மிக்க இம் மூன்று சிறந்த கவிதை நூல்களாலும், குமரகுருபர சுவாமிகள், சிதம்பரம் என வழங்கும் தில்லைத் தலத்திலும், அங்கு எழுந்தருளி விளங்கும் நடராசப் பெருமானிடத்திலும், சிவகாமி அம்மையினிடத்திலும் கொண்டிருந்த எல்லையற்ற பேரன்பின் பெற்றிமை, தெற்றெனச் செவ்விதின் விளங்கும்.

''தீர்த்தம் என்பது சிவகங் கையே
ஏத்தரும் தலம்எழிற் புலி யூரே
மூர்த்தி அம்பலக் கூத்தன துருவே''

என்று, குமரகுருபர சுவாமிகள் சிதம்பரத்தின் மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூவகைப் பெருமைகளையும் போற்றியிருத்தல் காணலாம்.

**தில்லைமன்று :**

''இளமையானது நீரில் தோன்றும் குமிழி போன்று நிலையில்லாதது; செல்வமானது கடலில் தோன்றும் அலைகளைப் போல மாறி மாறிப் பிறழ்ந்து சென்று அழிந்தொழிவது; உடம்போ நீரின்மேல் எழுதப்படும் எழுத்துப் போல ஒரு நொடிப்பொழுதில் மாய்ந்து மறையும் இயல்பினது. ஆதலால் இவற்றையெல்லாம் நிலையென்று எண்ணி மயங்காமல், எம் பெருமான் திருநடம்புரிந்தருளும் தில்லையம்பலத்தை இப்பொழுதே தொழுது உய்திபெறுங்கள்'' என இவ்வுலக மக்களுக்கெல்லாம் அறிவுறுத்தியருளும் குமரகுருபரர், சிவகாமி அம்மையின் சிறப்பினையும் திருவருளையும் இம் மூன்று நூல்களிலும் மிக எழிலமையப் புகழ்ந்து போற்றித் துதித்து மகிழ்கின்றார். அவற்றுள் ஒரு சில பாடல்களின் கருத்துக்களை மட்டும் இங்குச் சுருக்கமாகக் கண்டு மகிழ்வோம்.

**அன்னையின் அருள் :**

(1) தில்லையில் சிவபெருமான் ஐந்தொழில் புரியும் திருக்கூத்து இயற்றுகின்றான். அவனது தமருகம் (உடுக்கை) ஏந்திய கரம், எல்லா உலகங்களையும் படைக்கின்றது. அமைத்த பொற்கரம் (அஞ்சேல் என அருளும் திருக்கை) உலகங்களையெல்லாம் காப்பாற்றுகின்றது. அழல் ஏந்தியுள்ள கரம், உலகங்களையெல்லாம் ஒடுக்கி, உயிர்களை இளைப்பாறச் செய்கின்றது. அவனது ஊன்றிய திருவடி, உயிர்கள் ஈட்டிய வினைப்பயன்களை எல்லாம்

மறைத்து நின்று நுகரும்படி செய்து ஊட்டுவிக்கின்றது. எடுத்த திருவடியாகிய குஞ்சிதபாதம் உயிர்களுக்கெல்லாம் பேரின்பமாகிய வீடு பேற்றை வழங்கியருள்கின்றது. இங்ஙனம் ஐந்தொழில் புரியும் நடராசப் பெருமானின் அற்புதத் திருக்கூத்தினை, சிவகாமி அம்மை தான் தரிசித்து, அதன் பயனை உயிர்கள் நுகரும்படி செய்தருள்கின்றாள். அஃது எதுபோல்வதெனின், குழந்தையின்குடர் மருந்தைச் செரிக்கும் திறனற்றது என்று, ஒரு தாய் தானே அம்மருந்தை உண்டு, அதன் பயனைத் தனது பால் வழியாக அக்குழந்தைக்குச் சேரும்படி செய்வது போன்றதாகும் என்று, சிவகாமி அம்மையின் பேரருட்டிறனைக் குமரகுருபர சுவாமிகள் போற்றித் துதித்து மகிழ்கின்றார்.

''பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென
நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக்கு இன்னருள் கிடைப்ப
வையம்ஈன் றளித்த தெய்வக் கற்பின்
அருள்சூற் கொண்ட ஐயரித் தடங்கண்
திருமாண் சாயல் திருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக் கூத்தன்.....''

**கரும்பும் பிடியும்:**

(2) உலகில் நடனம் புரிவோர் பலர் உண்டு. அவர்களுக்கெல்லாம், தம்மை ஆட்டுவிக்கின்ற நட்டுவனார் என்பவர் ஒருவர் இருப்பார். ஒருவர் தம்மை ஆட்டுவிக்கவே, உலகில் பலர் நடனமாடுவர். ஆனால் தம்மை ஆட்டுவிப்பார் எவரும்இல்லாமல், தாமே ஆடி, ஏனைய எல்லோரையும் ஆட்டுவிக்கின்றவராகத் திகழ்பவர், தில்லையம்பலவாணர். அவர், தில்லையம்பலத்தில் ஆனந்தத் தேன் காட்டுகின்ற ஓர் அரிய முக்கட் கரும்பாகத் திகழ்கின்றார். அம்முக்கட் கரும்பினை விரும்பிப் பொருந்தி நெடுநாளாக விநாயகர் என்னும் யானையாகிய எழில்இளங் கன்றைப் பயந்த, சிவகாமியம்மை என்னும் பெண்யானை உண்டு மகிழ்ந்து கொண்டிருக்கின்றது.

''ஆட்டுகின்றோர் இன்றிமன்றுள் ஆடும்
ஆனந்தத்தேன்
காட்டுகின்ற முக்கட் கரும்பொன்று;
—வேட்டதனை
உற்றுநெடு நாளாக உண்ணும், ஓர் மால்
யானை
பெற்றதொரு கூந்தற் பிடி''

எனவரும் சிதம்பர மும்மணிக்கோவைப் பாடலில் குமரகுருபரர் கூத்தப்பெருமானை 'ஆனந்தத்தேன் காட்டுகின்ற முக்கட் கரும்பு ஒன்று' என்றும், விநாயகரை 'மால் யானை' என்றும், சிவகாமி அம்மையை 'மால் யானை பெற்றதொரு கூந்தற்பிடி' (பெண்யானை) என்றும், யானை, கரும்பை விரும்பி உண்ணுதல் இயல்பாதலின் 'வேட்டு (விரும்பித்–திருமணம்செய்து கொண்டு) உற்று நெடுநாளாக உண்ணும்' என்றும் கூறியுள்ள பொருத்தமும் நுட்பமும் பெரிதும் போற்றற்பாலன.

**திங்களும் மானும்:**

(3) சிவகாமி அம்மையின் கண்கள் மிகவும் அழகு வாய்ந்தவை, அருள்பெருகி வெள்ள மிடும் ஊற்றுத்தடம் போன்றவை. அன்பர்களுக்கு எல்லா நலங்களும் தருபவை. ஆதலின், சிவகாமி அம்மையின் அருட் கண்களின் அழகில் குமரகுருபரர் பெரிதும் ஈடுபடுகின்றார். அவற்றின் அழகினைப் பின்வருமாறு புகழ்ந்து போற்றுகின்றார். 'சிவபெருமான் தனது சடைமுடியில் திங்களும் பாம்பும் அணிந்துள்ளான். பாம்பைக் கண்டு அஞ்சுதல் திங்களுக்கு இயல்பாயினும் சிவபெருமானின் சடைமுடியிலுள்ள காரணத்தால் திங்கள் பாம்பைக் கண்டு அஞ்சவில்லை. எனினும் அதற்கு அச்சம் நிகழாமல் போகவும் இல்லை. ஓர் அச்சம் தீர்ந்தாலும், திங்களுக்கு வேறோர் அச்சம் நேருகின்றது. சிவபெருமானின் அருகே சிவகாமியம்மை வீற்றிருக்கின்றாள். அம்மையின் நறுநுதல் (நெற்றி) மிகவும் அழகு வாய்ந்து, குறுகியதாய் வளைந்ததாய் விளங்குகின்றது. அம்பிகையின் அத்தகைய நெற்றியின் அழகைக் கண்டதும், அவ்வழகும் சிறப்பும் தனக்கு இல்லையே என்று கவன்று திங்கள் நாணமுற்று அஞ்சுகின்றது.

இத்திங்களைப் போலவே சிவபெருமான் ஏந்தியுள்ளமானும் நாணி அஞ்சி நிற்கின்றது. மான் புலியைக் கண்டு அஞ்சுதல் இயல்பு. சிவபெருமான் தனது கையில் ஏந்தியுள்ள மான், வியாக்கிரபாதராகிய புலிக்குச் சிறிதும் அஞ்சவில்லை. ஆனால் சிவபெருமானுக்கு அருகில் இருக்கும் சிவகாமி அம்மையின் விழிகளாகிய மானைக்கண்டு அவற்றின் சிறப்பும் அழகும் தனக்கில்லையே என்று அஃது அச்சம் கொள்கிறது. அங்ஙனம் மானும் அஞ்சும் மாண்புடையவாகச் சிவகாமி அம்மையின் அழகிய திருக்கண்கள் சிறப்புற அமைந்து திகழ்கின்றன என்கின்றார் குமரகுருபரர்.

கறையரவுக் கஞ்சுறா தஞ்சுறூஉம் திங்கள்
இறைவி நறுநுதலைக் கண்டு-பிறைமுடியோன்
கைம்மான் நடமுவந்த காற்புலிக்கஞ்
சாது அஞ்சும்
அம்மான் விழிமானைக் கண்டு.

(4) பொன்னம்பலமானது பொற்றாமரை போன்றுள்ளது. அதன்கண் எழுந்தருளியுள்ள நடராசப் பெருமானின் திருவுருவம் தேனாகத் திகழ்கின்றது. அத் தேனை உண்டு மகிழ்கின்ற களி வண்டுகளைப்போல எம்பெருமாட்டியாகிய சிவகாமி அம்மையின் திருவிழிகள் திகழ்கின்றன.

(5) பொன்னம்பலமாகிய புனித மன்றத்தில் குற்றமற்ற ஐந்தொழில் நாடகம் புரிகின்ற நடராசப் பெருமானுக்கு எம் அன்னையாகிய சிவகாமி யம்மை ஒருத்தியே, மனைவி-தாய்-தங்கை-மகள் என்னும் பல நிலைகளில் திகழ்கின்றாள்.

''கனகமார் கவின்செய் மன்றில்
அனக நாடகற்கு எம் அன்னை
மனைவி தாய் தங்கை மகள்''

'எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்' என்றபடி, அம்பிகை இறைவனின் செயலுக்கும் இயலுக்கும் ஏற்பத் துணை நிற்பவள் ஆதலின், மனைவி என்றும், சக்தி தத்துவத்தினின்று சதாசிவ தத்துவம் தோன்றுதலில் தாய் என்றும், சிவதத்துவம் தோன்றிய பின்னரே சத்திதத்துவம் தோன்றுதலின் தங்கை என்றும், சிவமே தன்னினின்று சத்தியைத் தோற்றுவித்தலின் மகள் என்றும், குமரகுருபரர் அம்பிகையை விதந்து வியந்து குறிப்பிட்டருளினார். இங்ஙனம் ஒருவரே பலவேடமும் நிலையும் கொள்ளுதல் நாடகங்களில் நடிகருக்கே இயல்பாதலாலும், இறைவன் இயற்றும் இந் நாடகம் ஏனைய உலகியல் நாடகங்களைப் போல இழிந்ததன்றி உயர்ந்ததாகலாலும், நடராசப் பெருமானை ''அனக நாடகன்'' என்று, குமரகுருபரர் சிறப்பித்த அருமைப்பாடு அறிந்து மகிழற்பாலது.

(6) சிவபெருமான் ஆலாலம் என்னும் விடத்தை உணவாகக்கொண்டான். நச்சரவைக் கச்சாக அணிந்தான் என்று வேதங்கள் புகழ்ந்தோதுகின்றன. ஆயினும் அங்ஙனம் வேதங்கள் சிவபெருமானைப் புகழ்வது பயனில்தேயர்கும். ஏனெனில் அச்செயல்களையெல்லாம் சிவபெருமான் தன்னுடைய ஆற்றலால் புரிந்தனன் என்பதற்கில்லை. தில்லை வனமாகிய காட்டில், சிவகாமி அம்மையாகிய மயில், தனக்கு அருகாக இருக்கும் திறத்தினாலேயே சிவபெருமான் அங்ஙனம் செய்ய முடிந்தது. மயில் பாம்பின் விடங்களையெல்லாம் மாய்க்க வல்லது ஆதலின் சிவகாமி அம்மையாகிய மயில் தனக்கு அருகே நிற்கப் பெற்றிருக்கும் சிறப்பினாலேயே சிவபெருமான் நச்சரவைக் கச்சாக அணியவும், நஞ்சை உணவாகக் கொள்ளவும் முடிந்தது என்பதுகருத்து.

கறைகொண்டு நச்சரவக் கச்சணிந்தார் என்று
மறைகொண்டு வாழ்த்துவதும் வம்பே-இறைகொண்
டயிலிருக்கும் முத்தலைவேல் அண்ணலுக் கென்னேயோர்
மயிலிருக்கத் தில்லை வனத்து.

(7) சிவகாமி அம்மை மயிலாக மட்டுமே விளங்குகின்றிலள். அவள் அன்னமாகவும் அமைந்து திகழுகின்றாள். 'பொன்னம்பலத்தில் ஆனந்தப் பெருக்கு என்னும் கடலில் புகுந்து திளைத்து ஆடுகின்ற சிவகாமி அம்மையாகிய அன்னம், பல்லாயிரக்கணக்கான அண்டங்களை (உலகங்களை, முட்டைகளை) ஈன்று, சரமும் அசரமுமாகிய இளங் குஞ்சுகளைப் பயந்து, அழகிய வளையல்கள் செறிந்த தனது கைகளாகிய இரண்டு சிறகுகளால் தழுவி அணைத்து, தன் வயிற்றினுள்ளே வைத்து அவைகளுக்கெல்லாம் இரை தேடி ஊட்டி, மிகவும் அன்புடன் பாதுகாத்து வருகின்றது என்று, குமரகுருபரர் சிவகாமி அம்மை ஆகிய உலகன்னை, இவ்வுயிர்களையெல்லாம் செவ்விதின் போற்றிப் பாதுகாத்து வரும் திறனைப் புகழ்ந்து பாடியருள்கின்றார்.

வன்னஞ் செறிவளைக் கைச்சிறகால்
தன் வயிற்றினுள் வைத்து
இன்னம் சராசர ஈர்ங்குஞ்சு
அணைத்திரை தேர்ந்தருத்திப்
பொன்னம் பலத்துள்ஓர் ஆனந்த
வாரிபுக் காடும் பச்சை
அன்னம் பயந்தன கொல்லாம்
பல்லாயிர அண்டமுமே.

**முடிவுரை:**

இங்ஙனமெல்லாம் குமரகுருபரர் பல்வேறுவகைகளில் போற்றிப் புகழ்ந்து பாடித் துதிக்கும் சிவகாமி அம்மையின் திருவடிகளை, நாம் அனைவரும் போற்றி வணங்கி, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து உய்ய முயலுவோமாக!

---

# சங்க நூல்களின் சிறப்பு

''அகமும் புறமும் அளாய பொருளாய்த்
திகழும் அறிவின் தெளிவாய்''; - நிகரிலின்பத்
தேனமிழ்தாய் இன்பம் தெவிட்டாத சங்கநூல்
வானமிழ்தும் கைப்பிக்கும் மற்று! (1)

''சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய''
சங்க இலக்கியங்கள் தாம், நமது - முந்தையோர்
நம்பொருட்டாற் சேர்த்துவைத்துச் சென்ற,பெரு நல்லுணர்வின்
செம்பொருட் செல்வத் திரட்டு! (2)

''என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையவாய்''-குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்ம்''
சங்கத் தமிழ்நூல்கள் தாம்! (3)

—ந.ரா.முருகவேள்

# குறள் காட்டும் நெறி

'முத்தமிழ்க் காவலர்'

திரு கி. ஆ. பெ. விசுவநாதம், திருச்சி

**தெய்வப்புலவர் :**

திருவள்ளுவர் தமிழகத்துச் சான்றோர்களில் ஒருவர். நமது முன்னோர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பெருமகன். கடைச் சங்க காலப்புலவர். பாண்டிய மன்னனது அரண்மனையிலிருந்து அரசனது கருத்தை யானைமீது ஏறிப்பறையறைந்து மக்களுக்கு அறிவித்து அதனால் வள்ளுவர் என்ற பட்டத்தைப் பெற்று, பின் நெய்தற் தொழிலையும் மேற்கொண்டு இல்லற வாழ்வில் வாழ்ந்தவர். ''தெய்வப் புலவர்'' என்ற பெயரையும் பெற்றவர். அவர் இயற்றிய நூலே திருக்குறள்.

**பொய்யா மொழி :**

அறம் 38, பொருள் 70, இன்பம் 25 என மூன்று பிரிவுகளாக 133 தலைப்புகளில் 1330 குறட்பாக்களைக் கொண்டது திருக்குறள். நூல் முழுவதும் 4303 சொற்களே காணப்படுகின்றன. இவற்றுள் சில சொற்கள் பலமுறை வந்து ஏறத்தாழ 12000 சொற்களாகக் காட்சியளிக்கின்றன. ஒன்றே முக்காலடியில் அமைந்த மிகவும் குறுகிய பா ஆதலின், குறட்பா என்ற பெயரைப் பெற்றது. இதில் கூறப்பெற்றுள்ள கருத்துக்கள் அனைத்தும் அன்றும், இன்றும், என்றும் நிலைத்திருப்பவை. ஆதலின் இந்நூல் ''பொய்யா மொழி'' என்ற பெயரையும் பெற்றிருக்கின்றது.

**குறள் நெறி :**

நெறி பலவகை. குறள்நெறி தனிவகை. நெறி என்பது ''வழி'' எனப் பொருள்பெறும். நெறி என்றாலே அது நன்னெறியை மட்டுமே குறிக்கும். இதனை ''நெறி நின்றார் நீடுவாழ் வார்'' என்பதனால் அறியலாம். வழி என்றாலும் அது நல்வழியை மட்டுமே குறிக்கும். இதனை ''வழியே ஏகுக வழியே மீளுக'' என்பதனால் நன்கறியலாம். தீ நெறியைக் குறிக்கும் பொழுது கூட ''நெறியல்லா நெறி'' என்று குறிப்பிட்டுள்ளனர். வள்ளுவருடைய மிகப் பெரிய ஆசை ''மக்களாகப் பிறந்தவர்கள் மக்களாகவே வாழ வேண்டும்'' என்பது. அதன் விளைவாகத் தோன்றியதே திருக்குறள். அது காட்டும் நெறியே குறள் நெறி.

**கற்றதனால் ஆய பயன் :**

''இறைவனை வணங்கு இன்றேல் கற்றதனால் பயன் ஒன்றுமில்லை'' எனக் குறள் கூறுகிறது. இவ்வுலகில் மக்கள் நல் உடலோடும், பின் புகழோடும் நீண்டநாள் வாழ இரண்டு வழிகளைக் குறள் காட்டுகிறது. ஒன்று இறைவனது திருவடியைச் சேர்ந்தவர் நிலமிசை நீடு வாழ்வார் என்பது. மற்றொன்று ''ஒழுக்கநெறி நின்றார் நீடு வாழ்வார் என்பது. இவை இறை நெறி.

**கற்க கசடற :**

இச்சொற்கள் இரு பொருள்களைத்தாங்கி நிற்கின்றன. ஒன்று ''பிழையறப் படி'' என்பது மற்றொன்று''மனதிலுள்ள அழுக்கு அறப்படி'' என்பது. இச்சொற்களில் தொடங்கும் குறளில் ஆறு கருத்துக்கள் உள்ளன. (1) படி (2)படிக்க வேண்டியவைகளைப் படி (3) பிழையறப் படி (4) குற்றம் நீங்கப் படி (5) படித்தபின் உணர் (6) பின் அதன்படி நட என்பன. இவை ஆறும் ஆறு கட்டளைகளாகவே அமைந்துள்ளன. இவற்றை வள்ளுவர் மெல்லோசை, இடையோசை எழுத்துக்களாலல்லாமல் வல்லோசை உடைய க ச ட த ப ற என்று ஆறு எழுத்துக்களைக் கொண்டே கூறியிருப்பது நம்மை வியப்படையச் செய்கிறது. அதைவிட வியப்பு, அவ்வளவு அழுத்தமாகக் கூறியிருந்தும், அது நம்மிற் பலருடைய உள்ளத்திற் பதியாதிருப்பது. இது கல்விநெறி.

**வாழ்வாங்கு வாழ்தல்:**

பிறந்தோரெல்லாம் வாழ்ந்து விடுவதில்லை. ''நேற்று இருந்தவர் இன்று இல்லை என்னும் பெருமையைப் பெற்றது இவ்வுலகு''. எல்லோரும் பிறக்கிறார்கள், வாழ்கிறார்கள், இறக்கிறார்கள் என்று சொல்வது தவறாகும். ஏனெனில் சிலர் மட்டும்தான் வாழ்கிறார்கள். எப்படியும் வாழ்ந்து விடலாம் என்று நினைப்பது வாழ்வாகாது. இப்படித்தான் வாழவேண்டுமெனத் திட்டமிட்டு வாழ்வதே வாழ்வாகும். இதனையே குறள் வாழ்வாங்கு வாழ்தல் எனக் கூறுகிறது. வாழ்வாங்கு வாழ்தல் என்பது வாழவேண்டிய முறைப்படி வாழ்தல் எனப் பொருள்படும். வாழவேண்டிய முறை என்பது தனக்

க, தன் குடும்பத்திற்காக என்று மட்டுமில்லாமல் ''பிறர்க்காகவும் வாழ்தல்'' எனஅமையும். இது வாழ்வுநெறி.

**பிறர்க்காகவும் வாழ்தல் :**

பிறர்க்காக வாழும் வாழ்க்கை தன்னலம் கருதாத வாழ்க்கையாகும். இதை ''தியாகம்'' என வடமொழியாளர் கூறுவர். இதற்கு எடுத்துக்காட்டாக ''உண்பதற்கு ஏற்ற உணவுப் பொருள்களை யெல்லாம் விளைவித்துக் கொடுத்து, இறுதியில் தானும் ஒரு உண்ணும் நீராக மாறி, மக்களின் வயிற்றில் போய்ச் சேர்ந்து அவர்களை வாழவைத்து, தான்மடிந்து போகிற மழை நீரையும், ''நோய்வாய்ப்பட்ட மக்களை உயிர்ப்பித்து வாழவைத்துவிட்டுத் தான் அடியோடு அழிந்துபோகிற மருந்துச்செடியையும்'' குறள் காட்டுகிறது. மழை நீரைப் போல, மருந்துச் செடியைப் போல, பிறர்க்காகவே வாழ்ந்து மடிய நம்மால் முடியாவிட்டாலும், உயிரோடிருந்து பிறருக்காகவும் வாழ நம்மால் முடியுமல்லவா? இவ்வாறு வாழ்கின்ற மக்கள் மக்களாக இருப்பினும் தெய்வமாகக் கருதப்படுவார்கள் எனக் குறள் காட்டுகிறது. இது வாழும் நெறி.

**உள்ளத்தனையது உயர்வு :**

மக்கட் சமுதாயத்தில் ஒருவன் உயர்ந்து காணப்பட வேண்டுமானால், முதலில் அவன் தன் உள்ளத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும். இதற்கு உவமையாக வள்ளுவர் ஒரு தாமரைக் குளத்தையே காட்டுகிறார். அக்குளத்தில் தண்ணீர் இரண்டடி இருந்தபோது தாமரை மலர் இரண்டடி உயரத்தில் இருந்தது. பிறகு நான்கடி தண்ணீர் வந்ததும் மலரும் நான்கடி உயரத்திற்கு வந்துவிட்டது. பின் 5,7,9 அடி எனத் தண்ணீர் உயர உயர, மலரும் 5,7,9 அடி உயரத்திற்கு உயர்ந்து விட்டது. இதனை சுட்டிக் காட்டியே வள்ளுவனார் ''வெள்ளம் உயர உயர மலர் உயரும், உள்ளம் உயர, உயர நீ உயர்வாய்'' எனக் கூறுகிறார். இதனைக் கண்டு நாம் நம் உள்ளத்தை உயர்த்திக் கொள்ளாமல் கடுகு உள்ளமும், துவரை உள்ளமும் படைத்துக் கொண்டிருந்தால், நாம் வாழ்வில் உயரமுடியுமா? என்பது சிந்தனைக்குரியது. இது உயர்வுநெறி.

**உள்ள உடைமைகள் :**

பட்டாடைகளும், பொன் அணிகளும் நம் உடலை அழகு செய்வன. அவை மட்டும் போதாது. நம் உள்ளத்தையும் அழகு செய்ய இன்னும் பல உடைமைகள் தேவை. அவை அன்புடைமை, அறிவுடைமை, அருளுடைமை, அடக்கமுடமை, ஆள்வினையுடைமை, ஊக்கம் உடைமை, ஒழுக்கமுடைமை, நாணமுடைமை, பொறையுடைமை, பண்புடைமை என்பன. இந்தப் பத்து உடைமைகளையும் பத்து தலைப் பின்கீழ் உள்ள நூறு குறள்களும் நம்மை அணியும்படி வற்புறுத்துகின்றன. இது உடைமை நெறி.

**நல்ல உடைமை :**

மேற் கூறிய உடைமைகளுக்கும் மேலாக ''நல்ல உடைமை'' என்று ஒன்றுண்டு. அது ''நா நலம் என்னும் நலனுடைமை'' எனக் குறள் கூறுகிறது. அந்த உடைமைகளில் எதையும் நல்ல உடைமை எனக் கூறாது, நா நலத்தை மட்டும் நல்ல உடைமை எனக் கூறியிருப்பது எண்ணிப் பார்க்கவேண்டிய ஒன்று. அப்படிப் பார்த்தால் அது ''உண்மையையே பேசுதல், நினைத்துப் பார்த்தே பேசுதல், செய்யக் கூடியதையே சொல்லுதல், இனியவைகளையே கூறுதல், கடிய-கொடிய-தீய சொற்களைச் சொல்லாதிருத்தல்'' எனப் புலப்படும். இதையே ஔவையார் ''ஓதுவ தொழியேல், கண்டொன்று சொல்லேல், சித்திரம் பேசேல், சுளிக்கச் சொல்லேல், நயம்பட உரை, நொய்ய உரையேல், பழிப்பன பகரேல், பிழைபடப் பேசேல், மிகைபடக் கூறேல், மொழிவது அற மொழி, வாதுமுற் கூறேல், வெட்டெனப் பேசேல், ஓரஞ் சொல்லேல்'' என விளக்கியிருக்கிறார். இது சொல் நெறி.

**பத்துக் கட்டளை :**

பொய் சொல்லாதே, புலால் உண்ணாதே, கள்ளைக் குடியாதே, களவை நினையாதே, காமங் கொள்ளாதோ, கொலையைச் செய்யாதே, சூதை விரும்பாதே, புறங் கூறாதே, பேராசையடையாதே, பொறாமை கொள்ளாதே என்ற பத்துக் கட்டளைகளையும் பத்து தலைப்பின்கீழ் மக்களின் நல்வாழ்வுக்காகக் குறள் இன்னும் கூறிக் கொண்டிருக்கிறது. இது ஒழுக்கநெறி.

**தோற்றத்தைக் கண்டு மயங்காதே :**

''கருப்பாக இருக்கிறது, கோணலாகஇருக்கிறது, நாரும் - நரம்புமாக இருக்கிறது'' என்று வெறுத்து விடாதே வீணையை. நீ இன்பத்தை இழந்து விடுவாய். சிவப்பாக இருக்கிறது. அழகாக இருக்கிறது, நேராக ,ஒழுங்காக இருக்கிறது'' என்று நெஞ்சில் வைத்து விடாதே அம்பை. அது உன் உயிரையே கொன்றுவிடும். இவை இரண்டை மட்டுமல்ல, வேறு எதனையுமே தோற்றத்தைக் கண்டு மயங்கி விடாதே. வாழ்வு பாழாகி விடும். குணம் ஒன்றைக் கொண்டே ஏற்றுக்கொள்'' எனக் குறள் எச்சரிக்கை செய்கிறது. இது ஆய்வு நெறி.

**தந்தையாகிய பாதகன் :**

தன் மக்களைக் கல்வி, கேள்விகளில் அறிவுடையவர்களாகச் செய்ய வேண்டியது தந்தையின் கடன். இன்றேல் அப்பிள்ளைகள் ''துள்ளித் திரிகின்ற காலத்திலே என் துடுக்கடக்கி, பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே'' என வைது, வருந்தி, அலைய நேரிடும். மகன் தந்தைக்குச் செய்யவேண்டிய உதவி ''இவனைப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்தானோ'' எனக் கண்டோர் வியந்து பாராட்டும் அளவுக்கு நடந்து கொள்ள வேண்

டியதே. இன்றேல், இவனைப் பெற்றோரும், பிறரும் வருந்த வேண்டி வரும். இது கடமை நெறி.

**பிறந்த மகனுக்கு இழிவு :**

பெற்ற தாயின் வயிறு பசிக்கக் காண்பது பிறந்த மகனுக்கு இழிவு. எப்பாடு பட்டேனும் அத்தாயின் வயிற்றுப் பசியினைப் போக்க வேண்டியது பிறந்த மகனின் கடமை. ஏனெனில் அது அவன் குடியிருந்த கோயில். ஆனாலும், அந்த நிலையிலும் ஒருவன் தவறான வழியில் பொருள்தேடி வந்து தாயின் பசியினைப் போக்க எண்ணுவது தவறு. எண்ணினால், அத்தகையோரைச் சான்றோர் பழித்து, ஒதுக்கி விடுவர் எனக்குறள் கூறுகிறது. இது அறநெறி.

**ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை :**

என்பது அரைக்குறள். இதற்கு மூன்று பொருள்கள் உள்ளன. ஒன்று ஆடை, அணி, பொன், மணி, பட்டம், பதவி முதலியவைகளால் எவரும் மேன்மையடைய முடியாது. ஒழுக்கம் ஒன்றினலேயே அதை அடைய முடியும் என்பது மற்றொன்று. ஒழுக்கத்தினால் உயர்ந்து விட்ட ஒருவன் பின் தெரிந்தோ, தெரியாமலோ தவறு செய்ய நேர்ந்தாலும் உலகம் அதை நம்பாது. அப்போதும் அவனுக்கு மேன்மையே உண்டாகிறது என்பது. இன்னொன்று ஒழுக்கத்தினால் உயர்ந்த ஒருவர், பின் வறுமையால் தாழ்ந்து போனாலும் கண்டோர் அவரை ''நன்றாக வாழ்ந்தவர்'' என்றே பெருமையோடு கூறுவர் என்பது. ''இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி'' என்பது மறுபாதிக் குறள். இதற்கும் மூன்று பொருள்கள் உள்ளன. ஒன்று ஒழுக்கம் தவறியவன் எல்லோராலும் பழிக்கப்படுவான் என்பது. மற்றொன்று ஒழுக்கம் தவறியவன் பின் திருந்தி ஒரு காலத்தில் நல்ல காரியங்களைச் செய்தாலும், உலகம் நம்பாது. அவன் முன்செய்த பாவங்களைப் போக்கவே இவ்வாறு செய்கிறான் என்றே பலரும் பழி தூற்றுவர் என்பது. இன்னொன்று, அவன் செய்யாத பிறர் செய்த தவறுக்கும் பழி ஏற்க நேரிட்டு விடும் என்பது. இம் மூன்றாவது கருத்தை இக்குறளிலுள்ள ''எய்துவர் எய்தாப் பழி'' என்ற சொற்றொடர் நமக்கு நன்கு அறிவிக்கின்றது. இது மேன்மை நெறி.

**என்ன பயத்ததோ சால்பு?**

ஒருவனை ஒருவன் அடித்துத் துன்புறுத்தி வாழ்வது விலங்குக் குணம். தன்னலங் கருதி உயரப்பறந்துகொண்டிருப்பது பறவைக்குணம். தீமை செய்தவர்க்குத் தீமை செய்வது தேள், பாம்புக் குணம். தீமை செய்யாதவர்க்கும் தீமை செய்வது பேய்க்குணம். தீமை செய்தவரை மன்னித்து வாழ்வது மனித குணம் என்பது வரையில் பிற நூல்கள் கூறுகின்றன. ''தீமை செய்தவரை மன்னிப்பதோடு விட்டு விடாதே, அவருக்கு நன்மையும் செய்'' என்று குறள் ஒரு தனி நெறியைக் காட்டுகிறது. இவ்வாறு செய்யாவிடில் ''சால்பு'' என்ற நற்குணத்தால் அடையும் பயன்தான் என்ன? எனக் குறள் நம்மை நோக்கிக் கேட்டுக் கொண்டிருக்கிறது. இது குறள் நெறிகளில் மிக உயர்ந்த நெறி.

**யார் பெரியார் ?**

பணக்காரர், நிலக்காரர், முதல்காரர் இவர்களைப் பெரியர் என முன்னொரு காலத்தில் நினைத்திருந்தோம். அடுத்துப் படித்தவர், பட்டம் பெற்றவர், பதவியில் இருப்பவர் பெரியர் என எண்ணினோம். பின் வயதில் முதிர்ந்தவர்கள் பெரியோர் எனக் கருதி வந்தோம். அண்மைக் காலத்தில், நடிகர் எழுத்தர் பேச்சர் பெரியர் எனக் கருதி வருகிறோம். இவர்களில் யார் பெரியர்? என்ற கேள்விக்கு வள்ளுவர் கூறும் விடை ''செய்வர் பெரியர்'' என்பதே. இதிலிருந்து மலையளவு பேசுவதை விடக் கடுகளவு செய்வதே நல்லது எனத் தெரிகிறது. ஆம் கோடையிடி இடிப்பதனாலேயே குளம் நிறைந்து விடுவதில்லை அல்லவா? இது புது நெறி.

**எது வினைத் திட்பம்?**

ஒரு நல்ல செயலைச் செய்வதற்கு வேண்டியது பொருளுதவி, நண்பர்களின் உதவி, மனைவி மக்களின் ஒத்துழைப்பு, அரசாங்கத்தின் ஆதரவு என நாம் எண்ணி வருகிறோம். ஆனால் எல்லாவற்றையும்விட முதலில் ஒருவனுக்கு வேண்டியது மன உறுதியே என்பதை ''வினைத் திட்பம் என்பது மனத்திட்பம்'' என்ற குறள் காட்டுகிறது இது உறுதி நெறி.

**சிதைவிடத்து ஒல்கார் உரவோர் :**

ஒரு நற்செயலைச் செய்ய முன் வருபவனுக்கு மிகுந்த ஆற்றல் வேண்டும். அதற்குச் சில இடையூறுகள் வரும். பலர் துன்புறுத்திக் கொண்டிருப்பர். இவைகளைக் கண்டு கலக்கமுற்றுச் சோர்வு அடைபவர்களால் எதனையும் செய்ய இயலாது. செய்ய வேண்டுமானால், மன உரம் தேவை. ''காட்டில் வாழும் யானையுங்கூட தன் உடல் முழுவதும் வேடர்களின் அம்புகளால் தாக்கப்பெற்றுக் குருதி ஒழுகிக் கொண்டிருந்தாலும் அஞ்சி நடுங்காமல் பீடு நடை நடந்து தன் பெருமையை நிலை நிறுத்தும். அதைப்போலவே மன உரம் படைத்த மக்களும் துன்பம் வந்த காலத்துச் சோர்வடைவதில்லை'' என வள்ளுவர் காட்டானையைக் காட்டி நாட்டு மக்களுக்கு ஊக்கம் அளிக்கிறார். இது ஊக்க நெறி.

**எது நட்பு?**

வாழ்வு வளமாக அமைய வேண்டுமானால் நட்பு தேவை என வள்ளுவர் கருதுகிறார். ஒவ்வொரு கருத்துக்கும் ஒவ்வொரு தலைப்புக் கொடுத்துக் கூறிவந்த வள்ளுவர் நட்பின் தேவையை வலியுறுத்த ஆறு தலைப்புக்களின்கீழ் 60 குறள்களைக் கூறியிருக்கிறார். அவை நட்பு, நட்பு ஆராய்தல், தீ நட்பு, கூடாநட்பு, சிற்றி

னஞ் சேராமை, பெரியாரைத் துணைக் கோடல் என்பன. எது நட்பு? என்ற கேள்விக்கு ''முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து அகம் நக நட்பதே நட்பு'' என விடை கூறுகிறது குறள். அது மட்டுமல்ல. ''ஒருவனோடு சேர்ந்து நகைத்துக் கொண்டிருப்பது நட்பல்ல. அவன் தவறு செய்யும் பொழுது கடிந்து,இடித்துக் கூறித் திருத்துவதே நட்பு'' எனவும் கூறுகிறது. நட்பின் தன்மைக்கு இத்தனை தலைப்புக்களிலும் கூறாத ஒரு உவமை ''நிலையாமை என்ற தலைப்பில் காணப்பெறுகிறது. அது ''உடம்போடு உயிரிடை நட்பு'' என்பது. உயிர் பிரிந்து விட்டாலும் உடம்பு தானே அழுகி, அழிந்துபோய்விடுகிறது. எப்படி நட்பு? இத்தகைய ''நட்பையும் நன்கு ஆராய்ந்து கொள்ளுதல் நல்லது. இன்றேல் தான் சாகின்ற அளவுக்குத் துன்பத்தையும், துயரத்தையும் அடைய வேண்டிவரும் என்ற எச்சரிக்கையும் இக் குறளில் காணப்படுகிறது. இது நட்பு நெறி.

**எது செயல்?**

நட்புக்கு 6 தலைப்புக்களைக் கொடுத்த வள்ளுவர் செயல் திறமைக்கு 12 தலைப்புக்களைக் கொடுத்து 120 குறள்களைக் கூறி மகிழ்ந்திருக்கிறார். அவை ''ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை, ஊக்கமுடைமை என மூன்று; இடம் அறிந்து செய்தல், காலம்அறிந்து செய்தல், வலியறிந்து செய்தல் என மூன்றும்; தெரிந்து செயல் வகை, தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் என மூன்று; வினை செயல் வகை, வினைத் திட்பம், வினைத் தூய்மை என மூன்று ஆக 12. இவை அனைத்தும் செயல் திறமையின் அருமை பெருமைகளைக்கூறுகின்றன. எண்ணுவதைப்பெரியதாக எண்ணு. செய்வதையும் பெரியதாகச் செய். ''முயல் வேட்டைக்குப் போய் வெற்றி பெறுவதைவிட, யானை வேட்டைக்குப் போய்த் தோல்வியடைவது சிறப்பு'' எனக் கூறிக் குறள் மக்களைச் செயல் திறனில் ஊக்கி விடுகிறது. இது மட்டுமல்ல, இன்னும் ஒன்று. ''செய்ய வேண்டியவை களைச் செய்யாவிடினும் கெடும். செய்யத் தகாதவைகளைச் செய்தாலும் கெடும்'' எனக் குறள் நம்மை எச்சரித்துக் கொண்டிருக்கிறது. இது செயல்நெறி.

**குன்றின் அவையாருங் குன்றுவர் :**

சான்றோர்களால் பழிக்கத் தகுந்த ''தீய செயல்களைக் குண்டுமணியளவு செய்தாலும் குன்றைப் போன்று உயர்ந்தவர்களும் கூடக் குறுகி, குன்றிப் போய்விடுவர்.'' அவரது மானம் அழிந்துவிடும். ''மானத்தை இழப்பதா? உயிரை இழப்பதா? என்ற நிலை ஏற்படுமானால், உயிரை இழந்தேனும் மானத்தைக் காப்பாற்று. ஏனெனில் உயிர் நிலையாதது. மானம் என்றும் நிலைத்து நிற்பது'' என்கிறது குறள். இது பெரு நெறி.

எடுங்கள் குறளை. படியுங்கள் நன்றாக. சிந்தியுங்கள் ஆழ்ந்து, அந்த அளவோடு விட்டு விடாமல், குறள் காட்டும் நெறியிலும் நடை பயிலுங்கள். உங்கள் வாழ்வில் ஒரு ஒளி வீசும்.

## ஏழை மனமே! இனித் தளரேல்!

நாம் எத்தனையோ பல பிறவிகளில், எவ்வளவோ கொடிய பாவங்களைச் செய்திருக்கின்றோம். அவைகளையெல்லாம் நினைத்துப் பார்க்குங்கால், நமக்கும் ஓர் உய்தி உண்டோ? என்று நினைந்தால், நாம் தளர்ச்சி அடையநேரும். ஆனாலும் நாம் அங்ஙனம் தளர்ச்சி அடையவேண்டுவதில்லை. 'துவயம்' என்னும் மந்திரத்தை அனுசந்தித்து, எம்பெருமானின் திருவடிகளில் சரணாகதி என்று அடைக்கலமாகப் போய் விழுந்து வழிபடுபவர்களுக்கு, யாதொரு கவலையும் தளர்ச்சியும் நேரமாட்டா.

அறிவிலியான நெஞ்சமே! முன்னை வினைகளாகிய குறும்பர்கள், நம்மை விடாதே தொடர்ந்து ஓடிவந்து, நம்மைப் பற்றி நலிவு செய்வார்களே என்று அச்சப்பட்டு, இனி நீ ஒருபோதும் சோகம் கொள்ள வேண்டா. கடல் வண்ணனான கண்ணபிரானின் திருவடிகளில் ஓடிப்போய் விழுந்து, நீயே எனக்குச் சரணமாகக் கடவை என்று இரந்துவேண்டி, ஒருமுறை துவயம் என்னும் மந்திரத்தை ஓதிய பிறகும், நமக்குத் துயர் ஏற்படுமா?

ஊழி வினைக்குறும்பர் ஓட்டருவர் என்றஞ்சி
ஏழை மனமே இனித்தளரேல்!—ஆழிவண்ணன்
தன்அடிக்கீழ் வீழ்ந்து சரண்என் றிரந்தொருகால்
சொன்னதற்பின் உண்டோ துயர்?

—ஞானசாரம்.

[ஊழி-மிகப்பழமையான. வினைக்குறும்பர்-வினைகளாகிய குறும்பர்கள். தொல்லை விளைப்பவர்களைக் குறும்பர்கள் என்னும் உலகியல் வழக்கம் பற்றி, உயிர்க்குத் துன்பஞ்செய்கின்ற வினைகளை, 'வினைக்குறும்பர்கள்' என்றார். 'அழுக்காறு என ஒருபாவி' என்றாற்போல. ஓட்டருவர்-ஓடிவந்து துன்புறுத்துவர். தளரேல்-தளர்ச்சி அடையவேண்டா. ஆழிவண்ணன்-கடல்போலும் நீல நிறமுடையவன், திருமால். சரண்-அடைக்கலம், சரணாகதி. இரந்து-வேண்டிக்கொண்டு, பிரார்த்தித்து. ஒருகால்-ஒருமுறை.]

—ஆசிரியர்.

# தாராசுரத் திருக்கோயில், சிற்பங்களும் கல்வெட்டுக்களும்

பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**இரண்டாம் இராசராசன் :**

இரண்டாம் இராசராச சோழனால் (கி.பி 1146—1173), கும்பகோணத்திற்கு அருகில் அமைக்கப் பெற்ற இராச ராசேச்சுரமாகிய மாடக்கோயில், கண்டோர் கண்களையும் கருத்தினையும் ஈர்க்கும் சிற்பத் திறம் வாய்ந்ததாகும். முற்காலத்தில் மன்னர் போற்றும் பெருமையுடன் விளங்கிய அத் திருக்கோயில் இக்காலத்தில் தன் சிறப்பனைத் தும் இழந்து பழுதடைந்து சிதைவுற்ற நிலை யில் உள்ளது. எனினும் இத் திருக்கோயிலி லுள்ள கருப்ப இல்லின் புறச்சுவரில் திருத் தொண்டைத் தொகை அடியார்களின் வர லாறுகளைப் புலப்படுத்தும் முறையில் அமைக் கப்பெற்றுள்ள சிவனடியார் சிற்பங்களும், திருச்சுற்று மாளிகையிலும், இராசகெம்பீரன் திருமண்டபத்திலும் அமைந்த அழகிய சிற்பங் களும், இன்றும், அத்திருக்கோயிலின் பழைய பெருமைகளை அறிவுறுத்திக்கொண்டு, அதனை அமைத்த இரண்டாம் இராசராச சோழனு டைய புகழ்த் திறங்களாக நிலைபெற்றுள்ளன.

**தாராசுரம்:**

இராசராசேசுவரம் என்னும் தாராசுரம் திருக்கோயில் விமானத்தின் புறச்சுவரில் அடித் தளத்தின் மேலும், மாடப்புரைகளின் கீழும் ஆக, ஆறங்குல உயரம் அமைந்துள்ள அடிப் பக்கத்துப் பட்டியலாகிய நடுப்பத்தியில் தென் கிழக்கு முனையிலிருந்து வடகிழக்கு முனை முடியத் திருத் தொண்டத் தொகை அடியார் களின் வரலாறுகள் கருங்கல்லிற் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப் பெற்றுள்ளன. இச் சிற்ப வரிசைக்கு மேல் மரச்சட்டம் போன்று அமைந்த கற்பத்தியில், இவற்றுக்குரிய அடியார் களின் பெயரோடு தொடர்ந்த வரலாற்றுக் குறிப்புத் தொடர்கள், தமிழ் எழுத்திற் பொறிக் கப் பெற்றுள்ளன. இச்சிற்பங்களின் இடையே அமைந்த மூலை முடுக்குகளாகிய இடைவெளி யில் அழகுக்கெனச் செதுக்கப் பெற்ற பூ வேலைப்பாடுகளுடன் கூடிய, வேறு சில சிற்பங் களும் தெய்வத் திருவுருவங்கள் சிலவும் இடம் பெற்றுள்ளன.

**சிற்பங்கள் :**

''தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' எனத் திருத்தொண்டத் தொகை யில் அடியார்கள் போற்றப் பெற்றுள்ள முறை யினை அடியொற்றித் தில்லை வாழந்தணர் என்னும் தொகையடியார் முதலாக, அன்ன வனாம் ஆரூரன் எனக் குறிக்கப்பட்ட நம்பியா ரூரர் ஆகிய தனியடியார் ஈறாக, அமைந்த் நாயன்மார்களுக்கு உரிய சிற்பங்கள் இவ்விமா னத்தின் தென்கீழ் மூலை தொடங்கி வடகீழ் மூலை முடியத் தொடர்ச்சியாக அமைக்கப் பெற்றுள்ளன. நம்பியாரூரர் அருளிய திருத் தொண்டத் தொகையின் பெயர் முறையினை ஒட்டியமைந்த இச் சிற்பங்களின் வரிசையில் அரிவாட்டாய நாயனாரைக் குறித்த சிற்பம் ஒன்று மட்டும் உருத்தெரியாதவாறு சிதைந் துள்ளது. திருநாவுக்கரசரைக் குறித்த சிற் பத்துள் ஒரு பகுதி சிதைய ஒரு பகுதி மட்டுமே சிதையாமல் எஞ்சியுள்ளது. இவற்றுள் ஐம்பது சிற்பங்களுக்குரிய கல்வெட்டுக் குறிப்புகள் மட்டும் அழியாமல் உள்ளன. ஏனையவற்றின் எழுத்துக்கள் சிதைவுற்றமையால் அந்தக், குறிப்புகள் இவையென்று தெளிவாக அறி தற்கு இயலவில்லை. இவ்வாறு கல்வெட்டுக் குறிப்புகள் சிதைந்துமறைந்தாலும் திருத் தொண்டத் தொகையின் வரிசை முறையினை உளங்கொண்டு இச்சிற்பங்களை நோக்குங் கால் இவை இன்னஇன்ன நாயன்மார்க்குரிய சிற்பங்களாகும் எனத் திட்டமாகத் தெரிந்து கொள்ளுதற்குரிய அடையாளங்கள் இச் சிற் பங்களில் தெளிவாகப் புலனாதல் காணலாம்.

**சொல்லோவியமும்; கல்லோவியமும் :**

இச்சிற்பங்கள் யாவும் குறித்த அடியாரை மட்டும் குறிப்பிடும் முறையில் தனித் திருவுருவ மாக அமைக்கப்படாமல், அத் திருத்தொண்ட ரது சிறப்புக்குரிய வாழ்க்கை நிகழ்ச்சியினி டையே அவ்வடியவரைக் குறித்துக் காட்டும் முறையில் வரலாற்றுச் சிற்பங்களாக அமைக்கப் பெற்றுள்ளன. இச்சிற்பங்களிற் குறிப்பிடு தற்குரிய நாயனாரது திருவுருவத்துடன் அவரது வாழ்க்கை நிகழ்ச்சியிற் பிணைந்துள்ள பிறரது உருவமும் செயல்களும் செயல்களுக்குரிய சூழ் நிலைகளும் அவரவர் உள்ளக் குறிப்புக்களின் வெளிப்பாடாகிய மெய்ப்பாடுகளுடன் தெளி வாக அமைத்துக் காட்டப் பெற்றுள்ளன. அன்றியும் அவ்வச் சிற்பத்திற் சிறப்பாகக் குறிப் பிடுதற்குரிய திருத்தொண்டரது திருவுருவம் அவருடைய வெவ்வேறு நிகழ்ச்சிகளைக் குறிப்

பிடும் நிலையில்நிகழ்ச்சிகள்தோறும் தொடர்ந்து இடம்பெற்றிருத்தலையும் அத்திருத்தொண்டர் வழிபட்ட திருக்கோயிலும் அவர்க்கு அருள் புரியும் நிலையில் இறைவன் அம்மையப்பராக விடைமீது எழுந்தருளிக் காட்சி நல்குதல் ஆகிய சிறப்புடைய நிகழ்ச்சியும் இடம் பெற்றிருத்தலையும் இச்சிற்பங்களிற் காணலாம். திருத்தொண்டத் தொகையிற் போற்றப் பெற்றுள்ள அடியார் வரலாறுகளிற் சிறப்புடைய வரலாற்று நிகழ்ச்சிகளை உருவாக்கிக் காட்டும் முறையில் அமைந்த இச்சிற்பங்கள், சேக்கிழாரடிகள் அருளிய திருத்தொண்டர்புராணமாகிய சொல்லோவியத்துடன் ஒருங்கு வைத்து உணர தக்க கல்லோவியமாகத் திகழ்கின்றன.

**தில்லைவாழ் அந்தணர் :**

இராசராசபுரத் திருக்கோயில் விமானத்தின் வெளிப்புறத்தில் அடிப்பக்கத்துப் பட்டியல் பகுதியில் தென்கீழ் முனையிலிருந்து தொடங்கி, வடகீழ் முனையில் முடியும் திருத்தொண்டர் தொகையடியார்களின் சிற்ப வரிசையில் தென்கீழ் முனையில் முதலானதாக அமைந்தது தில்லை வாழ் அந்தணர்க்குரிய சிற்பமாகும் இதன்கண் வலமிருந்து இடம் முதற்கண் கோயிலும் அதனை நோக்கி முறையே குடையும் சாமரையும் திருவமுதும் தாங்கி நிற்கும் நிலையில் முந்நூலணிந்த அந்தணர் மூவரும் உள்ளமை காணலாம்.

''பொங்கிய திருவில் நீடும்
பொற்புடைப் பணிகள் ஏந்தி
மங்கலத் தொழில்கள் செய்து
மறைகளால் துதித்து மற்றும்
தங்களுக் கேற்ற பணியில்
தகும்பணி தலைநின் றுய்த்தே
அங்கணர் கோயி லுள்ளால்
அகம்படித் தொண்டு செய்வார்''

எனச் சேக்கிழாரடிகள் குறித்த முறையில் கூத்தப்பெருமான் திருக்கோயிலில் அணுக்கத் தொண்டினுக்கு உரியராய் விளங்கும் தில்லை வாழ் அந்தணர்களாகிய திருக்கூட்டத்தினைக் குறித்தமைந்த இச் சிற்பத்தில் ஆயிரவர்க்கு ஒருவர் என்ற கருத்தில் மூவாயிரவரையும் குறிக்க அந்தணர் மூவர் இடம் பெற்றுள்ளமை காணலாம். இவ்வாறே திருப்பனந்தாள் திருக்கோயிலில் உள்ள திருத்தொண்டத் தொகைச் சிற்ப வரிசையிலும், தில்லைவாழ் அந்தணரைக் குறிக்கும் கருத்தில் அந்தணர் மூவர் அமர்ந்துள்ளமை ஒப்புநோக்குதற்குரியதாகும்.

**சேரமான் பெருமாள் கதை :**

சேரமான் பெருமாள் பட்டத்து யானை மேல் அமர்ந்து தனக்குப் பின் ஏவலரொருவர் உடன்வர நகர்வலம் வரும் காட்சியும், அங்ஙனம் யானைமேல் உலாவரும் சேரமான் உவர் மண் ஊறி மேனிவெளுத்த வண்ணான் ஒருவனை நெடுந்தொலைவிற் கண்டு சிவனடியார் எனக் கொண்டு, யானையின் கழுத்தினின்றும் இறங்கி நின்று, இரு கைகளையும் தலைமேற் குவித்துத் தொழ, அது கண்டு சிந்தை கலங்கிய வண்ணான் யாரென்று அடியேனைக் கொண்டது? அடியேன் வண்ணான் என்று சொல்லி இறைஞ்சி நிற்க, அது கேட்ட சேரமான் பெருமாள் அடியேன் அடிச்சேரன் என்று கூறி நிற்கும் காட்சியும், இதன்கண் இடம் பெற்றுள்ளமை காணலாம். பெரியபுராணம் சேரமான் பெருமாள் நாயனார் புராணத்தில் 17 ; 18 ; 19 ஆம் செய்யுட்களிற் கூறப்பட்ட நிகழ்ச்சியினை விளக்கும் முறையில் இச்சிற்பம் அமைந்திருத்தல் அறியத் தகுவதாகும். கழறிற்றறிவாராகிய இவர் சேர நாட்டு வேந்தராய் முடி சூட்டப் பெற்றுத் திருவீதியில் உலாவரும்போது உவர் மண்ணூறிய மேனியினையுடைய வண்ணானைக் கண்டு சிவனடியார் வேடம் என்று தொழுத அன்பின் பெருமை குறித்து, இவ்வேந்தர் பெருமானுக்கு வண்ணானைக் கும்பிட்டார் என்றதொரு பெயரும் வழங்குவதாயிற்று.

இனி இச்சிற்பம் சேரமான் பெருமாள் பாணபத்திரரை வரவேற்ற செய்தியைக் குறிப்பதென்று தென்னிந்தியக் கல்வெட்டுத் துறையினர் குறித்துள்ளனர். சுந்தரரும் சேரமானும் யானையின்மீது அமர்ந்து திருக்கோயிலுக்கு ஏகியதைக் குறிப்பதென்று டாக்டர் மா. இராமாணிக்கனார் அவர்களும் கருதுவர். திருவாலவாயிறைவர் அருளிய திருமுகத்துடன் வந்த பாணபத்திரர் சேரமான் பெருமாளது அரண்மனையை அடைந்து தாம் வந்த செய்தியை வாயில் காவலர் மூலம் அரசர்க்கு அறிவிக்க, அறிந்த சேரமான் மாளிகையின் புறத்தின் எதிர்வந்து பாணபத்திரரை வணங்கி வரவேற்று மாளிகைக்குள் அழைத்துச் சென்றார் எனப் பெரியபுராணம் கூறும். யானையுடன் எதிர் சென்று அழைத்ததாகப் பெரியபுராணத்தில் சேக்கிழாரடிகள் கூறவில்லை. இச்சிற்பத்தில் இரண்டு யானைகள் இடம் பெற்றிருத்தலை எண்ணி, ஒரு யானையின் மேல் நம்பியாரூரரும், மற்றொன்றின்மேல் சேரமான் பெருமாளும் செல்லும் நிலையில் அமைந்ததாகக் கருதுதல் இச்சிற்பத்தின் அமைப்பினைக் கூர்ந்து நோக்காமையால் நேர்ந்த பிழையாகும். இச்சிற்பத்தில் வலமிருந்து இடமாக முதற்கண் அமைந்த யானையில் சேரமான் உலாவரும் சேய்மைக் காட்சியும், அதனையடுத்து அவ்வேந்தர் பெருமான் யானையை விட்டுக் கீழிறங்கி நிலமிசை நின்று அடியார் வேடத்தைக் கும்பிடும் அண்மைக் காட்சியும் என இருவகை நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளமை நுணுகி நோக்கி அறியத் தகுவதாகும். சேய்மையில் உள்ள யானையின் மேல் ஏவலன் ஒருவன் பின்னிருந்து குடைபிடிக்க யானையின் பிடரிற் சேரமான் அமர்ந்திருத்தலும், அண்மையிலுள்ள யானையின் மேல் குடைபிடிக்கும் ஏவலன் மட்டும் அமர்ந்திருக்கச் சேரமான் யானையை விட்டுக் கீழிறங்கித் தலைமேற் கை குவித்து வணங்கி நிற்றலும் ஆகிய வேறுபாட்டினைக் கூர்ந்து நோக்குங்கால், யானையொடு தொடர்ந்த இவ்விரு காட்சிகளும் சேரமான் பெருமாளாகிய ஒருவர் செயலையே குறிக்கும், என்னும் உண்மை இனிது புலனாகும்.

**பரமனையே பாடுவார் :**

இனி ''பரமனையே பாடுவார்'' என்னும் தொகை அடியாரைக் குறித்த சிற்பத்தில் நந்தி

யும், கோயிலும் அமைந்து இருத்தலும், நந்தியின் பின்னே கோயில் முற்றத்தில் இசைவல்லார் மூவர் ஒருங்கு அமர்ந்திருந்து தாளமிட்டுப் பாடுதலும் காணலாம். இச்சிற்பத்தில் பரமனையே பாடுவார்க்கு மூன்று உருவங்கள் அமைக்கப் பெற்றிருத்தலின் நோக்கம் இசை பாடும் அடியார்கள் தமிழ்ப் பாடல்களையும் வடமொழிப் பாடல்களையும் இந்நாட்டில் வழங்கும் பிற திசை மொழிப் பாடல்களையும் பாடும் நிலையில் மூவகையினராக இருத்தலால் சிவனடிப் பரவும் தெய்வ இசையினைக் கற்றுவல்ல இம் மூவகையினரும் பரமனையே பாடுவார் என்னும் திருக்கூட்டத்தினராகவே போற்றப் பெறுவர் என்பது அறிவித்தற் பொருட்டெனக் கொள்ள வேண்டியுள்ளது. இந் நுட்பம்:

''தென்றமிழும் வடகலையும்
தேசிகமும் பேசுவன,
மன்றினிடை நடம்புரியும்
வள்ளலையே பொருளாக,
ஒன்றியமெய் யுணர்வோடும்
உள்ளுருகிப் பாடுவார்,
பன்றியுடன் புட்காணாப்
பரமனையே பாடுவார்''

எனச் சேக்கிழாரடிகள் தரும் விளக்கத்தால் இனிது புலனாதல் காணலாம். ''தமிழென்பது வடவெழுத் தொரீஇ வந்த எழுத்தானே கட்டப்பட்ட வாக்கியக் கூறுகளும், இயலிசை நாடகங்களும் என்று சொல்லப்படா நின்ற மூன்று தமிழ்களும்'' என விளக்கங்கூறிய சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர், ''தேசிகம் என்றது-இயற்சொல், திரிசொல்; திசைச்சொல் வடசொல் என்று சொல்லப்படா நின்ற சொற் பிரயோகம்'' எனத் தேசிகத்தைப் பற்றி விளக்குதலால் இந்நாட்டில் தமிழும் வடமொழியும் அல்லாத இவற்றின் சார்புடையனவாய் வழங்கும் திசைமொழிகளின் இசைப் பாடல்கள் யாவும் இசையாசிரியர்களால் தேசிகம் என வழங்கப் பெற்றன என்னும் உண்மை இனிது புலனாதல் காணலாம்.

### முழுநீறு பூசிய முனிவர்:

தொகை அடியாராகிய இவரைக் குறிக்கும் சிற்பத்தில், திருக்கோயிலும், கோயிலின் திருமுன்றிலில் உடம்பு முழுவதும் திருநீறு பூசிய அடியார்கள் அறுவர் அமர்ந்துள்ளனர். இச்சிற்பத்தில் உள்ள அடியார் திருவுருவங்கள் ஆறும் சைவ சமயத்தினைச் சார்ந்த அறுவகை அகச் சமயங்களை மேற்கொண்டொழுகும் அடியார்கள் அறுவரையும் குறிக்கும் நிலையில் அமைந்தன. அப்பாலும் அடிச் சார்ந்தாரைக் குறிக்கும் சிற்பத்தில் இறைவன் எழுந்தருளிய திருக்கோயிலும், அத் திருக்கோயிலை இறைஞ்சிப் போற்றும் நிலையில் அடியார் திருவுருவங்கள் மூன்றும் இடம் பெற்றிருத்தல் காணலாம். நம்பியாரூரரால் திருத்தொண்டத் தொகையில் ''அப்பாலும் அடிச் சார்ந்தார்'' எனப் போற்றப் பெற்ற இத் திருக்கூட்டத்தார் நம்பியாரூரர் காலத்திற்கும், அவர் நிலவிய தமிழகமாகிய இடத்திற்கும், அப்பாற்பட்ட நிலையில் உள்ள சிவனடியார்கள் என்பது விளங்க, தமிழ்நாட்டுக்கு அப்பாலுள்ள அடியாரைக் குறிக்கும் நிலையில் ஒரு திருவுருவமும், நம்பியாரூரர்க்குக் காலத்தால் முற்பட்ட அடியாரைக் குறிக்கும் நிலையில் ஒரு திருவுருவமும், நம்பியாரூரர் காலத்திற்குப் பின்தோன்றும் அடியாரைக் குறிக்கும் நிலையில் ஒரு திருவுருவமும் ஆக மூன்று திருவுருவங்கள் அமைக்கப்பெற்றுள்ளன எனக் கருத வேண்டியுள்ளது.

''மூவேந்தர் தமிழ்வழங்கும் நாட்டுப் கப்பால்
முதல்வனார் அடிச்சார்ந்த முறைமை
யோரும்
நாவேய்ந்த திருத்தொண்டத்தொகையிற்கூறும்
நற்றொண்டர் காலத்து முன்னும்பின்னும்
பூவேய்ந்த நெடுஞ்சடை மேல் அடம்பு தும்பை
புதியமதி நதியிதழி பொருந்த வைத்த
சேவேந்து வெல்கொடியான் அடிச் சார்ந்தாரும்
செப்பிய அப்பாலும் அடிச் சார்ந்தார்
தாமே''

எனச் சேக்கிழார் கூறும் விளக்கம் இச்சிற்ப அமைப்புக்கு ஆதரவாக அமைந்துள்ளமை இங்கு நினைக்கத் தருவதாகும்.

### உடைய நம்பிக்கு ஓலம் என்றருளினபடி:

காவிரியின் தென்கரையிலுள்ள திருக் கண்டியூரைச் சேரமான் பெருமாளுடன் வழிபட்டு மகிழ்ந்த நம்பியாரூரர் காவிரியின் வடகரையில் திருவையாறு எதிர் தோன்றக் கண்டு கடல்போற் பெருகி வரும் காவிரியைக் கடந்து ஐயாறன் திருவடிகளைத் தொழுதற்கு எண்ணிப் 'பரவும் பரிசொன்று அறியேன் நான்' என்னும் முதற்குறிப்புடைய திருப்பதிகத்தைப் பாடிப் பாடல்தோறும் 'ஐயாறுடைய அடிகளோ'' என அழைத்த பொழுது ஐயாற்றிறைவர், ஒன்றும் உணர்வால் சராசரங்கள் எல்லாம் கேட்க ''ஓலம்'' என மொழிந்தருளினமையாற் பொன்னி நதி மேல்பால் வெள்ளம் ஒதுங்கி நிற்க, ஆரூரர்க்கு நெறி காட்டிய நிகழ்ச்சியைக் குறிப்பது இச்சிற்பமாகும். இங்ஙனம் காவிரியாறு, உடைய நம்பிக்கு விலகி நின்று வழி காட்டுமாறு ஐயாற்றிறைவர் 'ஓலம்' என்று அருள் செய்த நிகழ்ச்சியையே இச்சிற்பம் குறிக்கின்றதென்பது, உடைய நம்பிக்கு ஓலமென்றருளினபடி என இதன் மேற் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டுத் தொடராலும்,

''மன்றில் நிறைந்து நடமாட
வல்லார் தொல்லை ஐயாற்றிற்
கன்று தடையுண் டெதிரழைக்கக்
கதறிக் கனைக்கும் புனிற்றாப்போல்
ஒன்று முணர்வால் சராசரங்கள்
எல்லாம் கேட்க ஓலம் என
நின்று மொழிந்தார் பொன்னிமா
நதியும் நீங்கி நெறிகாட்ட''

எனவரும் சேக்கிழாரடிகள் வாய்மொழியாலும் நன்கு துணியப்படும். இதன்கண் இடமிருந்து வலம் கண்டியூர்த் திருக்கோயிலும் சேரமான் பெருமாள் கைகுவித்து இறைஞ்சி உடன் நிற்கக் காவிரியின் தென்கரையில் நின்று

கொண்டு வடகரையிலுள்ள திருவையாற்றுக் கோயிலை எதிர் நோக்கிய நிலையில் வலத் திருக்கையினால் அழைத்து நிற்கும் நம்பியா ரூரரும், அடுத்துக் காவிரியாறும் அதன் பெரு வெள்ளம் மேல்பால் நிற்க நடுவில் வழியுண்டா கும்படி அதன் வடகரையிலுள்ள திருவை யாற்றுக் கோயிலினின்றும் 'ஓலம்' என்றதோர் ஓசை தோன்றி விரிந்த அடையாளமும், அதன் படி ஆற்றின் நடுவிலே வழியமைந்துள்ளமையும் காவிரியாற்றுப் பெருவெள்ளத்தில் மீன்களும் மரங்கள் முதலியனவும் செறிந்துள்ளமையும் காணலாம்.

இச் சிற்பத்தின் மேல் அமைந்த கல்வெட் டில் 'ஓலமென்றருளினபடி' என்ற தொடரில் மகரம் வகரம் போற் காணப்படுதலால் இதனை 'ஓலைவென்றருளினபடி' எனப் படித்து, தென் னிந்தியக் கல்வெட்டுத் துறையினர் கூறும் விளக்கம் இச் சிற்ப அமைப்புடனும் உடைய நம்பிகள் வரலாற்றோடும் பொருந்துவதாக இல்லை.

**திருத்தொண்டத் தொகைச் சிற்பங்கள்:**

தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருப்பனந் தாள் திருக்கோயிலில் திருத்தொண்டத்தொகை அடியார்களின் வரலாற்றுச் சிற்பங்கள் அமைக் கப் பெற்றுள்ளன. மேற்கு நோக்கிய சந்நிதியை யுடைய இத் திருக்கோயிலின் உட்கோபு ரத்தை ஒட்டித் தெற்கு வடக்காக அமைந்த மதிற்சுவரின் உட்புறமாக வடமேற்குப் பகுதி யில் திருத்தொண்டத்தொகை அடியார்களின் சிற்பங்கள் மூன்று வரிசைகளாக இடம் பெற்றி ருத்தல் காணலாம். இவ்வரிசைகளின் தொடர் பாக அமைந்த பிற்பகுதி, பிற்காலத்தில் மதிலை யொட்டித் தடுக்கப்பட்டுள்ள அறையின் குறுக் குச் சுவரால் மறைக்கப்பட்டிருத்தலால், சுவரின் வடபுறத்தேயுள்ள சிற்ப வரிசைகளைப் படம் எடுக்க இயலவில்லை.

இச் சிற்பங்கள் யாவும் தாராசுரச் சிற்பங் களை ஒத்துத் திருத் தொண்டத் தொகையி லுள்ள வரிசை முறைப்படி அமைக்கப்பெற்றி ருத்தலையும், தில்லை வாழ் அந்தணராகிய மூவாயிரவரைக் குறிக்க ஆயிரத்திற்கு ஒருவர் என்ற முறையில் அந்தணர் மூவர் திருவுருவம் முதற்கண் இடம் பெற்றிருத்தலையும் நோக் குங்கால், இராசராசபுரத் திருக்கோயிற் சிற்பத் திற்கும் திருப்பனந்தாளிலுள்ள இச் சிற்பத்திற் கும் நெருங்கிய தொடர்புண்மை இனிது விளங் கும். இங்கு அப்பூதியடிகளைக் குறித்தமைந்த சிற்பத்தில் அப்பூதியார் மனைவியார் விடந் தீண்டியிறந்த தம் மைந்தனைப் பாயிற் சுருட்டு தலும், மைந்தனைத் தீண்டிய பாம்பு படம் விரித்த நிலையில் வாழையில் சுற்றிக்கொண் டுள்ளமையும், அப்பூதியார் மகனார் மூத்த திருநாவுக்கரசு, அப்பரடிகளை அமுது செய் வித்தற்கென வாழையிலையினை அரியும் நிலை யில் விடந்தீண்டியிறந்து, திருநாவுக்கரசால் உயிர் பெற்றெழுந்த வரலாற்றை அறிவுறுத் தும் வரலாற்றுச் சான்றாதல் காணலாம்.

---

## உண்டோ துயரம் பின்?

முன்பிறவிகளில் செய்த பிராரத்த வினைகளை, எவராயிருந்தாலும் அநுபவித்தே தீர்த்து ஒழிக்க வேண்டும். அங்ஙனம் அநுபவித்தே பிராரத்த வினைகளைத் தீர்க்க வேண்டுமாயின், எத்தனை பிறவி களை நாம் எடுக்க வேண்டுமோ? என்று, நாம் தளர்ச்சியும் கவலையும் அடைய வேண்டுவதில்லை. இறைவனின் திருவடிகளில் அடைக்கலம் புகுந்து, அவனையே தஞ்சமாக அடைந்தால், நமக்குப் பிறவி யினால் யாதொரு துன்பமும் நேர்தல் இல்லை. நாம் பிறவிப் பிணியினின்று விடுபட்டு நலம் பெற்று உய்யலாம்.

இறைவன் நம்மை உடையவன். நாம் அவனுடைய உடைமை. நம்மைப் போன்றவர்களை உய்விப்ப தற்காகவே, இறைவன் வடமதுரையில் கண்ணபிரானாகத் தோன்றியருளினான் என்று, திண்ணமாகத் தெரிந்து கொண்ட ஞானாசிரியனின் திருவடிகளைப் பற்றுக் கோடாகக் கொண்டவர்களுக்கு, பிறவி யினால் நேரக்கூடிய துன்பங்கள் சிறிதும் நேரா. ஞானாசிரியனாகிய குருவின் திருவடிகளைத் தஞ்ச மாகப் பற்றிக் கொண்டால், நமக்குப் பிறவித் துன்பங்கள் நீங்கும்.

உடைமைநான் என்றும், உடையான் உயிரை
வடமதுரை வந்துதித்தான் என்றும்,—திடமாக
அறிந்தவன்றன் தாளில் அடைந்தவர்க்கும் உண்டோ?
பிறந்துபடும் நீள்துயரம் பின்.

—ஞானசாரம்.

[உடைமை-ஒருவனுக்குரிய பொருள், சொத்து. உடையான்-உடைமைக்குத் தலைவன். திடமாக- உறுதியாக. அறிந்தவன்-குரு; தானும் அறிந்து பிறருக்கும் அறிவிப்பவன் ஆதலின், 'அறிந்தவன்' என்று குருவைக் குறிப்பிட்டார். உண்டோ? என்னும் வினா, இல்லை என்பது உணர்த்திற்று. 'உடை யான் உயிரை' என்பதனை 'உயிரை உடையான்' என்று மாற்றிப் பொருள்கொள்க. 'அறிந்தவன்' என்பதனை ஒரு சொல்லாகக் கொள்ளாமல், ''அறிந்து அவன்தன்'' என இரு சொல்லாகவும் பொருள் கொள்ளலாம். முன்னது வினையால் அணையும்பெயர். பின்னது வினையெச்சம். அவ்வினையெச்சம், 'தாளில் அடைந்தவர்க்கும்' என்பதிலுள்ள அடைதல் என்னும் வினையைக் கொண்டு முடியும்.]

—ஆசிரியர்.

---

# — வாலி —

# ஒரு புதிய கண்ணோட்டம்

''செந்தமிழ் வித்தகர்''
பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தம், M.A., சென்னை.

இராம காதையில் மிகச் சிறந்து விளங்கும் பாத்திரங்களுள் வாலியும் ஒருவன். வான்மீகத்தில் ஒரு குரங்காகவே அவன் காட்சியளிக்கின்றான். அங்கு நடைபெறும் இராம-வாலி சொற்போரும் இருவர் தரத்தையும் உயர்த்துவதாக இல்லை. ஆனால் கம்பநாடன் படைத்த வாலி ஒப்புயர்வற்றவனாக விளங்குகிறான். கம்பநாடன் காப்பியத்தில் ஈடு இணையற்ற வீரர்களாய், பரம்பொருளே நேரே வந்து தம்மை அழிக்க வேண்டிய சிறப்பும் பெற்று விளங்கும் மாவீரர் மூவராவர். இரணியன், வாலி, இராவணன் என்ற மூவருள் இறுதிவரை விட்டுக் கொடுக்காமல் இறந்தவர் இரணியனும், இராவணனுமாவர். வாலியைப் பொறுத்தமட்டில் ஒரு புதிய உத்தியைக் கையாள்கிறான் கவிச் சக்கரவர்த்தி.

இப்புதிய உத்திக்கு அவன் வாலியின்மூலம் வடிவு கொடுக்க முடிவு செய்தான். அதன் பயனாக வீரம் எது? அறவீரம் எது? எந்த ஒரு செயலையும் அறவீரம் என்று கூற முடியுமா? அல்லது காண்பான் காட்சி அளவில் இவை முடிவு செய்யப் படுகின்றனவா? என்பவை போன்ற அடிப்படை வினாக்களையும் ஆராயும் நிலை ஏற்பட்டுவிட்டது. குற்றமற்ற வீரம் என்றால் என்ன? என்ற வினாவும் தோன்றி விட்டது.

இவ்வகையான வினாக்களுக்கும் விடை காண வேண்டிய சூழ்நிலையில் இப்பாத்திரத்தைக் கவிஞன் படைத்துவிட்டமையின் ஏனைய பாத்திரங்கள் போலல்லாமல் வாலி தனித்து விளங்குகிறான். காப்பியத் தலைவனாகிய இராமனை வாலி ஏசுகின்ற ஏச்சுக்கு அளவே இல்லை. அளவாலும், தரத்தாலும் அவை வலிமையான வினாக்கணைகள் என்பதை, அவற்றை ஒருமுறை படிப்பாரும் உணராமல் இருக்க முடியாது. இறுதிவரை இராமனோ அன்றி நாமோ விடைகூற முடியாத வினாக்கள் பலவற்றைத் தொடுக்குமாறு செய்கிறான் கவிஞன். அவ்வாறு ஏசிய பிறகு திடீரென்று வாலி மனம் மாறி இராமனை நோக்கித் 'தீயன பொறுத்தி என்றான் - சிறியன சிந்தியாதான்' (125) என்று வாலி கூறுவதாகப் பாடல் செல்கிறது. இத்துணைத் தூரம் இராமனை ஏசிய ஒருவனைச் 'சிறியன சிந்தியாதான்' என்று கவிஞன் கூறுவது வியப்புத்தான்!

இன்று ஆயிரக்கணக்கான பேர்களால் வாலி வரலாறு பேசப்பெறுகின்றது. ஆனால் யாரும் வாலியின் இந்த மாற்றத்திற்குக் காரணத்தை ஆய்ந்து அமைதிதரும் விடை கூறின தாகத் தெரியவில்லை. முன்வாலி, இடைவாலி, பின்வாலி என்று பிரித்துக் கூறுகிறார்களேனும் இம்மூன்று மனமாற்றம் வாலியின்பால் ஏன் எவ்வாறு உண்டாயிற்று எனக் கூறவில்லை. அன்றியும் 'வாலிவதம்' என்றும் 'வாலிமோட்சம்' என்றும் இரு வேறு கருத்துக்கள் பரவலாகப் பேசப்படுகின்றன. வாலிவதம் என்பார் அவன் ஓர் அம்பினால் உயிர் விட்டதைக்கூட மறந்து ஏதோ பலநாள் அவன் வதைக்கப்பட்டது போலக் கருதிக்கொண்டு இப்பெயர் சூட்டுகின்றனர். இவ்வாறு கூறும்பொழுது வதைக்கப் படவேண்டிய அளவு அவன் பெருங்குற்றம் இழைத்தான் போலும் என்றும் எண்ணத் தோன்றுகிறது.

வாலிமோட்சம் என்பார் கூற்றில், பரம்பொருள் கையால் இறக்கும் பேறு பெற்றவன் என்பது குறிப்பாகத் தொனிக்கிறது. வாலியின் சாவு வதமானாலும் மோட்சமானாலும், கம்பநாடன் காட்டிய முறையில் ஒரு புதிர் இருக்கத்தான் செய்கிறது. இப்புதிரை அவிழ்க்க முடியுமா என்ற முயற்சியே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

கம்பநாடன் கூற்றை ஆதாரமாகக் கொண்டே இவ் வாராய்ச்சி நடைபெற வேண்டும். கவிஞன் பாடலையொட்டி இந்நிகழ்ச்சி நடைபெறும்' முறையைக் காணலாம்.

இராமனிடம் நட்புப் பூண்டான் சுக்ரீவன். அவன் மனைவியை இழந்தவன் என்று அறிந்தவுடன் இராமன் 'உலகம் ஏழினோடு ஏழும் வந்து அவன் உயிர்க்கு உதவி விலகும் எனினும் வில்லிடை வாளியின் வீட்டி, தலைமையோடு, நின்தாரமும், உனக்கு இன்று தருவன் புலமையோய்! அவன் உறைவிடம் காட்டு' (நட்பு 72) என்று கூறிவிட்டான். இவ்வாறு கூறும் பொழுது வாலியின் இயல்பை இராமன் அறியவில்லை என்று கூற முடியாது. இதற்கு முன்னரே மாருதியாகிய சொல்லின் செல்வன் வாலியைப்பற்றி 13 பாடல்களில் விவரமாகக் கூறிவிட்டான். இவ்வியல்புகள் பின்னர் விரிவாக ஆராயப்படும். இங்ஙனம் கூறும்பொழுது

பொருதற்கு எதிர்ப்பட்டவர் யாவராயினும் அவருடைய வலியிற் பாதி வாலிக்குச் சென்று விடும் என்று தனிச் சிறப்பையும் அனுமன் கூறி விட்டான்.

'கிட்டுவார் பொரக் கிடைக்கின், அன்னவர்
பட்ட நல்வலம் பாகம் எய்துவான்
எட்டு மாதிரத்து இறுதி, நாளும்உற்று
அட்ட மூர்த்தி தாள் பணியும் ஆற்றலான்'
—நட்பு40

எனவே வாலியையும், அவன் வீர வன்மை யையும் நன்கு அறிந்த பின்னரே இராமன் சுக்கி ரீவனிடம் 'தலைமையோடு தாரமும் தருவன்' என்று பேசுகிறான் என்றால், வாலியை எவ் வாறு கொல்லவேண்டும் என்பதை இராமன் இப்பொழுதே முடிவு செய்துவிட்டான் என்று தான் கொள்ளவேண்டும். இந்த ஊகம் சரியா னதே என்பதைக் கம்பன் பாடலும் சான்றாக நின்று அறிவுறுத்துகின்றது. சுக்ரீவனைப் பார்த்து ''நீ வாலியை அழைத்து அவனுடன் போரிடுக' என்று கூறவந்த இராகவன்,

'அவ்விடத்து, இராமன், 'நீ அழைத்து,வாலி ஆனதுஓர்
வெவ்விடத்தின் வந்துபோர் விளைக்கும் ஏல்வை, வேறுநின்று,
எவ்விடத் துணிந்து அமைந்தது; என்கருத்து இது' என்றனன்
தெவ் அடக்கும் வென்றியானும் 'நன்றுஇது' என்று சிந்தியா'
—வா. வ. 10

'வேறு நின்று (மறைந்து நின்று) எவ்விடத் துணிந்து அமைந்தது என் கருத்து இது'என்று கூறினான். இதனைக் கேட்ட சுக்ரீவன் இராம னுடைய இச் செயலைச் சிந்தித்தான் என்ப தால் இது சீரிய செயலன்று என்பதைச் சுக் ரீவன் உணர்ந்தாலும் இராமன் தக்க காரண மின்றி இம் முடிவுக்கு வரமாட்டான் எனக் கருதி வாளா இருந்து விட்டான்.

சுக்ரீவன், வாலி இருவர் போரிடை, சுக் ரீவனை இரு கைகளாலும் தூக்கி நிலத்தில் எறிவதற்கு வாலி முற்படுகையில் இராமன் அம்பு, வாலியின் மார்பில் பாய்ந்தது. இராம னுடைய அம்பைக் கூட மார்பைத் துளைத்து அப்புறம் போகாமல் தடுத்து நிறுத்தும் ஆற் றல் பெற்ற ஒருவன் இராமகாதையில் உளன் எனின் அவன் வாலியே யாவான்.

இத்தகைய முறையில் தன் மார்பையும் பிளக்கும் ஆற்றலுடன் அம்பு எய்தவன்யாராக இருக்கும் என்று ஆராய்ந்த வாலி, தேவர் முத லியோர்க்கு இவ்வாற்றல் இல்லை என்பதால் 'ஒருவனே! இறைவர் மூவரோடும் ஒப்பான், செயல் ஆம்!' (69) என்ற முடிவுக்கு வந்து விட்டான். அனுமானத்தின் மூலம் வந்த இம் முடிவைச் சரிபார்ப்பதற்காகப் போலும், மார் பைப் பிளந்து செல்ல முயலும் அம்பைத் தன் கைகள் கால்கள், வால் ஆகியவற்றால் பற்றி ஓரளவு வெளியேஇழுத்து, எய்தவன் பெயரை அறிந்து கொள்ள முயன்றான்.

பூர்வ புண்ணியங் காரணமாக ஒரு சில ருக்கு ஞானம் வரச் சில எதிர்பாராச் செயல் கள் காரணமாகின்றன. திருப்பெருந்துறையில் ஞானம் பெறத் திருவாதவூரருக்குக் குதிரை வாங்க வேண்டும் என்ற செயல், காரணமாக அமைந்தது. அதேபோல, வாலி ஞானம்பெற வேண்டிய நேரம் வந்தவுடன், அந்த ஞானத் தைத்தரும் பெயரைக் கண்களால் காண வேண் டிய சூழ்நிலை உருவாயிற்று. எனவேதான் அம் பில் யார் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது என் பதை அறியும்விருப்பால் அவன் அம்பை இழுத் துப் பார்க்கும் ஆவல் தோன்றிற்று. அப்பெய ரைக் கண்டவுடன் தன் வாழ்வில் ஒரு மாற்றம் உண்டாகப் போகிறது என்பதை வாலி அறிந்து, எப்படியாவது அப்பெயரை அறிந்து கொள்ள வேண்டும் என்ற அவாவால் மட்டுமே அவன் அம்பை இழுத்தான்.

இரண்டு எழுத்துக்களாலாகிய ஒருபெயர் தான் அதிற் காணப்பெற்றது. ஆனால், அப் பெயரை வாலி கண்ட விதத்தைக் கவிஞன் மிக நுணுக்கமாக விளக்குகிறான்.

'இம்மையே எழுமை நோய்க்கும்
மருந்தினை 'இராமன்' என்னும்
செம்மைசேர் நாமந் தன்னைக்
கண்களில் - தெரியக்கண்டான்' (77)

இப் பாடலில் வரும் 'செம்மைசேர்நாமம்' 'கண்களில் தெரியக் கண்டான்' என்ற சொற் களை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். செம்மை சேர் நாமம் என்பது தன்னை நம்பியவர்களைச் செம்மையில் சேர்ப்பிக்கும் நாமம் என்ற ஆழ மான பொருளை யுடையது. எனவே, அது வீடு நல்கும் மந்திரம் என்ற கருத்தைக் கவி ஞன் மறைமுகமாகக் கூறிவிட்டான். இனிக் கண்டான் என்று கூறி இருந்தாலே போதுமா னது. காண்டல் கண்ணின் செயல் என்பதை யாவரும் அறிவர். அவ்வாறு இருக்கக் 'கண் களில் கண்டான்' என்பது வேண்டா கூறிய தாகும். இதனுடன் நில்லாமல் 'கண்களில் தெரி யக் கண்டான்' என்பது மேலும் ஒருபடி செல் வதாகும். கம்பனா இவ்வாறு தேவையற்ற இரு வார்த்தைகளைப் பெய்து பாடுகிறான்? ஆம்! மிக ஆழமானதும், பரம மறைபொரு ளானது மாகிய ஒரு கருத்தைத் தனக்கே உரிய முறை யில், இரண்டு சொற்களைத் தேவை இல்லா மல் பெய்வதன் மூலம் கூறிவிடுகிறான்.

கருத்தளவால் மட்டுமே காணக்கூடிய மந் திரத்தைக் கண்களாலும் காணும் பேறு பெற்ற வன் வாலி என்பதையும், ஏனையோர்போல ஊனக் கண்ணால் மட்டும் கண்டான் போலும் என்று நினைந்துவிட வேண்டா என்பதையும், அதன் சிறப்பை உடன் அறிந்துகொண்டான் என்பதையும் 'தெரிய' என்ற சொல்லால்விளக் குகிறான் கவிஞன். இதனைக் காணுமுன்பே 'மூவர்க்கும் முதல்வன்' நினைவு அவனுடைய புறமனத்தில் தோன்றிவிட்டது. அந்த நினை வை வலுவூட்டும் முறையில் நயன 'தீட்சை' நடைபெற்றுவிட்டது என்பதை அறிவுறுத் தவே 'கண்களில் தெரியக் கண்டான்' என்று கூறுகிறான் கவிஞன்.

புறமனத்தில் ஓர் எண்ணம் தோன்றிய பிறகு, நயன தீட்சையால் அது வலுப்பெற்று அகமனத்தில் புகுந்துவிட்டாலும், அது வேலை செய்யத் தொடங்கி அவனை முழுவதுமாக ஆட்கொள்ளச் சிறிது காலதாமதம் ஆகத்தான் செய்யும். இந்த இடைக்காலத்தில் புறமனம் (மேல்மனம்) தன் வேலையைச் செய்கிறது. விருப்பு, வெறுப்பு, சினம், ஆத்திரம் முதலிய வற்றால் பாதிக்கப்படுகின்றதும், இவற்றின் உறைவிடமாக உள்ளதுமான அவனுடைய மேல்மனம் இப்பொழுது வாலியிடம் வேலை செய்யத் தொடங்குகிறது.

மேல்மனத்தில் மேலாக நிற்பவை, மான உணர்ச்சியும் அதனுடன் தொடர்புடைய அகங் காரமுமாகும். தான் சுத்தவீரன் என்ற நினை வில் பெரிதும் அகங்காரம் கொண்டிருக்கும் வாலியால் இராமன் செயலை ஏற்க முடிய வில்லை. 'வில் அறம் துறந்த வீரன்' (71) என்று இராமனைக் கூறுவதன்மூலம், தான் அத னைத் துறவாதவன் என்று குறிப்பிடுகிறான். 'சூரியன் மரபும் இராமன் தோன்றலால் தொல்லை நல் அறம் துறந்தது' (78) என்று நினைத்தவுடன் எல்லையற்ற நாணத்தால் நகைப்பு உண்டாயிற்றாம் அவனுக்கு! இந்த நாணம் காரணமாக 'வெள்கிட மகுடம் சாய்க் கும்; வெடிபடச் சிரிக்கும்; மீட்டும் உள்கிடும்' இதுவும் தான் ஓர் ஓங்கு அறமோ?' (79) என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

இந்த வினாடிவரை அவன் மனத்தில் வெறுப்பு முதலிய உணர்ச்சி எதுவும் தோன்ற வில்லை. உண்மை வீரத்தின் அடிப்படையில் பிறந்த நாணமே தோன்றிற்று. எனவேதான் இராமன் அவன் எதிரில் தோன்றுகிறான். இராமனை எதிரே கண்டவுடன் வாலியின் அக மனத்தில் தூய அறிவும் ஞானமும் தோன்றுகின்றன. புறமனத்தில் இராமன் என்ற தசரதன் புதல்வனின் செயல் சினத்தை உண் டாக்குகிறது. எதிரே நிற்பவன் சாதாரண மனி தன் அல்லன் என்று கூறுகிறது, அகமனம். எதிரே நிற்கும் இராமனை வாலி 'கண்களில் தெரியக் காண்கிறான்'-புறக் கண்களில் மட்டும் காணும்பொழுது எதிரே தசரத குமாரன் என்ற மனிதன், பரதனின் முன் தோன்றியவன் நிற் கின்றான். இக் காட்சி உடன் மறைகிறது. அடுத்து, 'நீலக் கார்முகில் கமலம் பூத்து, மண் ணுற்று, விரிவில்ஏந்தி வருவது போலும் மாலை யான ஒரு காட்சி தோன்றுகிறது. கண்களி னால் மட்டும் கண்டபோது தசரத குமாரனும், கண்களில் தெரியக் கண்டபோது கார்முகில் கமலம் பூத்து நிற்கும் காட்சியும் தோன்றுகின் றன.

இவ்விரு காட்சிகளும் மாறி மாறி வருவ தால் குழம்புகிறான் வாலி. இக் குழப்பம் கார ணமாக அவனுடைய மனத்தில் ஒரு பெரும் போராட்டம் நிகழ்கிறது. புறமனத்தில் தோன் றும் இகழ்ச்சி காரணமாக இராமனைப் பல வாறாக ஏசுகிறான்.

'வீரம் அன்று, விதி அன்று; மெய்ம்மையின்
வாரம் அன்று; நின் மண்ணினுக்கு என்உடல்
பாரம் அன்று; பகை அன்று; பண்பு அழிந்து
ஈரம் இன்றி இதுஎன் செய்தவாறு அரோ(90)

என்று கூறும்பொழுது அவன் மனப்போராட் டம் உச்ச கட்டத்தை அடைகிறது. பகை இல் லாத ஒருவன் பண்பு மறந்து ஏன் தன்னைக் கொல்ல வேண்டும்? என்று கேட்கிறது புற மனம். தன் சிற்றறிவுக்குப் புலப்படாவிடினும் எங்கோ ஒரு காரணம் இருக்க வேண்டும்; அத னால்தான் பகை இன்றியும் இராமன் கொன் றான் என்று கூறுகிறது அவனுடைய அகமனம்.

முற்பகுதியில் புறமனத்தினால் ஆட்கொள் ளப்பெற்ற வாலி இராமனை ஏசுவது உண்மை தான். ஆனால் அவ்வாறு ஏசும்பொழுதேகூடத் தான் நினைப்பது சரிதானா என்ற வினாவை அவனுடைய அகமனம் கேட்டுக்கொண்டே இருக்கிறது. தன் சிற்றறிவுக்கும் உலகியல் அறத்துக்கும் கட்டுப்பட்டு நின்று கண்டால் இராமன் செயல் தவறுடையதுதான்; ஐயமே இல்லை! ஆனால் சிற்றறிவுக்கு மேற்பட்ட பேரறிவு ஒன்றும், உலகியல் என்பதற்கு மாறான உலகியல் கடந்த நிலை ஒன்றும் உண் டல்லவா? சிற்றறிவினால் மெய்ம்மை என்று ஏற்றுக் கொள்ளப்பெற்ற ஒன்று அவ்வறிவு வளர்ச்சியடையும்பொழுது ஏற்றுக் கொள்ளப் பட முடியாத ஒன்றாகிவிடலாம். அதேபோல் உலகியலில் இன்று தவறானது எனப்படும் ஒன்று, நாளை நியாயமானது என ஏற்கப்பட லாம். ஆனால், பேரறிவு காணும் நியாய அநி யாயங்கள் அவ்வாறு மாறுபடக் காரணமில்லை. தான் காணும் உண்மை, சாதாரண உலகியல் நிலையில் ஏற்கப்படுகிறதா இல்லையா என்பது பற்றிப் பேரறிவு கவலைப்படுவதில்லை.

வாலி, தான் பெற்ற நயன தீட்சையால் பேரறிவு விளங்கப் பெறுகிறான். அதன் பய னாக எதிரே நிற்பவனைக் கார்முகில் கமலம் பூத்த பரம்பொருளாகக் காண்கிறான். எனவே அப்பொருள் செய்யும், செய்கின்ற, செய்த செயல்களைத் தன் சிற்றறிவு கொண்டு ஆய்வது தவறு என்றும் உணர்கிறான். பேரறிவில் இவ் விளக்கம் தோன்று முன்னர்த் தான் இராமனை ஏசிய நிலை வருகிறது. ஏசும் பொழுதேகூட அகமனம் அவனை விழிப்படையச் செய்கிறது. அவ்விழிப்பு ஏற்பட்ட வுடன் அவன் காணும் காட்சி முற்றிலும் மாறுபட்டதாக அமைந்து விடுகிறது.

அவ்விழிப்பு ஏற்படுமுன் சிறப்புடையன, இன்றியமையாதன என்று அவனால் கருதிப் போற்றப்பெற்ற அறவீரம், உயிர் ஆகிய இரண் டும் விழிப்பு ஏற்பட்டவுடன் பொருளற்றவை யாக ஆகிவிடுகின்றன. தரையில் நின்று பார்க் கும்பொழுது கண்ணுக்கெட்டாத உயரமுடைய எவரெஸ்ட் சிகரம் 45,000 அடி உயரத்தில் பறக்கும்பொழுது பக்கத்தில் உள்ள சிறு குன்று டன் வேற்றுமை காணமுடியாதபடிச் சிறுத்து விடுகிறது. இவ்வேறுபாடு மலையைப் பொறுத் ததன்று. காண்பான் நிலையைப் பொறுத்து அமைவதாகும். அதேபோல உலகியல் நிலை

யில் நின்று காணும்பொழுது மிகப் பெரியவை, உயர்ந்தவை என்று கருதப்பெறும் உயிர், பகை, நட்பு, சாவு, வாழ்வு, என்பவை பார்வை மாறியவுடன் சிறியவையாகி விடுகின்றன. 'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்ற பழமொழியே இதற்குச் சான்று. வேந்தன் துரும்பாகிவிடுவதில்லை, ஆனால் துறவியின் பார்வை மாறிவிட்டதால் அரசன் துரும்புக்குச் சமமாகி விடுகிறான்.

பகை இல்லாதவனைக் கொல்லுதல், நேர் நின்று அறப்போர் செய்தல் என்பன, நம் போன்ற மன நிலையுடையார்க்கு மிக மிக உயர்ந்தவை. ஆனால் பேரறிவு விளக்கமும், அகமன விழிப்பும் பெற்ற நிலையில் இவை பொருளற்றவை. காரணம், கொல்வானும் இல்லை, கொல்லப்படுவானும் இல்லை. (கீதை அத்-2, சுலோ.19) இந்த நிலையை அடைந்து விட்ட வாலி இதோ பேசுகிறான்.

தாய்என உயிர்க்கு நல்கி,
தருமமும், தகவும், சால்பும்,
நீஎன நின்ற நம்பீ!
நெறியினில் நோக்கும் நேர்மை
நாய்என நின்ற எம்மால்,
நவை அற உணரலாமே?
தீயன பொறுத்தி!
என்றான்-சிறியன சிந்தியாதான்!
125

தாய் குழந்தைக்குத் தரும் மருந்து கசப்புடையதாய் இருக்கலாம்; குழந்தையின் கையையும், காலையும் இறுகப் பிடித்துக்கொண்டு தாய் மருந்தைப் புகட்டலாம். செயளலவில் இவை கொடுமை என்பதால் தாய் அன்பிலாள் எனக் கூற முடியுமா? அதேபோலச் செயலளவில் இராமன் செயல்கள் உலகத்தாரால் ஏற்றுக் கொள்ளக்கூடியன அல்ல. இதில் ஐயமே இல்லை. நாம் ஒழுங்கு, நேர்மை என்று கருதிப் போற்றும் கொள்கைகள் வேறு. ஆனால் பேரறிவும் இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. அர்ச்சுனனுக்குக் கண்ணன் செய்த உபதேசம் இதுதான். ஆனால் அவை தாயின் கொடுமை போன்றவை என்பதைப் பிறர் அறியமுடியாவிடினும் வாலி உணர்ந்துவிட்டானாகலின் 'தாய் என உயிர்க்கு நல்கி' என்று கூறுகிறான். மேலும் 'நெறியினின் நோக்கும் நேர்மை' என்றமையின் நீண்ட பார்வையால் அறியப்பட வேண்டியதைக் கிட்டப் பார்வையுடையார் அறியமுடியாது என்றுங் கூறுகிறான்.

பேரறிவுடையாரும் அகமன விழிப்புடையாரும் மட்டுமே காணக் கூடிய ஒன்றை 'நாய் என நின்ற எம்மால் நவ்வயற உணரலாமே' என்று கேட்டு, அது இயலாத காரியம் என்பதை 'உணரலாமே' என்பதில் வரும் வினா ஏகாரத்தால் பெற வைத்துவிட்டான் வாலி. இத்தகைய அறிவு விளக்கம்பெற்ற பொழுது அதுவரை மிகப் பெரியனவாக இருந்த 'அகங்காரம்–மமகாரம், சாவு–வாழ்வு, பகை–நட்பு என்பவை பொருளற்ற சிறியனவாக ஆகிவிடுகின்றன. இப்பொழுது முழு விளக்கம் பெற்றுவிட்டமையாலும், தன் சிற்றறிவினால் ஆராய்ந்து இராமன் 'வில் அறம் துறந்துவிட்டான்' என்று கூறியது தவறு என்று உணர்ந்துவிட்டமையாலும், 'தீயன பொறுத்தி' என்று கூறிவிட்டதாலும், அவனுடைய விளக்கம்பெற்ற மனநிலையைக் கவிஞன் 'சிறியன சிந்தியாதான், என்ற இரண்டு சொற்களால் விளக்கி விட்டான்

இத்தகைய அறிவு விளக்கம் பெறும் நல்லூழ் உடையவர்கள் விளக்கம் பெறும் வழிகளை ஆராய்ந்து பார்த்தால் பல உண்மைகள் வெளிப்படும். ஒரு சிலருக்குக் குருவின் மூலமாக விளக்கம் வரலாம். ஒரு வினாடி நேரத்தில் ஒரு விளக்கம் பெறுகிறவர்களும் உண்டு. சும்மா இரு, சொல் அற, என்ற சொற்களே அருணகிரியாருக்கு விளக்கம் தந்தன. 'ஓர் வார்த்தையுட்படுத்தாய்' என்று மணிவாசகர் கூறுவது அவர் திருப்பெருந்துறையில் விளக்கம் பெற்ற முறையை வெளிப்படுத்துகிறது. இதன் எதிராக நயனதீட்சை, ஸ்பரிச தீட்சை, திருவடி தீட்சை என்ற முறைகளும் உண்டு. ஆனால் வாலி பெற்ற தீட்சை தனித்தன்மை வாய்ந்தது. அம்பின்மூலம் தீட்சை பெற்றதாகப் பிற வரலாறு எங்கும் இல்லை. ஆம்! வாலி போன்ற வீரரும் எங்கும் இல்லையன்றோ?

இராமனுடைய அம்பு தன் உயிரைக் குடிக்கும் என்று முதலிற் கூறிய அதே வாலி, இப்பொழுது தன் கருத்தை மாற்றிக்கொண்டு பேசுகிறான். 'என்னுடைய உயிர் போகும் இந்த நேரத்தில் நின் கூர்மையான அம்பு ஒன்றால் அடியேனுடைய அறிவு விளக்கம் பெறும் வழியைச்செய்தாய்' என்ற கருத்தில் 'ஏவுகூர் வாளியால் எய்து, நாய் அடியனேன் ஆவிபோம் வேலைவாய் தந்து அருளினாய்' என்பதால் தன் உயிர் போதலுக்கும், அம்புக்கும் தொடர்பில்லை என்ற உண்மையைக் கூறியதுடன், அந்த அம்பு பேரறிவை விளங்கச் செய்தது என்றும் கூறுகிறான். இராமன் அம்பு வாலியின் உயிர் குடித்ததாகக் கூறுதல் 'காக்கை ஏறப் பனம்பழம் விழுந்தது' என்பது போலாகும். இக் கருத்தை வலியுறுத்தவே கவிஞன் ''எய்து ஆவிபோக்கும் வேலைவாய்'' என்று கூறாமல் 'ஆவிபோம் வேலைவாய்' என்று தன்வினையாகக் கூறுகிறான்.

கண்ணில் நோய் உடையவன் பொருள்களைக் காண முடிந்தாலும் செம்மையாகக் காண முடிவதில்லை. பொருளின் இயல்பையும் நிறத்தையும் உள்ளவாறு அறிய முடிவதில்லை. காரணம், அவனுடைய பார்வைக் கோளாறேயாம். ஆனால் அதே மனிதன் நோய் நீங்கப் பெற்றவுடன் முன்னர்க் கண்ட அதே பொருள்களைக் கண்டாலும் இப்புதிய பார்வையில் அவற்றின் நிறம் வடிவம் முதலியன மாறி இருக்கக் காண்கிறான். அறிவுடையவனாக இருப்பின் பொருள்கள் என்றும் உள்ளபடியேதான் உள்ளன என்பதையும், தன் பார்வைக் கோளாறு காரணமாக அவற்றின் வடிவையும் நிறத்தையும் பிறழ உணர்ந்த நிலைமையையும் அறிந்து கொள்கிறான்.

அதேபோல, தசரதகுமாரன் மறைந்திருந்து அம்பு எய்தல், தன் எதிரில் தன் மாட்டுப் பகைகொண்டு சுக்ரீவன் போரிடுதல், இராமனுக்கும் தனக்கும் பகை இன்மை, இருப்பினும் இராமன் தன் மார்பில் அம்பு எய்தல் முதலிய செயல்கள், விளக்கம் பெறாத வாலிக்கு ஒரு விதமாகக் காட்சியளித்தன. ஆனால் விளக்கம் பெற்ற பிறகு பகை, நட்பு, அம்புஎய்தல், மறைந்துநிற்றல், அறம்பிறழ்தல், வில்லறம் துறத்தல் முதலியவை பொருளற்றவையாய்க் காட்சி தருகின்றன. பகை-நட்பு, சாவு-வாழ்வு என்பவை சிறியனவாக ஆகிவிட்டமையின், அவற்றை விட்டுவிட்டுத் தன் அகமுகப் பார்வையை எதிரே நிற்பவன் மேல் செலுத்துகிறான். அவ்வகமுகப் பார்வையில் தசரத குமாரன் என்ற மனிதன் தெரியவில்லை. அவன் கண்டதை இதோ கூறுகிறான்.

அறிவு தந்தமையான் இக் காட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டதை உணர்ந்த வாலி, இப் புதிய காட்சியில் கண்டவற்றையும் உடன் கூறுகிறான். 'மூவர் நீ! முதல்வன் நீ! முற்றும் நீ! மற்றும் நீ! பாவம் நீ! தருமம் நீ! பகையும் நீ! உறவும் நீ! (127)பாவமும்-தருமமும் ஒருவனேயாகக் காட்சியளிப்பதை விளக்கம் பெற்றவாலி உணர்கிறான். விளக்கம் பெறாதபொழுதுபகை என்றும் உறவு என்றும் இருவேறு தனிப் பண்புகளாக இருந்தவை இப்பொழுது ஒன்றாகக் காட்சியளிக்கின்றன. ஒன்றாக உள்ள பொருளைப் பிரித்துப் பகை என்றும் உறவு என்றும் கூறுவது அறிவுடைமை யாகாது. எனவே பொருளில் பகையோ உறவோ இல்லை; அவை அதனை உணர்கின்றவன் உணர்ச்சி அளவில் மாறுபடுகின்றனவே தவிர வேறு இல்லை. ஒரு சிலர் தொடக்கூட முடியாத சூடு என்பதை ஒருசிலர் சாதாரணமாகக் குடிக்கக் காண்கிறோம்.

ஒரே பொருளினிடத்துப் பகை நட்புஎன்ற இரு பண்புகள் எவ்வாறு உறைய முடியும்என்று ஐயுறுவார்க்கு அது இயலும் என்பதை அறிவுறுத்த வாலி ஓர் உவமை கூறுகிறான் அடுத்த பாடலில்,

> ''யாவரும் எவையுமாய் இருதுவும் பயனும் ஆய்,
> பூவும் நல்வெறியும் ஒத்து, ஒருவ அரும் பொதுமையாய்
> ஆவ நீ ஆவது' என்று அறிவினோர் அருளினார்'' (129)

யாவரும் எவையுமாக உள்ளவன் ஒருவனே என்ற விளக்கம் தோன்றிய பிறகு, கொல்வான் கொல்லப்பட்டவன் என்ற இரண்டை நினைப்பது அறிவுடமையாகாது. பூவும் அதன் மணமும்போல் ஒன்றே இரண்டாய் விளங்கும் சிறப்பினை அறிவதே இவ்வறிவு விளக்கமாகும். விளக்கம் பெறாத பொழுது தம்பி பகைவனாகவும், அவனுக்கு ஏற்றுக்கொண்டு தன்மேல் அம்பு எய்த இராமன் பண்பற்றவனாகவும், தவறிழைத்துச் சூரிய குலத்தை இழிவுபடுத்தியவனாகவும் வாலியின் அறிவுக்குப்பட்டது. விளக்கம் பெற்றுவிட்ட பிறகு பகை-நட்பு போன்ற இருமையைக் கடந்து நிற்கும்ஒன்றை 'முற்றும் நீ' என்கிறான். இவ்வொரு சொல்லில் அனைத்தும் அடங்கிவிடுகின்றன. ஒரு வேளை இதில் விடுபட்டது ஏதேனும் இருக்குமோ என்ற ஐயம் தோன்றுதல் முறைதான். தவறு, பாவம், நேர்மை, இன்மை குற்றம் முதலியவற்றை இப்பொருளினிடத்துச் சேர்க்க முடியுமா என்ற ஐயம் உடையார்க்கு விடை கூறுபவன்போல, அந்த ஸ்திதப் பிரக்ஞன் 'மற்றும் நீ' என்று கூறிவிடுகிறான். இன்னும் ஒருபடி மேற்சென்று நன்கு விளங்கும் முறையில் பாவம்-தருமம், பகை-உறவு அனைத்தும் நீயே என்று விளக்கமாகவும் கூறுகிறான். பாவமும் தருமமும் ஒன்றாக முடியுமா? பகையும் உறவும் ஒன்றாக முடியுமா? இருளும் ஒளியும் ஒன்றாக முடியுமா? யாருக்கு இவை ஒன்றாகிவிட்டனவோ அவனே அகமன விளக்கம் பெற்றவன். வாலிக்கு இவ்விளக்கம் வந்தமையால் தான் இவ்வாறு கூறுகிறான். அந்த விளக்கம் பெற்ற அவன் அகமனம் பகை உணர்ச்சி, காழ்ப்புணர்ச்சி, விருப்பு, வெறுப்பு ஆகிய எதுவும் இல்லாமல் நிர்மலமாக உள்ளது. எனவே அதில் வேறுபாடு எதுவும் தோன்றவோ, தெரியவோ இல்லை.

வாலியினுடைய இந்த மனமாற்றமும் (அவன் இறுதியாகப் பேசிய பேச்சும்), இராமனைத் திடுக்கிடச் செய்கிறது. அவன் இதனைச் சிறிதும் எதிர் பார்க்கவில்லை. அனுமன் கூற்று, சுக்ரீவன் சொற்கள், வாலி தம்பி மனைவியைக் கவர்ந்த செயல் ஆகியவற்றைக் கொண்டே இராமன் வாலியை இதுவரை எடைபோட்டு அவன் தண்டிக்கப்பட வேண்டியவன் என்ற முடிவுக்கு வந்துவிட்டிருந்தான். வாலியின் ஏசலில் 'குரங்குகளாகிய எங்கட்குத் தம்பிமனைவி தாய்க்குச் சமம்' என்ற நியதி இல்லை; அது மனிதர்களாகிய உங்களுடைய சட்டம்' என்று கூறிய பொழுது இராமன் தன் மனத்தில் கொண்டிருந்த உறுதி ஆட்டங்கண்டது. இந்த ஒரு செயலை விட்டுவிட்டால், வாலியைப் பற்றி அவன் அறிந்திருந்த பண்புகள் அனைத்தும் வாலியின் பகைவர்களாகிய அனுமனும் சுக்ரீவனும் கூறியவையே யாகும்.

வாலியினுடைய மனமாற்றம் இராமனை வியப்படையச் செய்கிறது. மனம் மாறிய வாலி பேசிய சொற்கள் இராமன் மனத்தில் பச்சாதாபத்தை உண்டாக்குகின்றன. இதனை அடுத்து வாலி தம்பியையும், தனயன் அங்கதனையும் விளித்துப் பேசிய சொற்களைக் கேட்ட இராமன் அசந்து போய்விட்டான்! இறுதியாகத் தம்பியாகிய சுக்ரீவனைப் பற்றி இராமனிடம் வாலிகூறும் சொற்கள் இராமன் மனநிலையை முற்றிலும் மாற்றிவிடுகின்றன.

> ''ஓவிய உருவ! நாயேன் உளது
> ஒன்று பெறுவது உன்பால்;
> பூஇயல் நறவம் மாந்தி,
> புந்திவேறு உற்ற போழ்தில்
> தீவினை இயற்று மேனும்;
> எம்பிமேல் சீறி, என்மேல்
> ஏவிய பகழி என்னும்
> கூற்றினை ஏவல் என்றான்'' (132)

நல்வாழ்வு வாழ்ந்து அறியாமல், குடிப்ப திலேயே பொழுதைக் கழிப்பவன் என் தம்பி. அத்தகைய மனநிலையில் அவன் தீமை புரி வான் (இது உண்மை என்பது அடுத்த கார் காலப் படலத்திலேயே விளக்கப்படுகிறது). என் றாலும் அந்நிலையினும் நீ மனம் வெறுத்து என்மேல் ஏவிய அம்பாகிய கூற்றை அவன் மேல் ஏவிவிடாதே! இதனை ஒரு வரமாக எனக்கு அருள்க' என்று, தன்னைக் கொன்ற இராமனிடம் தன்னைக் கொல்வித்த சுக்ரீவ னைக் காக்கவேண்டும் என்று வரம் வேண்டும் வாலி, ஸ்திதப் பிரக்ஞ மனநிலை பெற்றுவிட்ட மகாத்மாவாக ஆகி விட்டான் என்பதை இரா மன் அறிய முடிகிறது.

ஒருவேளை வாலியின் இப்பண்பாட்டை இராமன் முன்னரே அறிய நேரிட்டிருப்பின் வேறுவிதமாக நடந்து கொண்டிருக்கவும் கூடும். ஆனால் இப்பொழுது காரியம் மிஞ்சிவிட்டது. வாலியை ஒருவேளை பிழைக்கச் செய்ய இராம னுக்கு முடியும் எனினும் அதனால் விளையும் பயன் ஒன்றும் இல்லை. சாவு, வாழ்வு என்ற இரண்டின் வேறுபாட்டைச் சட்டை செய்யும் மனநிலை வாலியிடம் இல்லை. வாழ வேண்டும் என்று அவன் விரும்பவில்லை. எனவே இராமன் செய்யத்தக்கது ஒன்றும் இல்லை. பச்சாதாபத் துடன் என்ன செய்யலாம் என்று இராமன் குழப்பமடைந்துள்ள நிலையில் அவன் சற்றும் எதிர்பாராத செயல் ஒன்றை வாலி செய்து விடுகிறான். இராமனை நோக்கிப் 'பொய் உடை நெஞ்சினார்க்குப் புலப்படாத பொருளே, என் மைந்தன் உன் அடைக்கலம்' என்று கூறும் முறையில் அங்கதனை இராமனிடம் அடைக் கலமாகத் தந்துவிடுகிறான்.

''பொய் அடை உள்ளத்தார்க்குப்
புலப்படாப் புலவ!
மற்று உன் கையடை ஆகும்' என்ன'' *(156)*

இச்செயலைச் சற்றும் எதிர்பாராத இரா கவன் விதிர்விதிர்ப்பெய்தி இருக்க வேண்டும். அவன் செய்த செயல் இவ்வாறு தான் நடந் திருக்கவேண்டும் என்று எண்ணத் தூண்டுகிறது. வாலி, என் மைந்தன் உன் அடைக்கலம் என்று கூறியவுடன் அங்கதன் இராமன் திருவடிகளில் வீழ்ந்தான். தாமரைத் தடங்கண்களையுடைய வனாகிய இராகவன் உடனே தன் உடைவாளை அங்கதனிடம் நீட்டினான். வாய் பேசாமல் நீட்டி இருந்தாலே 'நீ இதனை வாங்கிக் கொள்' என்ற கருத்தை அனைவரும் அறிய முடியும். ஆனால் இராமன் வாளை நீட்டியதுடன் 'நீ, இது பொறுத்தி'' என்று கூறினானாம்.

'தன்அடி தாழ்த லோடும்,
தாமரைத் தடங்கண் ணானும்
பொன் உடை வாளை நீட்டி
'நீ இது பொறுத்தி' என்றான்
என்னவும், உலகம் ஏழும்
ஏத்தின; இறந்த வாலி
அந்நிலை துறந்து, வானுக்கு
அப்புறத்து உலகன் ஆனான்' *(157)*

'நீ இது பொறுத்தி' என்பதற்கு 'வாளை வாங்கிக் கொள்' என்று பலரும் பொருள் கூறு வர். ஆனால் முன்னரே 'தீயன பொறுத்தி' (125) என்று வாலி கூறுவதால் 'பொறுத்தி' என்ற சொல்லை, மன்னித்துக்கொள் என்ற பொருளில் தான், கவிஞன் பயன்படுத்துகி றான் என்பதை அறிய முடிகின்றது. வாலியைத் தான் கொன்றது சரியா? என்ற வினாவில் குழம்பிக் கொண்டிருந்த கருணை வள்ளலாகிய வனும், அறத்தின் நாயகனுமாகிய இராகவன் அது சரியன்று என்ற முடிவுக்கு வந்துவிட்டான் என்றே தோன்றுகிறது. என்றாலும் நடை பெற்றுவிட்ட ஒன்றுக்கு வேறு என்ன செய்ய முடியும்? எனவே தனக்கு மகன் முறை கொள் ளக்கூடியவனும், தன் அடைக்கலப் பொருளு மாகிய வாலியின் மைந்தனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதன்மூலம் தன் மனத்தில் ஒரு நிறைவை ஏற்படுத்திக் கொள்கிறான்.

கம்பன் காட்டிய வாலியின் பண்பாட்டை முற்றிலும் அறிந்து கொள்ளும் இயல்புடையவ னாகவே கம்பன் கண்ட இராகவனும் காட்டப் பெறுகிறான். இங்குக் கூறிய கருத்துக்கள் கம்ப னுடைய வாலிக்கும் இராமனுக்கும் மட்டுமே செல்லுபடியாகக்கூடிய கருத்துக்களாகும். இவ் வாறு வாலியின் மனவளர்ச்சியைக் காட்டா விடின் அவனுடைய மனமாற்றத்திற்குத் தக்க சமாதானம் கூறமுடியாது. அது முடியாமற் போனால் கம்பனுடைய பாத்திரப் படைப்புக்கு இழுக்கு ஏற்படும். எனவேதான் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் இந்தப் பாத்திரத்தைப் புது முறையில் படைத்துக் காட்டுகிறான் கவிஞன்.

# காசி விசாலாட்சி

''ஆராய்ச்சிப் பேரறிஞர்'' திரு மு. அருணாசலம், M.A.

முழுமுதற் கடவுளைச் சைவமக்கள் சிவ பரம்பொருள் என்று போற்றுகிறார்கள். சிவ வழிபாடு, தென்னாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும் சிறப்பாக உரிய தனிக்கடவுள் நெறி. பிரபஞ்சம் எங்குமே இந்த ஒரே பொருளின் ஆட்சி நிலவுகிறது என்பது சைவப் பெருமக்கள் கருத்து. ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாதவனுக்கு, ஆயிரம் திருநாமம் சொல்லி மக்கள் பரவுவது, அவனுடைய சர்வ வியாபகத் தன்ஷமையையும், மனிதனுடைய வரையறையுடையதாகிய ஏகதேசத் தன்மையையும் காட்டுவதாகும். யார் எந்தப் பெயரால் எங்கு எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும், அந்த வழிபாடுகளெல்லாம் முழுமுதற் பொருளாகிய சிவ பரம்பொருள் ஒன்றினுக்கே செல்கின்றது என்பது சைவர் கொள்கை. இதையே மாணிக்கவாசகர் 'தென்னாடுடைய சிவன் எந்நாட்டுக்கும் இறைவனாய் உள்ளான்' என்று தமது பாடலில் குறிப்பிட்டார்.

பரத கண்டத்தின் ஒருமைப்பாட்டிற்கு அடையாளம் காசித் தலம். இமயம் முதல் சேதுவரை என்று சொல்வதை ''ஆசேது இமாசலம்'' என்று வடமொழியில் சொல்வார்கள். தமிழ்நாட்டில் பல்லாயிரம் சிவாலயங்கள் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பெருமையோடு விளங்குகின்றன. ஆனால் விரிந்த வடநாடு முழுமையிலும் சிறப்பான ஒரு நூறு கோயில் கூடக் காணக் கிடைப்பதரிது. இருப்பினும், வடநாட்டில் கங்கைக் கரையிலுள்ள காசித் தலமே, தலங்கள் அனைத்திலும் புனிதமானது என்ற கருத்து, வடநாட்டு மக்களிடத்திலும் தமிழ்நாட்டு மக்களிடத்திலும் நிலவி வருகிறது. இது இந்திய நாட்டின் பண்டைய ஒருமைப் பாட்டுணர்வின் விளைவேயாகும்.

காசியில் எழுந்தருளியுள்ள பெருமானின் திருநாமம் விசுவநாதர், விசுவேசர், அகிலேசர் என்பது. இவர் பூலோகத்துக்கு மட்டும் அல்லாமல், அகிலப் பிரபஞ்சத்துக்கும் நாதர் என்பது இதன் பொருளாகும். (விசுவம்-பிரபஞ்சம்).

உருவம் இல்லாத பரம்பொருள், மக்கள் உய்யும்பொருட்டு அவர்கள் மனத்தில் நினைக்கத் தக்கதாயும், கண்ணால் காணத் தக்கதாயும் உருவங்கொண்டு வருகின்ற நிலையை மூர்த்தி என்று சொல்லுகிறார்கள். பரம்பொருள் நிலையை நாம் மூன்றாகச் சொல்லுவோம். முதலாவது அருவம். முன்னே சொல்லப்பட்டது போல மனம் வாக்குக்கு அப்பாற்பட்டது. அவனருளால் இந்த நிலையை ஓர் ஆன்மா தனக்குள்ளே அவன் உணர்த்த உணரலாமே அன்றி, கருவி கரணங் கொண்டு காண இயலாது. அடுத்து உயிர்களுக்கு அருள்செய்யும் கருணையோடு அந்தப் பொருள் காட்சி தருகின்ற கோலம் சிவலிங்கத் திருமேனி. இது கண்முன்னே காண்கின்ற திடமான வடிவங் கொண்டிருப்பது உண்மை; இலிங்க வடிவம் நீண்டுருண்ட கல்லாக இருக்கிறது. ஆனால், சந்திரசேகரர் நடராசர் மூர்த்திகளுக்கு இருப்பதுபோல இந்தத் திருமேனிக்கு எந்த உறுப்புக்களும் இல்லை. உறுப்பில்லாமையால் அருவம்; வடிவம் இருப்பதால் உருவம்; ஆகவே இதை ஆன்றோர் அருவுருவம், ரூபாரூபம் என்பார்கள். ஆலயத்தில், நாம் கண்ணால் கண்டு வழிபடத் தக்கவாறு உருவம் உடைய மூர்த்திகள்-கணபதி முருகன், நடராசர், சந்திரசேகரர், கல்யாணசுந்தரர், பிட்சாடனர், அர்த்தநாரீசுவரர் ஆகியோர் எல்லாம்-உருவத் திருமேனிகள். இந்த மூன்றுக்கும் வேறுபாடு இல்லை. உருவமாகிய மூர்த்தியைக் காணும்போதும், அருவுருவாகிய சிவலிங்கத்தைக் காணும்போதும், நாம் இவற்றுக்கு மூலமான அருவப் பொருளையே சிந்திக்க வேண்டும். வழிபாட்டு முறைகளும் சாத்திரங்களும் தோத்திரங்களும் போதிப்பது இதுவே.

பரம்பொருளை அப்பனும் அம்மையுமாக நினைப்பது ஒருவகை. அம்மையும் அப்பனும் இந்த உலகத்தில் மக்களுக்கு ஆதரவு தருபவர்கள். ஆன்ம உலகில் அருவப் பொருளாய் உள்ள இறைவனை அப்பனாகவும் அம்மையாகவும் கற்பனை செய்து துதிப்பதில் மக்களுக்கு நம்பிக்கையும் ஆர்வமும் ஆறுதலும் பிறக்கிறது. இஃது இயல்பே. இதை விரித்துரைப்பது அவசியமில்லை. தந்தையும் தாயுமாகி, அப்பன் நீ, அம்மை நீ, அம்மையே அப்பா ஒப்பிலாமணியே என்பனபோன்ற திருமுறைப் பாசுரங்களும், இதையே நமக்கு எடுத்துரைக்கின்றன.

கோயில்கள் இதை வடிவத்தில் காட்டுகின்றன. பிற்காலத்தில் சிவாலயங்களில் அம்பிகைக்குத் தனிக்கோயில் அமைக்கப் பெற்று, சக்திவழிபாடு பெருகியது இந்த நினைவினால் தான். தாயுமான மூர்த்தியும் இதை விளக்குவதே. சிவம் சக்தி என்ற பேதம் இல்லாது போயினும்கூட, அவனுடைய கருணைக்குத் தனி உருவம் கொடுத்து 'அம்மா' என்று அழைத்து வழிபடுவதில் சிற்றறிவுடைய மக்கள் மனநிறைவு பெகிறுறார்கள். தமிழ்நாட்டில் கிராமம்தோறும் ஏற்பட்டுள்ள அம்பிகை கோயில் இந்த மன நிறைவினால் எழுந்த ஒரு சின்னமேயாகும். அம்பிகையைத் தனியே வழிபடுவதனால் அம்பிகை வேறு என்பது பொருளல்ல. ஒன்று என்று காட்டவே அர்த்தநாரீசுவரர் வடிவமும் அது பற்றிய கதைகளும் எழுந்தன. கோயில்களில் அம்பிகை கோயில் அமைத்து இருப்பது தமிழ் நாகரிகத்தின் சிறப்பான விளைவு. ஒவ்வொரு கோயிலுக்கும், அங்குள்ள சிவலிங்கத் திருமேனிக்கும், அம்பிகையின் திருமேனிக்கும், தனியாகப் பெயர்கள் சூட்டப்பட்டன. அப்பெயர்கள் யாவும் அந்த அந்தத் தலத்துக்கும், ஆங்காங்குப் பக்தர்களுக்குச் சிவபெருமான் அருள்புரிந்த வரலாற்

றுக்கும் தொடர்புடையன. இத்தொடர்பை இங்கு விளக்கில் பெருகும்; இது எல்லோரும் நன்கு அறிந்தது.

காசித் தலத்தில் பெருமான் திருநாமம் விசுவநாதர் என்பது. இதன் பொருள் முன்னே சொல்லப்பட்டது. அம்பிகையின் திருநாமம் விசாலாட்சி. இறைவன் சகல பிரபஞ்சங்களுக்கும் நாதன் என்ற முறையில், அவனுடைய தேவி சகல பிரபஞ்சத்திலும் உள்ள சீவராசிகள் அனைத்தையும் தன் கண்ணால் கண்டு அருள் சுரக்கிறாள். அதுபற்றியே அவள் கண்கள் அனைத்தையும் தழுவிக் காணும் பொருட்டு விசாலமாயுள்ளாள் என்ற கற்பனை எழுந்தது. அவள் பெயர் விசாலாட்சி. தமிழ்ப் புலவர்கள் அம்மையை ''பெருந்தடங்கண்ணம்மை'' என்று சொல்லி மகிழ்வார்கள். விசாலாட்சி என்ற பெயர் காசிக்கே சிறப்பானது. இது பொதுவாக முன் சொன்னபடி, தமிழ்மக்கள் இறைவனைக் குறித்துக் கொண்ட அம்மை அப்பர் ஆகிய கற்பனையில் விளைந்த திருவடியாகும்.

லலிதா சகஸ்ரநாமங்களில் விசாலாட்சியை நம! என்பதும் ஒன்று: இந்த சகஸ்ர நாமங்கள் வேதங்களையடுத்துத் தொகுக்கப்பட்டவை. காலத்தால் மிகவும் பழையவை.

காசி, இந்திய மக்கள் அனைவருக்குமே சிறந்த புண்ணியத் தலமாதலால், அதனிடத்து மிக்க ஈடுபாடு கொண்ட தமிழ்மக்கள், எல்லோரும் காசிக்குச் சென்று வழிபட இயலாத நிலையை மனத்தில் கொண்டு, தங்கள் தங்கள் ஊரில் உள்ள ஆலயத்திலும் காசிவிசுவநாதரைப் பிரதிட்டை செய்து கொண்டார்கள். ஆலய நிர்மாணத்தில் முதல் பிராகாரத்தில் வாயு மூலையில் திருமாளிகைப் பத்தியிலோ தனிக் கோயிலாகவோ காசி விசுவநாதரைப் பிரதிட்டை செய்ய வேண்டும் என்ற விதியும் வழக்கும் ஏற்பட்டிருக்கின்றன. சில கோயில்களில் இவ்விசுவநாதரோடுகூட விசாலாட்சி அம்மையையும் பிரதிட்டை செய்திருப்பது உண்டு.

தமிழ்நாட்டில் பாடல் பெற்றனவும் பெறாதனவும் அல்லாமல், புதிதாகச் சைவப் பெருமக்கள் கோயில் கட்டியிருக்கிறார்கள். அப்படி கட்டியவற்றுள் சிலவே அவ்விடத்துச் சார்பான பெயர்களைப் பெற்றிருக்கும். பெரும்பான்மையானவை மீனாட்சி சுந்தரேசர் கோயில், கயிலாயநாதர், திரிபுரசுந்தரிகோயில் என்றே பெயரிடப்பட்டிருக்கக் காணலாம்.

குடந்தைக் காரோணம் என்பது கும்பகோணம் நகரில் உள்ள பாடல் பெற்ற மூன்று தலங்களில் ஒன்று. இத்தலம் சம்பந்தர் பதிகமுடையது. இங்கு சுவாமி காசி விசுவநாதர். அம்பிகை காசி விசாலாட்சி என்றே இன்றும் வழங்கப் பெறும்.

நம்நாட்டில் ஆங்காங்கு பல தலப் பெயர்களையும் சுவாமி பெயர்களையும் பல காரணம் பற்றி ஒரு தொடராகச் சேர்த்து வழங்கும் வழக்கம் உண்டு. இவ்வாறு வழங்கும் ஒரு தொடர் காசி விசாலாட்சி, காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி என்பது.

காசிக்குரிய பெயர்களில் மகாஸ்மசானம் என்பது ஒன்று. மயானம் என்பது எல்லாம் சாம்பலாகும் இடம். உடல் சாம்பலாவது ஊர்தோறுமுள்ள மயானத்தில். ஆனால் உடலைவிட்டு உயிர் பிரிந்த பிறகும்கூட, உயிரைப் பற்றியிருந்த ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலங்களும் உடலோடு எரிந்துபடுவது இல்லை; உயிரைத் தொடர்ந்தே வருகின்றன. இதனால்தான் உயிர்கள் மீண்டும் பிறவி எடுத்து, பின் இறந்து, பிறப்பு இறப்பு என்ற சுழலில் சிக்கி, அவதியுறுகின்றன. இந்த அவதி காசியில் நீங்குகிறது. மகாஸ்மசானம் என்பதன் பொருள் இதுவே. இங்கு உயிரை வாட்டுகின்ற மலங்கள் சாம்பலாவதால் இது மகா ஸ்மசானம் எனப்பட்டது. இந்த மயானத்தில் இறந்தவருக்குப் பின் மலங்கள் இல்லை. ஆகவே, பிறவி இல்லை. பின் முத்திதான் என்பது பொருளாகும். மயானம் என்ற இந்தக் கருத்தில் தமிழ் மக்களுக்கு ஈடுபாடு மிகுதி உண்டு. கச்சிமயானம், கடவூர்மயானம், நாலூர்மயானம் என்ற தலப் பெயர்களைக் காண்க. கடவூர் மயானம் மகாஸ்மசானம் என்று கருதப்பட்டது போலும். அதனால்தான் அங்கு சுவாமிக்குப் பெரிய பெருமான் அடிகள் என்ற பெயர் தேவாரத்தில் வழங்குகிறது. சம்பந்தர் இங்கு ''ஆசை தீரக் கொடுப்பார்'' என்று சொல்கிறார். அப்பர் சுவாமிகள் ''தன்னை நோக்கித் தொழுது எழுவார்க்கெல்லாம் பின்னை என்னார் பெருமான் அடிகளே'' என்றார். சுந்தரமூர்த்தி ''எல்லார்க்கும் இல்லை என்னாது அருள் செய்வார்'', ''பீடை தீர அடியாருக்கு அருளும் பெருமான்'' என்றெல்லாம் பாடுகிறார். இவை எல்லாம், முன்னதே மலங்களைப் போக்கி முத்தி அளிப்பதால் மயானம் என்ற பெயர் வந்தது என்று முன் கூறிய கருத்தோடு ஒப்புநோக்கத் தக்கவை.

இனி காசியாகிய தலத்தில் இறந்தவர்கள் முத்தி பெறுவார்கள் என்பது சாத்திரத்தின் கூற்று. 'காசியில் இறக்க முத்தி' என்பது பழமொழி. காசியில் இறப்போருக்குப் பிறவித் துன்பத்தால் வந்த களைப்பு நீங்கிடுமாறு விசாலாட்சிஅம்மையார் தமது முன்றானையால் விசிற விசுவநாதப்பெருமான், அவர்கள் உயிர் பிரியுந் தருணத்தில், அவர்கள் செவியில் தாரக மந்திரத்தை உபதேசம் செய்து பரமுத்தியளிப்பார் என்று புராணங்கள் கூறும்; பின்வரும் காசி காண்டப்பாடல் (அகத்தியர் விந்தவரையடைந்தது, 15) காண்க:

''இத்தலை எய்த இறக்குநர்
யாரும் இளைப்பாற
உத்தரிகங்கொடு மாதுமைவீசிட
உமையோர்பால்
வைத்த அரும்பொருள்
மேவரு தாரக மறையோதி
முத்தி அளித்திடும்
இப்பதியார் விடமுயல்வாரே ?''

அம்மையார் ஒண்தொடித் தடக்கையின் வீசு நுண் துகில் தோகையிற் பிறந்த தென்றல் மோகமும் தளர்ச்சியும் தாகமும் தணிப்பதென்பது, திருவருள் என்ற சத்தி நிபாதம் விளையவே, அந்த அருள் நிழலிலே தங்கிய ஆன்மா வினைகளின் பந்தமும் மலப் பிடிப்பால் விளைந்த பிறவி வெம்மையும் தீர்ந்து முத்தி பெறுகிறது என்பது குறிப்பு.

***

# சேக்கிழாரடிகளும், இளங்கோவடிகளும்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

## முன்னுரை :

''சேக்கிழாரடிகளும் இளங்கோவடிகளும்'' என்னும் தலைப்பு, மிகப் பெரும்பாலோர்க்கு வியப்பினை விளைவித்தல் கூடும். ஏனெனில், மேம்போக்காகக் காண்புழி இவ்விருவருக்கும் இடையே இயைபு எதுவும் இருப்பதாகப்பொது வாகப் புலப்படவில்லை. இளங்கோவடிகள் இருந்த காலமும், சேக்கிழாரடிகள் திகழ்ந்த காலமும் வெவ்வேறானவை. இருவர்க்கும் இடைப்பட்ட காலம், ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகும். அன்றியும், சேக்கிழாரடிகள் சிவநெறிப் பெருந்தலைவர்களுள் ஒருவராகத் திகழாநிற்க, இளங்கோவடிகளோ சமண சமயத்தினைச் சார்ந்தவர் என்று, ஒரு சிலரால் கருதப்படுபவர். இளங்கோவடிகள் உலகியற் கலைநோக்கமே பெரிதும் அமையத் தம் அரும் பெரும் நூலினை இயற்றினார்; சேக்கிழாரடிகளோ அருளியல் இறை நாட்டமே பெரிதும் குறிக்கோளாகக் கொண்டு, தமது நூலினை யாத்தருளினார்.

இனைய சில வேறுபாடுகள் காரணமாக, இதுகாறும் ஒருவரேனும் இவ்விரு பெருமக்களையும் இணைத்து, ஒப்பிட்டு நோக்கி ஆராயத் தலைப்பட்டிலர். இளங்கோவடிகளையும் சிலப்பதிகாரத்தையும் இன்று பல்வேறு திற மக்களும் மிகவும் போற்றிப் பெருமிதம் கொள்ள முற்பட்டுள்ளனர். ஆனால், சேக்கிழாரடிகளையும், பெரிய புராணத்தையும் சமய அமைப்புகள் மட்டுமே போற்றி வருகின்றன. 'இளங்கோ' என்று பலர், இன்று தமக்குப் பெயர் வழங்கிக் கொண்டு மகிழ்தலைக் காண்கின்றோம். ஆனால், 'சேக்கிழான்' என்று சமய வுணர்வு மிக்கவர்களுங்கூடத் தம் பிள்ளைகளுளுக்கு யாண்டும் பெயரிட்டு அழைத்து மகிழ்தலைக் காண்கின்றிலம். ''யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர்போல் இளங்கோவைப்போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை'' என்று பாரதியார் அண்மையிற்பாடிப் புகழ்ந்ததனால், இளங்கோவடிகளுக்கு இன்று முன்பினும் ஒரு புதிய புகழும் பெருமையும் ஏற்பட்டுள்ளன.

ஆனால் சேக்கிழாரடிகள், அத்தகைய புதுப்பெருமைகள் ஏதும் எய்தாமல் ஒரு சில அறிஞர்களுக்கும் பக்தியாளர்களுக்கும் மட்டுமே உரியவராக விளங்கிக் கொண்டு வருகின்றார். சிலப்பதிகாரம் பற்றிப் பேசுவோர் பெரியபுராணத்தையும், பெரியபுராணத்தைப்பற்றி பேசுவோர் சிலப்பதிகாரத்தையும், அத்துணை மிகுதியாக மதித்துப் போற்றிப் பாராட்டி மகிழும் வழக்கம் காணப்படவில்லை. எனவேதான், இன்றைய சூழ்நிலையில் இவ்விரு பெருஞ் சான்றோர்களையும், இணைத்து ஒப்பிட்டு நோக்கி ஆராய்ந்துணர்தல் ( Comparative study ) மிகவும் நலம் பயப்பதாகும் என்று கருதி விரும்பி, இத்தலைப்பு ஈண்டு எடுத்துக் கொள்ளப்பெற்றது. இப்பெரும் பொருளைக் குறித்து, ஈண்டு இயன்றவரையில் ஒருசிறிது ஆராய்ந்து கண்டு இன்புற முயல்வோம்.

## ஒப்புமை இயல்புகள் சில :

(1) இளங்கோவடிகளும் சேக்கிழாரடிகளும் ''முத்தமிழ்த்துறையின் முறைபோகிய உத்தமக் கவிஞர்கள்'' என்பதில் தடையில்லை. இவ்விருவருமே தமிழகம் போற்றத்தகுந்த தலைசிறந்த சான்றோர்கள், அறவோர்கள் ஆவர்.

''உலகப் பெருங்கவிஞர்களின் பேரவையில், இங்கிலாந்து நாட்டின் சார்பாளர்களாக விளங்குவதற்கு, செகப்பிரியரும் மில்ட்டனும் மிகவும் தகுதி உடையவர்கள். ஆயினும், அவர்கள் இங்கிலாந்துக்கு மட்டுமேயன்றி, உலகத் திற்கேயுரிய பெருங் கவிஞர்கள் ஆவர்'' என்று ஆங்கில அறிஞர் ஒருவர் குறிப்பிடுகின்றார்(1). அம்முறையிற் கூறுதலுறின், இளங்கோவடிகளும் சேக்கிழாரடிகளும், உலகப் பெருங் கவிஞர்களின் பேரவையில், தமிழ்நாட்டின் சார்பாளர்களாக விளங்குதற்குரிய சிறந்த தகுதியுடையவர்கள் ஆவர், என நாமும் துணிந்து கூறலாம்.

---

(1) "England may choose to be represented by Milton and Shakespeare at an international congress of World-poets, but they are more than English. They are of all countries, Milton no less than Shakespeare".

—*Mark Pattison*,
English Men of Letters.

(2) இளங்கோவடிகள் சேரர் குலத்துத் தோன்றல்; சேக்கிழாரடிகள் சோழ நாட்டின் தலைமை முதலமைச்சர். இருவருமே வாழ்க்கை வளங்கள் பலவும் வாய்ப்புற அமைந்து, 'நிரம்பிய வாழ்க்கை' வாழ்ந்து சிறந்து விளங்கியவர்கள்; தமிழகத்துச் சமுதாயத்திற் பெரு நிலையும் பெருமதிப்பும் பெற்றுப் பிறங்கியவர்கள்.

(3) இவ்விருவரும் பலவகையில் தம்முள் உணர்ச்சியொத்த உள்ளத்தினராகக் காணப்படுகின்றனர். புலமைத்துறையிலும், சான்றாண்மை நலங்களிலும், இருவரும் ஒருவருக்கொருவர் 'சரிநிகர் சமானமாகவே' விளங்குகின்றனர்.

(4) அரசுரிமை துறந்த இளங்கோவடிகள் 'குணவாயிற்கோட்டம்' என்னும் கோயிலில் தங்கி இருந்து, சிலப்பதிகாரம் இயற்றினார். அமைச்சுரிமை துறந்த சேக்கிழாரடிகள் தில்லைத் திருக்கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் வைகி இருந்து, திருத்தொண்டர் புராணம் பாடி அரங்கேற்றினார்.

''தவநலஞ் சான்ற சிறந்த பெருமக்கள் தாம் அழியாத பேரிலக்கியங்களை இயற்ற முடியும்''(2) என்பர் அறிஞர். அவ்வாற்றால் நோக்கினும், தூய துறவுள்ளம், உயரிய தவவொழுக்கம் முதலியவற்றில், இளங்கோவடிகளும் சேக்கிழாரடிகளும் மிகப் பெரிதொத்துக் காணப்படுகின்றனர்.

(5) பற்றற்ற தூய துறவுணர்ச்சி மிக்க வாழ்வில், இருவரும் தலைசிறந்து விளங்கினராயினும், நாட்டுப்பற்று- மொழிப்பற்று - அருங்கலையார்வம் என்னும் இன்னோரன்ன பண்பு நலங்களில், ஒரு சிறிதும் குறைவிலா நிறைவினராய், இவர்கள் இருவருமே தமக்கு நிகர் பிறர் எவரும் இன்றித் திகழ்கின்றனர்.

(6) வெறும் கலையறிவும், நூலறிவும் ஆகிய புலமை மட்டுமே, எய்தி நிற்கும் ஏனைய சில கவிஞர்களும் புலவர்களும்போல் அன்றி, ''காவற் சாகாடு கைத்து'' நாடு காத்தோம்ப வல்ல அறிவாற்றல் ஆள்வினைத் திறங்களும், மிக்குடையவர்களாக இவ்விருவரும் இலங்கியிருந்தனர்.

---

(2) "He who is not a seer cannot produce a great literature, 'Nanrish kurute Kavyam'. The intense concentration of mind is essential not only for saintliness but also for artistic creation. The impulse for great literature comes from a higher consciousness. The possession of our mind by a master-spirit is the phenomenon of inspiration..."

—*Dr. S. Radhakrishnan, In a P.E.N. Conference.*

(3) "The man that hath no music in himself,
Nor is not moved with concord of sweet sounds,
Is fit for treasons, strategems, and spoils;
The motions of his spirit are dull as night,
And his affections dark as Erebus:
Let no such man be trusted".

—*William Shakespeare.*

(7) இசைக் கலையுணர்வும் ஈடுபாடும், மக்கள் மனத்தைப் பண்படுத்திப் புனிதமாக்கும் சிறப்புடையன. ''எவன் இசையுணர்வு இல்லாதவனோ, எவனுக்கு இசை கேட்டு உள்ளம் உருகவில்லையோ, அவன் வஞ்சகம்சூழ்ச்சி கொலை கொள்ளை முதலிய கொடுஞ் செயல்களைப் புரியவல்ல இயல்பினன் ஆவான்''(3) என்று செகப்பிரியர் பாடுவர்.

இனியநல் இசையைக் கேட்டும்
இளகிடா திருப்பான் நெஞ்சம்,
துனிதரும் நரகம் போலச்
சூழ்ந்திருள் படர்ந்து நிற்கும்;
முனிதகு வஞ்சம் சூழ்ச்சி
முதற்பல தீங்கே செய்வான்;
நனிமிகக் கொடியன்; அந்தோ!
அவனைநாம் நம்பொ ணாதே!

—மொழிபெயர்ப்பு, ந. ரா. மு.

கலைகளுள் தலைமை சான்ற அத்தகைய இசைக் கலையின்பால் இவ்விருவர்க்கும் பேரீடுபாடு இருந்தது. இளங்கோவடிகள் இசைக் கலையில் ஈடுபாடு கொண்டவர் என்பது, சிலப்பதிகாரத்துள் ஆங்காங்கு இடையிடையே விரவி வரும் இசைக்கலை பற்றிய நுணுக்கக் குறிப்புக்களாலும், இசை நலங் கனிந்த வரிப்பாடற் பகுதிகளாலும், தெளிவுறப் புலனாகின்றது. அங்ஙனமே சேக்கிழாரடிகளும், ''மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் தமிழ்'' இசையிற் பெரிதும் ஈடுபட்டுத் திளைத்து இன்புற்றவர் என்பது, அவர்தம் பெரியபுராணத்தால் தெளியப்படுகின்றது.

''உள்ளம் ஆர்உரு காதவர்? ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள்,பைங்
கிள்ளை பாடுவ: கேட்பன பூவைகள்''

என்பன போன்றுவரும் பெரியபுராணப் பாடல்கள் பல, சேக்கிழாரடிகளுக்குத் திருநெறித் தமிழிசையின்பால் இருந்த எல்லையற்ற ஈடுபாட்டின் பெற்றியினை விளக்கும்.

(8) இவ்வண்ணமே, நல்லிசைக் கவிஞர் அனைவர் மாட்டும் பொதுமைச் சிறப்பியல்பாகக் காணப்பெறும் இயற்கைப் பொருளழகின் ஈடுபாட்டுத் துறையிலும், மரம் செடி கொடி மலர் பறவை விலங்கு ஆறு மலை காடு சோலை நாடு நகரம் என்னும் இயற்கைப் பொருள்களின் இயல்புகளை நுனித்துணர்ந்து காண்டலிலும், அவையிற்றின் அழகுகளையெல்லாம் இயல்நெறி திறம்பாமல் தன்மைநவிற்சி அமைய உள்ளவாறு விளக்கிப் பாடுதலிலும், இளங்கோவடிகளும், சேக்கிழாரடிகளும் பெரிதொத்த நிலையினராகக் காணப்படுகின்றனர். சிலப்பதிகாரத்தும், பெரியபுராணத்தும், ஆங்காங்கே போதரும் அழகிய இனிய இயற்கைப் புனைவுப் பகுதிகள், இவ்வுண்மைக்குச் சான்று பகரும்.

இயற்கைப் பொருள்களின் அழகுகளைச் சுவையொழுகக் காப்பியத்தின்கண் அமைத்துப் பாடும் திறனில், இளங்கோவடிகள்சேக்கிழாரடி

ரடிகள் போன்ற சான்றோர் பெருமக்களுக்கும், பிற்காலக் கவிஞர்களுக்கும் இடையே பெரிதும் வேறுபாடுண்மை கருத்திற் பதிக்கற்பாலதாகும். இயற்கைப் பொருளின் இயல்புகளை நுனித்து நோக்கியுணர்ந்து கொள்ளாமல், வெறும்வாய் பாடு மாத்திரத்தான் நூல்களிற் கற்றறிந்தவற்றையே திரும்பப் பாடிச் சென்றொழியும் பிற்காலத்துக் கவிஞர்களைப் போல் அன்றி, இளங்கோவடிகளும் சேக்கிழாரடிகளும் பொருளியல்புகளையெல்லாம் கூர்ந்து நோக்கி, ஓர்ந்துணர்ந்து ஆராய்ந்து தெளிந்து, புதுமை நலம் தோன்றப் பாடும் மதிநலஞ் சான்றோர் ஆவர்.

(9) இளங்கோவடிகள், தாம் சேரர் குலத்துத் தோன்றல் ஆயினும், ஏனைய சோழ, பாண்டிய வேந்தர்களின் நாடுகளையும், அவர்தம் அறனும் மறனும் ஆற்றலும் பண்பும் விளங்க, நடுவுநிலை சிறிதும் பிறழாது, பொதுமையுணர்வு மேல் ஓங்கிய நிலையிற் சேர நாட்டுடன் ஒப்ப வைத்துச் சிறந்தெடுத்துப் பாடியருள்கின்றார். இங்ஙனமே ,சேக்கிழாரடிகளும் தாம் சோழ நாட்டின் முதலமைச்சராகத்திகழ்ந்திருந்தனராயினும், ஏனைய பிறநாடுகளையும் வேறுபாடின்றித் திறம் தெரிந்து நடுவு நிலை பிறழாது புகழ்ந்து பாடுகின்றார். அடியவர்கள் அனைவரையும், அவர்கள் எந்நாட்டாராயினும் எக்குலத்தினராயினும், 'இவர் தேவர் அவர் தேவர் என்று, இரண்டாட்டாது ஒழிந்து, ஈசன் திறமே பேணி' வேறுபாடு சிறிதும் கருதாமல் ஒத்தநிலையினராகவே வைத்து மதித்துப் போற்றிப் புகழ்ந்து பாடிப் பரவுகின்றார். இத்தகைய நடுவுநிலைப் பொதுமை நல்ல உணர்வில், இளங்கோவும் சேக்கிழாரும், எத்தகைய சிறு வேறுபாடுகளும் இன்றி இணைந்தியைந்து நிகரொத்துத் திகழுகின்றனர்.

(10) தேசிய கவிஞர் பாரதியார் பாராட்டிச் சிறப்பித்துப் பாடியதற்கு ஏற்ப, 'நெஞ்சை அள்ளும்' திறனில், இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் போலவே, சேக்கிழாரின் திருத்தொண்டர்புராணமும், ஒப்புயர்வற்ற தெய்வப் பெற்றிமை சான்று தலைசிறந்து திகழ்கின்றது. எளிமை, இனிமை, தெளிவு முதலிய நலங்கள் அமைந்து, சொற்பொருட் சுவைநலங்கள் மிகுந்து, இழுமெனும் இசையில் ஒழுகிய நடையின் விழுமியது பயந்து, கலைத்திறங்கள் செறிந்து, இணையற்று இலங்கும் இலக்கியப் பெருமணிகளாக அறிவொளி பரப்புதற்கண், பெரியபுராணம், சிலப்பதிகாரம் என்னும் இவ்விரண்டும் தமக்கு உவமை தாமேயாக விளங்குகின்றன. தமிழ்நாட்டின் பழம்பெருஞ் சிறப்புகளையும், வரலாறுகளையும், பண்பாடுகளையும் எல்லாம், நம்மனோர் தெளிந்துணர்ந்து கொள்ளுதற்கு இவ்விரு பெருமக்களின் நூல்களே, நமக்குச் செவ்விய துணைக் கருவிகளாகச் சிறந்தொளிர்கின்றன. தமிழ்நாட்டின் நாகரிகப் பண்பாட்டு நலங்களை உள்ளவாறு உணர்தற்குச் சிலப்பதிகாரம், பெரியபுராணம் போன்ற சிறந்த இலக்கியங்களே, தக்க ஆராய்ச்சிக் கருவிகளாகத் தலைமை முதலிடம் பெறத் தக்கனவாகும்.

**சேக்கிழாரும் சங்கநூல்களும் :**

சேக்கிழாரடிகள், சோழ நாட்டின் ''முதிர்ந்த கேள்வித் தொன்னெறி அமைச்சர்''. அமைச்சர்க்குரிய பண்பு நலங்கள் பலவும் அமைந்து சிறந்தவர். ''மதிநுட்பம் நூலோடு உடையவர்''. ''ஆராய்ந்த கல்விச் செறிவு'' மிக்கவர். ''நுணங்கிய கேள்வி மேலோர்''. எனவே திருத்தொண்டர் வரலாறுகளையெல்லாம் திறம்தெரிந்து சிறந்தெடுத்துப் பாடிய அவர், பழந்தமிழகச் செய்திகளையும், பழந்தமிழ் நூற் பொருள்களையும் நுண்ணிதின் ஆராய்ந்து எண்ணிக் கற்றிருந்தாராதல் வேண்டும். மும்மையால் உலகாண்டமூர்த்தி நாயனார் வரலாற்றுள், மதுரைமாநகர் பற்றிப் பாடவருங்கால், பின்வரும் கருத்து அமையச் சேக்கிழார் பாடுகின்றார்.

(1) ''கலைத்துறைகளின் நிறைவுமிக்க இயல் இசை நாடகம் என்னும் மூன்று தமிழ்களும், தங்கி நிலைபெற்ற அழகிய இடத்தையுடைய அந்தப் பழமையான மதுரை மாநகரில், நூல்கள் பரவுகின்ற இடங்களில், செய்யுட்கள் பெருமைபெற்று அரங்கேறுகின்ற **தமிழ்ச்சங்கங்களும்;**

எருமைகள் மிகுதியாக வந்து பாய்ந்து படிவதனால், அவற்றின் மடியினின்று சுரந்து பெருகும் பாலும், தாமரை மலர்களினின்று ஒழுகும் தேனும், கலந்து எங்கும் பரவுதலால் அவற்றை உண்டு கொழுத்த சேல்மீன்கள் துள்ளிப் பாய்கின்ற நீர்நிலைகளில், வயல்களில் மிகுதியாகத் தோன்றி, வரப்புகளில் ஏறுகின்ற **வளைகள் ஆகிய சங்கங்களும்** நிரம்ப உள்ளன''

''சால்பாய மும்மைத் தமிழ்தங்கிய
அங்கண் மூதூர்
நூல்பாய் இடத்தும் உள; நோன்றலை
மேதி பாயப்
பால்பாய் முலைத்தோய் மதுப்பங்கயம்
பாய எங்கும்
சேல்பாய் தடத்தும் உள, செய்யுள்
மிக்கேறு சங்கம்''

இவ்வினிய செய்யுளின்கண் வரும் ''செய்யுள் மிக்கேறு சங்கம்" என்னும் சிறந்ததொடர், மிகவும் பொருள் நலம்மிகுந்தது. மதுரைமாநகரில் நூல்பாய் இடத்தும், சேல்பாய் தடத்தும், செய்யுள் மிக்கேறு சங்கங்கள் மிகுதியாக உள்ளன. மதுரை நகரத்திற் செய்யுட்கள் அரங்கேறப் பெறுகின்ற தமிழ்ச் சங்கம் அமைந்துள்ளது; அதன் வயல்களில் சங்குகள் மிகுதியாகத் தோன்றி உலவுகின்றன என்னும் செய்தியை, இரு பொருட்டிறன் என்னும் சிலேடையணி அமைய, இப்பாடல் இனிது உணர்த்துகின்றது.

(2) இம்மட்டோ! மதுரையின் சிறப்பையும், அதற்குக் காரணமாக அங்குத் தமிழ்ச் சங்கம் அமைந்திருந்ததனையும், அதன்கண் சிவபிரான் தலைமைப் புலவராக அமர்ந்து பணியாற்றியதனையும், இறையனார் களவியல் என்னும் நூல் இயற்றியருளியதனையும், இனிதெடுத்துக் குறிப்பிட்டுப் பின்வரும் கருத்து அமையப்பாடுகின்றார் சேக்கிழார்.

''திருவாலவாய் என்னும் கோயிலில் எழுந்தருளி, எங்கள் பிறவியைத் தீர்த்தருள்பவர் ஆகிய சிவபெருமான், இறையனார் என்னும் பெயருடைய புலவராக அமர்ந்து தலைமை தாங்கிச் சங்கம் இருந்து தமிழாராய்ந்ததும், மெய்ம்மைப் பொருளாம் தமிழ்நூலின் விளங்கு வாய்மை ஆகிய அகப்பொருள் இலக்கணத் தினை அழகுற விளக்கும் இறையனார் களவியல் என்னும் நூலைத் தந்தருளியதும், அதற்கு உரை காண்பதில் ஏற்பட்ட சங்கத்தார் கலகம் தீர்த்ததும், ஆகிய திருவிளையாடல்கள் நிகழ்வதற்கு ஏதுவாகப் பண்டைத் தமிழ்ச்சங்கம் அமைந்திருந்த தலம் மதுரையே யாகும். அந்நகரம் மூன்று உலகங்களிலும் தனக்கு ஒப்பும் உயர்வும் இல்லாத மேம்பாடு உடையது அன்றோ?!''

''மும்மைப் புவனங் களின் மிக்கது
அன்றே அம்மூதூர்!
மெய்ம்மைப் பொருளாம் தமிழ் நூலின்
விளங்கு வாய்மைச்
செம்மைப் பொருளும் தருவார்
திருவால வாயில்,
எம்மைப் பவம்தீர்ப்பவர் சங்கம்
இருந்தது என்றால்!''

எனவரும் செய்யுளால், மதுரை மாநகரின் கண் 'தமிழ்ச்சங்கம்' அமைந்து விளங்கியிருந்த செய்திகளைப் புகழ்ந்து பாடியருளும் சேக்கிழார், சங்கத் தமிழ் நூல்களைத் தம் இளமையிற் கற்றுச் சுவைத்து மகிழ்ந்திருப்பார் எனத் துணியலாம் அன்றோ? சங்கத் தமிழ் நூல்களைச் சேக்கிழார் தமது இளமைப் பருவத்தில் தகவுறக் கற்றுச் சுவைத்து மகிழ்ந்திருப்பார் என்று துணிந்தனமாயின், நெஞ்சையள்ளும் செஞ்சொற் காப்பியமாம் சிலப்பதிகாரத்தினையும், அவர் கற்று மகிழ்ந்திருப்பார் எனக் கொள்ளலாம். அங்ஙனம் கொள்ளின், சிலப்பதிகாரத்தின் சொற்பொருட் கருத்துச் சாயல்கள் ஒருசிலவேனும், பெரியபுராணத்திற் காணப்படுதல் கூடும். ஆதலின் அவற்றுள் ஒருசிலவற்றை மட்டும் ஈண்டுக் காண்போம்.

## இமயத்திற் புலிக்கொடி :

*(1)* பழந்தமிழ்ச் சோழ வேந்தர்கள் இமயம் வரையிற் சென்று புலிக்கொடி பொறித்து மீண்டு வந்த செய்தியினை, அச்சோழ நாட்டின் முதலமைச்சராக விளங்கியிருந்த சேக்கிழாரடிகள் பெருமிதம் தோன்றப் பாடுகின்றார்.

பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுள்
கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
நாட்டியல் பதனையான் நவிலல் உற்றனன்

பொன்மலைப் புலிநின் றோங்கப்
புதுமலை இடித்துப் போற்றும்
அந்நெறி வழியே ஆக
அயல்வழி அடைத்த சோழன்

எனவரும் பெரியபுராணப் பாடல்கள், சோழ வேந்தர்கள் இமயத்தில் புலிக்கொடி நாட்டிய செய்தியை வற்புறுத்துதல் காணலாம். இங்ஙனம், சேக்கிழார் பெருமான் பாடியருளிய மைக்குரிய சான்றுகளுள்,

இருநில மருங்கிற் பொருநரைப் பெறாஅச்
செருவெங் காதலில் திருமா வளவன்
புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள்
பகைவிலக் கியதிப் பயங்கெழு மலைஎன,
இமையவர் உறையும் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரிஒற்றிக் கொள்கையிற் பெயர்வோன்,
இப்பால் இமயத்து இருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற்கோட் டுழையதா, எப்
பாலும்,
செருமிகு சினவேற் செம்பியன்,
ஒருதனி ஆழி உருட்டுவோன் எனவே!

என்பன போல வரும் சிலப்பதிகாரப் பகுதிகள், குறிப்பிடத்தக்க சிறப்பினவாதல் ஒருதலை. சேக்கிழாரடிகள் மேலைச் சிலப்பதிகாரப் பகுதிகளைப் படித்துச் சுவைத்து மகிழ்ந்திருப்பார்! மகிழ்ந்ததன் பயனாகவே, சோழவேந்தர்கள் இமய வெற்பிற் புலிக்கொடி பொறித்த செய்தியைப் புகழ்ந்து பாடியிருப்பார் என நாம் கருதி மகிழலாம்.

## கார்எனும் பருவ நல்லாள் :

*(2)* சேக்கிழாரடிகள், ஆனாய நாயனார் புராணத்துள், முல்லை நிலத்துக்குரிய கார் காலத்தினையும், மாலைப் பொழுதினையும் அழகுறப் புனைந்து பாடுகின்றார். கார்காலம் தோன்றினால் காட்டில் முல்லைப்பூக்கள் மலரும்; மயில்கள் ஆடும்; வண்டுகள் பாடும்; சிவந்த ஈயற் பூச்சிகள் தோன்றிப் பறக்கும். மேகங்கள் வானத்தில் திரண்டு கவியும். மாலை வேளைகளில் மின்னல்கள் தோன்றி அசைந்து பளிச்சிடும். இவ்வியற்கை நிகழ்ச்சிகளைப் பாடலுறும் சேக்கிழார், ''கார்காலம் என்னும் அழகிய பருவ நங்கையானவள், மயில்கள் அகவவும், வண்டுகள் பாடவும், வெண்மையான முல்லை மலர்கள் பூக்கவும், சிவந்த நிறமுடைய இந்திர கோபப் பூச்சிகள் பறக்கவும், மின்னல்கள் இடையிடையே தோன்றவும், மாலை நேரத்தில் மேகங்கள் அசையும்படி, மழைக்காலம் ஆகிய பருவத்தில் வந்தாள்'' என்னும் கருத்தமையப் பாடுகின்றார்.

நீலமா மஞ்ஞை ஏங்க
நிரைக் கொடிப் புறவம் பாடக்
கோலவெண் முகையர் முல்லை
கோபம் வாய் முறுவல் காட்ட
ஆலும்மின் இடைசூழ் மாலைப்
பயோதரம் அசைய வந்தாள்
ஞாலநீ டரங்கில் ஆடக்
கார்எனும் பருவ நல்லாள்

''இத்தகைய அழகிய இனிய சாயல்நமக்கு இல்லையே என்று, மயில்கள் கண்டு மனத்தினில் ஏக்கம் கொண்டு நிற்கவும், வரிசையாக நின்று, கொடி போன்ற இளம் பெண்கள் முல்லைப் பண்ணைப் பாடவும்; வெண்மையான முல்லை மலர்களே பற்களாகவும்; சிவந்த நிறமுடைய இந்திர கோபம் என்னும் பூச்சிகளே எழில் கனிந்த இதழ்களாகவும் தோன்ற; மின்னலைப்போன்று நுடங்குகின்ற நுண்ணிய

இடையுடன், தனது இளங்கொங்கைகள் அசையும்படி, உலகம் ஆகிய நாடகமேடையின்மீது, கார் காலம் என்னும் பருவ நலம் வாய்ந்த அழகிய இளம்பெண் வந்து சேர்ந்தாள்'' என வேறொரு பொருளும் புலப்படுமாறு, உருவக முறையிற் சிறந்த சொல்லோவியம் ஒன்றைப் பெரியபுராணத்துள் அமைத்துக் காட்டுகின்றார் சேக்கிழார்.

இதனை ஒருபுடையே ஒத்து, இதனுடன் தொடர்பு உடையதோ என நம்மனோர் எண்ணுதற்கு இடனுண்டாமாறு,

''விரிகதிர் பரப்பி உலகம் முழுதாண்ட
ஒருதனித் திகிரி உரவோற் காணேன்!
அங்கண் வானத்து அணிநிலாத் திகழ்தரும்
திங்களஞ் செல்வன் யாண்டுளன் கொல்?
என்த்
திசைமுகம் பசந்து செம்மலர்க் கண்கள்
முழுநீர் வார முழுமெயும் பனித்துத்
திரைநீர் ஆடை இருநில மடந்தை
அரைசுகெடுத் தலமரும் அல்லற் காலை''

எனவரும் இளங்கோவடிகளின் ''அந்திமாலைச் சிறப்புச் செய்காதை'' வரிகள், அழகுற அமைந்து விளங்குதல், ஒப்புநோக்கி யுணர்ந்து மகிழற்பாலதாகும்.

''தனது கதிர்களைப் பரப்பி உலகம் முழுவதும் ஆண்ட ,ஒற்றைச் சக்கரத்துத் தேரையுடைய சூரியன் ஆகிய பேரரசன் மறைந்தான். அடுத்துத் தோன்றி முடிசூடி ஆளுதற்குரிய சந்திரன் ஆகிய இளவரசன் எங்கே இருக்கின்றானோ? தெரியவில்லையே என்று, திசைஆகிய முகம் பசலை நிறம் அடைந்து, சிவந்த மலர் போன்ற கண்களினின்று நீர் பெருக, வானம் ஆகிய உடம்பு முழுவதும் பனி கொண்டு,கடல் ஆகிய ஆடையை உடுத்து, நிலம் ஆகிய அரசியானவள், தன் கணவனை இழந்து, செய்வது அறியாது திகைத்து வருந்துகின்ற அந்தி மாலைக் காலம்'' என்பது, இவ்வினிய வரிகளின் பொருள். சேக்கிழார் கார்காலத்தை ஒரு நடனப் பெண்ணாக உருவம் செய்தது போலவே ,இளங்கோவடிகள் அந்திமாலைக் காலத்தினை ஓர் அரசியாக உருவகம் செய்திருக்கும் கருத்தொப்புமை, உணர்ந்து மகிழ்தற்குரியது.

**புகைகளும் ஒலிகளும்:**

(3) இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்தில், கோவலனும் கண்ணகியும் மதுரை மாநகர் நோக்கிச் செல்லுங்கால், மதுரை நகருக்குச் சிறிது தொலைவில் நெருங்கிக் கொண்டிருக்கும்பொழுது, அங்கே பலவகைப் புகைகள் வெளிப்படுதலைக் கண்டனர் என்கின்றார். சமையலறைப்புகை, அப்பவாணிகன் அப்பம் சுடும்புகை, அந்தணர்கள் இயற்றும் வேள்விகளின்புகை, முதலிய பலவேறு இனிய நல்ல புகைகள், மதுரைமா நகரினின்று எழுந்து விசும்பிற் பரவி யுலவுதலைக் கோவலனும் கண்ணகியும் கண்டனர்.

அட்டிற் புகையும், அகல் அங்காடி
முட்டாக் கூவியர் மோதகப் புகையும்,
மைந்தரும் மகளிரும் மாடத்து எடுத்த
அந்தீம் புகையும், ஆகுதிப் புகையும்,
பல்வேறு பூம்புகை அளைஇ........

இங்ஙனமே, கோவலனும் கண்ணகியும் மதுரை நகரினை நெருங்கி மிகவும் அணித்தாக நடந்து கொண்டிருக்கும்போது, வைகறை ஆகிய விடியற்காலை வேளையில், மதுரையினின்று எழும் பலவகை ஒலிகளைக் கேட்கின்றார். ''பாண்டிய மன்னனின் அரண்மனையிற் காலைவேளையில் அறையப்பெறும் முரசத்தின் ஒலியும், அந்தணர்கள் ஓதும் வேதங்களின் ஒலியும், முனிவர்கள் மந்திரங்களை ஓதி வழிபடுகின்ற ஒலியும், நாட்காலையில் வாட்போர் வீரர்கள் எழுப்பும் முரசின் ஒலியும், யானைப் படைகள் பிளிறி முழங்கும் ஒலியும் ஆகிய ஒலிகள் பலவும், கடலின் ஒலியைப்போல அவர்களுக்குக் கேட்டன'' என்று இளங்கோவடிகள் பாடுகின்றார்.

காலை முரசக் கனைகுரல் ஓதையும்
நான்மறை அந்தணர் நவின்ற ஓதையும்
மாதவர் ஓதி மலிந்த ஓதையும்
வாளோர் எடுத்த நாளணி முழவமும்
போரிற் கொண்ட பொருகரி முழக்கமும்
வாரிக் கொண்ட வயக்கரி முழக்கமும்
பணைநிலைப் புலவி ஆலும் ஓதையும்
கிணைநிலைப் பொருநர் வைகறைப் பாணியும்
கார்க்கடல் ஒலியிற் கேட்டனர்....

இச்சிலப்பதிகாரப் பகுதிகளைப் படிக்கும் போது, சேக்கிழார் பாடல்கள் சிலவும் நம் நினைவுக்கு வருகின்றன. ''சோழ நாட்டு மாடமாளிகைகளையும் சோலைகளையும் பல வகைப் புகைகள் சூழ்கின்றன. அவைகள், கரும்பு ஆலைகளின் நறும் புகையோ, மகளிர் தம் கூந்தலுக்கு இடும் அகிலின்தூபமோ, யூபம் என்னும் தூண்களை நாட்டி நடத்தும் வேள்விகளின் புகையோ, வானத்திற் பரவும் மேகமோ, இவைதாம் என்று சுட்டிச் சொல்லல் அரிது'' என்கின்றார் சேக்கிழார்!

கரும்படு களமர் ஆலைக்
கமழ்நறும் புகையோ, மாதர்
சுரும்பெழ அகிலால் இட்ட
தூபமோ, யூப வேள்விப்
பெரும்பெயர்ச் சோலை தோறும்
பிறங்கிய புகையோ, வானின்
வருங்கரு முகிலோ, சூழ்வ
மாடமும் காவும் எங்கும்

கழறிற்றறிவார் என்னும் சேரமான் பெருமாள் நாயனார் வாழ்ந்து, அரசு செலுத்திய கொடுங்கோளூர் என்னும் சேரநாட்டுத் தலைநகரம் பற்றிப் பாடத் தலைப்படும் சேக்கிழாரடிகள், மதுரை நகரில் வைகறைப் பொழுதில் எழும் பலவகை ஒலிகளையும் பற்றி, இளங்கோவடிகள் குறிப்பிட்டிருப்பதனை நினைவுகூரும் வகையில், பின்வருமாறு பாடியருளியிருத்தல் ஒப்பிட்டு உணர்ந்து மகிழ்தற்கு உரியது.

''கொடுங்கோளூர் என்னும் மலைநாட்டுத் தலைநகரத்தில், காலை நேரத்திற் பல

வகை ஒலிகள் எழுகின்றன. கலைஞர்கள் பலரும் வைகறையிலேயே விழித்தெழுந்து, தத்தம் கலைகளைப் பயிலுகின்ற ஒலியும்; 'வேழம் உடைத்து மலைநாடு' என்பராதலின், யானைப் படைகள் பிளிறுகின்ற ஒலியும்; சோலைகளில் மலருகின்ற பூக்களின் தேனையுண்டு மகிழ்ந்து மிழற்றுகின்ற வண்டுகளின் ஒலியும்; அரபி நாட்டினின்று வரும் குதிரைப் படைகள் அங்கு மிக்கிருத்தலால், அவைகள் கனைக்கின்ற ஒலியும்; மக்கள் ஒரு குறைவும் அற்று இன்புற்று வாழ்தலினால் நிகழ்கின்ற ஆடல் பாடல் முழவுகளின் ஒலியும்; கடலின் பேரொலியையும் விழுங்கி மிகுந்தெழும் முறையில் விளங்கி, எவரும் வியக்கும்படி திகழ்கின்றது கொடுங்கோளூர்'' எனப்பாடுகின்றார் சேக்கிழார் !

காலை எழும்பல் கலையினொலி,
களிற்றுக் கன்று வடிக்குமொலி,
சோலை எழும்மென் சுரும்பினொலி,
துரகச் செருக்காற் சுலவுமொலி,
பாலை விபஞ்சி பயிலுமொலி,
பாடல் ஆடல் முழவினொலி,
வேலை ஒலியை விழுங்கிஎழ,
விளங்கி ஓங்கும் வியப்பினதால்

**பாலைநிலப் புனைவு:**

(4) கோவலன், கண்ணகி, கவுந்தி என்னும் மூவரும் உறையூரினின்று நீங்கி, வைகறையிற் புறப்பட்டுத் தென்றிசை நோக்கிச் செல்கின்றனர். வழியில் ஓர் இள மரக்காவின்கண் தங்கினர். அங்கே மாங்காட்டு மறையோன் என்பவனைக் கண்டு அவன்பால் உரையாடினர். அவன் திருவேங்கடமும் திருவரங்கமும் கண்டு தொழுவதற்காகத் தான் வந்த செய்தியைக் கூறினான். அதுகேட்டு மகிழ்ந்த கோவலன், அவனை மதுரைக்குச் செல்லும் வழி யாது? என வினவினான். ''வெப்பம்மிக்க கொடிய இளவேனிற் காலத்தில், இப்பாலை நில வழியில் நடந்தோ, நீங்கள் மதுரைக்குச் செல்லப் போகின்றீர்கள்?'' என வியந்து வினவி, மதுரைக்குச் செல்லும் நெறியை, அவன் கோவலனுக்குத் தெரிவிக்கின்றான். அப்பகுதியில்,

''முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்''

என்னும் அழகிய சிறந்த வரிகள் வருகின்றன. பாலைத் திணையின் இயல்பினை விளக்குவதற்குச் சிவஞான முனிவர் முதலிய சான்றோர்கள் பலரும், இச்சிலப்பதிகார வரிகளையே, இலக்கண நூல்களில் மேற்கோள் காட்டுவர். தமிழ்நாட்டில் தனியே பாலை என்று ஒரு நிலம் கிடையாது. வேனிற் கால் வெப்பத்தினால், முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும், தம் வளம் குன்றித் திரிதலால், பாலை என்னும் நிலமாகத் தோன்றும். எனவே பாலைக்கு 'நடுவு நிலைத்திணை' என்றும் ஒரு பெயர் உண்டு. பாலைத் திணைக்கு வேனிற் காலமும் நண்பகலும் முறையே பெரும் பொழுதும், சிறுபொழுதுமாக உரியன என்று கூறுவர். பின் பனிக்காலமும் பாலைக்குரியபெரும்பொழுதாகும். இப்பாலை நிலத்திற்குரிய தெய்வமாக, ஞாயிற்றையும் வாயுவையும் ஒரு சிலர் கூறுவது உண்டு. கலித்தொகை என்னும் சங்க நூலின், பாலைத் திணை பற்றிய பாடல்கள், அவர்தம் கருத்திற்கு அரண் செய்யும். எனினும் கொற்றவையினையே பாலைத் திணைக்குரிய தெய்வமாக இளங்கோவடிகள் கொண்டார். ''வேட்டுவவரி''என்னும் சிறந்த பகுதியிற் பாலைநில வேடர்கள் கொற்றவையைப் பரவி வழிபட்டதாக அடிகள் பாடியிருத்தல் கொண்டு இதனையுணரலாம்.

ஆசிரியர் சேக்கிழார், இளங்கோவடிகளின் கருத்தினையே, தாமும் இயைந்து தழுவிப் பாடியருள்கின்றார். தமிழகத்திற் பாலைநிலம் என்பது ஒன்று தனியே இன்மையின் 'பாலையும் சொலல் ஆவன உள' என்றும்; அவை பரற்கற்கள் நிறைந்த முரம்பு நிலங்களாகும் என்றும்; முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல்பு இழந்த பகுதிகளே பாலை என வழங்கப்படுமாதலின், அவற்றை 'முல்லையும் குறிஞ்சியும் அடுத்த சில இடங்கள்' என்றும் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். அதற்குரிய தெய்வம் நீலி (காளி, துர்க்கை); பெரும் பொழுது வேனில், சிறுபொழுது கடும்பகல்; எனச் சேக்கிழாரும் இளங்கோவைப் போலவே சிறந்தெடுத்துப் பாடுகின்றார்.

கோல முல்லையும் குறிஞ்சியும்
அடுத்தசில் இடங்கள்,
நீல வாட்படை நீலி
கோட்டங்களும் நிரந்து,
கால வேனிற் கடும்பகற்
பொழுதினைப் பற்றிப்
பாலையும் சொலல் ஆவன
உள, பரல் முரம்பு

எனப் பெரிய புராணத்தில், திருக்குறிப்புத் தொண்டநாயனார் வரலாற்றுத் தொடக்கத்தின்கண், தொண்டை நாட்டின் ஐந்திணை வளங்களும் பாடப்பெறும் பகுதியில் வரும் அழகிய இனிய பாடல் அமைந்திருத்தல் அறிந்து மகிழ்தற்குரியதாகும்.

(5) இங்ஙனமே, திருக்குறிப்புத் தொண்டர் வரலாற்றுத் தொடக்கத்தின் கண், தொண்டை நாட்டின் சிறப்பினைப் புகழ்ந்து பாடுங்கால், சேரநாடும் தொண்டைநாடும், தம்முள் 'மைத்துனக் கேண்மை' பேண நீடிய முறைமையின எனச் சேக்கிழார் பெருமான் மொழிகின்றார்.

ஆணையாம்என நீறுகண்டு
அடிச்சேரன் என்னும்
சேண் உலாவுசீர்ச் சேரனார்
திருமலை நாட்டு
வாள் நிலாவுபூண் வயவர்கள்
மைத்துனக் கேண்மை
பேண நீடிய முறையது
பெருந் தொண்டை நாடு

என்பது பெரியபுராணச் செய்யுள். இங்ஙனம் சேக்கிழார் பாடியமைக்கு அடிப்படை, சிலப்பதிகாரமே ஆகலாம் போலும் எனத் தோன்றுகின்றது. சிலப்பதிகாரத்தில் வஞ்சிக் காண்டத்து, நீர்ப்படைக் காதையின்கண்,

மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
இளவரசு பொறாஅர் ஏவல் கேளார்
வளநாடு அழிக்கும் மாண்பினர் ஆதலின்
ஒன்பது குடையும் ஒரு பகல் ஒழித்துப்
பொன்புனை திகிரி ஒருவழிப் படுத்தோய்!

எனவரும் வரிகளால், சேரன் செங்குட்டுவனுக்கு மைத்துனன் ஆகிய சோழன் ஒருவன் இருந்தான் என்பதும், இளவரசனாக இருந்த அம் மைத்துனச் சோழனுக்குத் தாயத்தார் சிலர் இடையூறு விளைத்து அரசை நிலைகுலையச் செய்து வந்தனர் என்பதும், நேரிவாயில் என்னும் இடத்தில் போர் நிகழ்த்திச் சேரன் செங்குட்டுவன் அத்தாயத்தார்களை வென்று அடக்கித் தன் மைத்துனச் சோழனின் ஆட்சி நிலைபெறுமாறு துணைபுரிந்தனன் என்பதும், அறியப்படுகின்றன. இவ்வாற்றால் சேரனுக்குச் சோழன் மைத்துனக் கேண்மையன் ஆதலும், சோழநாட்டின் ஒரு பகுதியாகவே தொண்டைநாடு மிகப் பழங்காலத்தில் விளங்கியதாதலும் கருதியே, சேரனின் மலைநாட்டு வாள் வீரர்கள் மைத்துனக்கேண்மை கொண்டாடத் திகழ்வது தொண்டைநாடு எனச் சேக்கிழார் பாடினராதல் வேண்டும்! இதற்குத் 'தொண்டை மண்டல சதகம்' என்னும் நூல், வேறொரு கதையைக் கூறுகின்றது. எனினும் இங்கு நாம் குறிப்பிட்டதும் ஒருவகையில் ஏற்புடைத்தென்று கொள்ளுதல் கூடும்.

**பார்ப்பனவாகை:**

பெரியபுராணத்துட் புகழ்ந்தோதப்பெறும் அறுபான்மும்மை நாயன்மார்களுள் சண்டேசுவர நாயனார் ஒருவர். அவர் தோன்றியருளிய தலம் திருச்சேய்ஞலூர் என்பது. அங்கே மறையவர்கள் மிகுதியாக வாழ்கின்றனர். அவர்கள் திருநீற்றின்பால் ஒன்றுபட்டுஉறைத்த அன்பு கொண்டவர்கள். உபயனத்திற்கு முன்பு ஒரு பிறப்பும், உபநயனத்திற்குப் பின்பு ஒரு பிறப்பும், ஆகிய இரண்டு பிறப்பின் சிறப்பினைப் பெற்றவர்கள். காட்டுத்தீ வீட்டுத்தீ ஞானத்தீ என்னும் மூன்று எரியினையும் வளர்த்துக் காப்பவர்கள். இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாகக் கற்றவர்கள். ஐந்து புலன்களுக்கு அடிமையாகி அவற்றின் பின்னே தாம்செல்லாமல், தமக்கு அவற்றை அடிமையாகக்கொண்டு தம்பின்னே அவைகள் அடங்கி நின்று பணிந்து தொடர்ந்து வரப்பெறும் மேன்மை வாய்ந்தவர்கள். ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் ஆறு தொழில்களையும் தவறாமல் புரிந்து, உண்மையான ஒழுக்க நெறியில் நிற்பவர்கள். ஆதலின், ஏழு உலகங்களும் அம்மறையவர்களைப் புகழ்ந்து போற்றும் என்று, எண் அலங்காரம் என்னும் அணி நலம் அமையுமாறு, சேக்கிழாரடிகள் அத்தலத்தினைப் புகழ்ந்து பாடியருள்கின்றார்.

செம்மை வெண்ணீற்று ஒருமையினார்;
இரண்டு பிறப்பின் சிறப்பினார்;
மும்மைத் தழல்ஓம் பியநெறியார்;
நான்கு வேதம் முறைபயின்றார்;
தம்மை ஐந்து புலனும்பின்
செல்லும் தகையார்; அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகும்
போற்றும் மறையோர்விளங்குவது!

இப்பகுதியானது, சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டத்துள் கட்டுரைகாதை என்னும் பகுதியின் கண், மதுராபதித் தெய்வம், பாண்டிய வேந்தரின் பழம்பெரும் செங்கோற் பண்பினையெல்லாம், கண்ணகிக்கு எடுத்துக்கூறி விளக்கியதாக வரும் பகுதியில், பராசரன் என்னும் பார்ப்பனன் ஒருவனைப் பற்றிக் குறிப்பிடுவதாக வரும் பகுதியை நினைப்பிக்கும் வகையில் அமைந்துள்ளது.

பராசரன் என்னும் அந்தணன், வீடுபேறு விரும்புதல் ஆகிய ஒன்றுபுரி கொள்கையினன்; கல்வித் தொடக்க நிலைக்கு முன்னர் ஒரு பிறப்பும், அதன்பின்னர் ஒரு பிறப்பும் ஆகிய இரு பிறப்பை யுடையவன்; ஆகவனீயம் காருகபத்தியம் தக்கிணாக்கினி என்னும் மூன்று நெருப்பையும் வளர்த்து வருபவன், நான்கு வேதங்களையும்முறையே முழுவதும் கற்றவன், கடவுள்வேள்வி முனிவர்வேள்வி உயிர்வேள்வி மனிதவேள்வி தென்புலத்தார்வேள்வி என்னும் ஐந்து பெரு வேள்விகளையும் செய்து ஒழுகுபவன்; ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் ஆறு தொழில்களையும் தவறாமல் புரிபவன், இதனை,

ஒன்றுபுரி கொள்கை இருபிறப் பாளர்
முத்தீச் செல்வத்து நான்முறை முற்றி
ஐம்பெரு வேள்வியும் செய்தொழில் ஓம்பும்
அறுதொழில் அந்தணர் பெறுமுறை வகுக்க
நாவலங் கொண்டு நண்ணார் ஒட்டிப்
பார்ப்பன வாகை சூடினன்.....

எனச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், எண் அலங்காரம் என்னும் அணியமையப் பாடுகின்றார். மேலைப் பெரியபுராணப் பாடலும், சிலப்பதிகார வரிகளும், தம்முட் பெரிதொத்து விளங்குதல் நினைத்து உணர்ந்து மகிழ்தற்குரியது.

**அருமந்த அரசாட்சி:**

(7) மதுரை மாநகரிற் கோவலன் கொலையுண்டதும், கண்ணகி தன் கணவன் கள்வன் அல்லன் என வழக்குரைத்ததும், அதனால் தன் தவறுணர்ந்து கலங்கிய பாண்டியன் நெடுஞ்செழியன் தன் உயிர் துறந்ததும் ஆகிய செய்தியைச் சேரவேந்தன் ஆகிய செங்குட்டுவன் கேள்வியுற்று, மிகவும் மனம் வருந்துகின்றான். அப்போது செங்குட்டுவன்.

மழைவளம் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயிர் எய்திற் பெரும்பேரச்சம்
குடிபுர வுண்டும் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல்லை

என அரசாட்சிப் பொறுப்பினால் ஏற்படும் அச்சம் கவலை முதலிய அலக்கண்கள் குறித்துக் கூறுவதாக வரும் பகுதி,

மாநிலங் காவலன் ஆவான்
மன்னுயிர் காக்கும் காலைத்
தான் அதனுக்கு இடையூறு
தன்னால், தன் பரிசனத்தால்,
ஊனமிகு பகைத் திறத்தால்,
கள்வரால், உயிர் தம்மால்,
ஆனபயம் ஐந்தும் தீர்த்து
அறங்காப்பான் அல்லனோ?

ஒருமைந்தன் தன்குலத்துக்கு
உள்ளான் என்பதும் உணரான்,
தருமந்தன் வழிச்செல்கை
கடன்என்று, தன்மைந்தன்
மருமம் தன் தேராழி
உறஊர்ந்தான் மனுவேந்தன்!
அருமந்த அரசாட்சி
அரிதோமற் றெளிதோ தான்?

என்னும் அரிய பெரியபுராணப் பாடல்களை, நம்மனோர் நெஞ்சிற் கொணர்ந்து நமக்கு நினைப்பூட்டி மகிழ்விக்கும் தகைமையதாய் விளங்குதல் காண்கின்றோம் அல்லமோ?

**இசைக்கலை நுட்பங்கள் :**

இளங்கோவடிகள் இசைக்கலைப் புலமை நிரம்பியவர் என்பதும், அவர்தம் சிலப்பதி காரம் இசைக்கலை ஆராய்ச்சிக்குரிய கருவூல மாக இன்றும் விளங்கி வருகின்றது என்பதும், தமிழுணர்வு பெற்றார் அனைவரும் நன் கறிந்ததொன்று, அருட்டிரு விபுலானந்த அடி களார் அண்மையில் இயற்றியருளிய ''யாழ் நூல்'' என்னும் அரும்பெறல் ஆராய்ச்சி நூல், இவ்வுண்மையை மலையிலக்கென விளக்கா நிற்கும். இங்ஙனமே சேக்கிழார் பெருமானும் இசைக்கலையில் நிரம்பிய புலமை கைவரப் பெற்றவர் என்பது பெரியபுராணத்தாற் புல னாகின்றது. அவற்றுள் ஓரிடம் மட்டுமே காண் டல் ஈண்டைக்கு அமையும்.

திருவைந்தொழுத்தை உள்ளுறையாகக் கொண்டு, வேய்ங்குழல் வாசித்து, ஆனாய நாயனார் சிவபிரானை வழிபட்ட திறத்தினைச், சேக்கிழார் தமது இசைக் கலைப்புலமை நுண் ணுணர்வு வளம் விளங்கப் பாடியருள்கின்றார். ''ஆனாயர் எழுவிரல் இடையிட்ட இன்னிசை வங்கியம் (Flute) எடுத்தார். அதன் துளை களில் அழகிய தம் இதழ்களை வைத்து, மலர் களில் வண்டுகள் மகரந்தப் பொடியினைக் கவ ருங்காற் செய்வதுபோல முரலுதல்—எழுதல்— நிற்றல் என்பன செய்து ஊதினார். முத்திரை முதலிய அனைத்து முறைத் தானங்களையும் சோதித்தார். வைத்ததுளை ஆராய்ச்சி வக்க ரனைவழி போக்கி ஏற்ற நிலையுணர்ந்தார். உணர்ந்ததற்பின் சட்சம் இடபம் காந்தாரம் மத்திமம் பஞ்சமம் தைவதம்நிஷாதம் என்னும் ஏழு சுரங்களின் படிமுறையாகிய வரிசையினை ஆரோசை (எச்சு, ஆரோகணம்), அமரோசை (தக்கு, அவரோகணம்) என்னும் ஓசைப் பாடு களில் அமைத்தார். மாறிவரும் குறிஞ்சிப் பண் ணின்பின் முல்லைப் பண்ணைத் தோற்றினார். பாலை யாழுக்கு அமைந்த தாரம் உழை என் னும் இரண்டும் கிழமை கொள்ள இடும் தானங் களில், இளை யக் குரல் எனக்கொண்ட பட்ட டைக் குரல் ஆகிய கொடிப்பாலையில் நிறுத்தி னார். பண் பண்ணியல் திறம் திறத்திறம் என்று இசையிற் புகல் நான்கிலும், ஆயத்தம் எடுப்பு உக்கிரம் சஞ்சாரம் இடாயம் என்னும் ஐந்து துறைகளிலும் ஏற்ற முறைகளை விளை வித்தார். மந்தரம் (மெலிவு), மத்திமம் (சமன்) தாரம் (வலிவு) என்ற மூவகைச் சுருதிகளிலும், சுரத்தானத்துக்கு உரிய துளைகளை உரிய அளவு பெறும்படி விரல்களால் அசைத்து இயக்கினார். (15,24—28)

எண்ணியநூற் பெருவண்ணம்
இடைவண்ணம் வனப்பு என்னும்
வண்ண இசை வகையெல்லாம்
மாதுரிய நாதத்தில்
நண்ணிய பாணியும் இயலும்
தூக்கும் நடைமுதற் கதியில்
பண்ணமைய எழும் ஓசை
எம்மருங்கும் பரப்பினார்.

இங்ஙனம் பல இசை நுணுக்கக்குறிப்புக்கள் அமையவரும் பெரியபுராணப் பகுதிகள், இளங்கோவடிகளைப் போலவே சேக்கிழாரடி களும் இசைக்கலைப் புலமையும் ஈடுபாடும் மிக்கவராக விளங்கிய செய்தியினைப் புலப் படுத்தும்.

**பத்தினிப் பெண்டிர் வரலாறு :**

(9) சிலப்பதிகாரம் வஞ்சினமாலை என்னும் பகுதியிற் கண்ணகியானவள், பத்தினிப் பெண்கள் எழுவரின் வரலாறுகளைக் குறிப்பிட்டு, அத்தகைய கற்புநலஞ் சான்ற ''மட்டார் குழலார் பிறந்த பதிப் பிறந்தேன், பட்டாங்கு யானும் ஓர் பத்தினியே யாம் ஆகில், ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரை யும், என் பட்டிமையும் காண்குறுவீர்'' எனச் சூள் உரைத்து வஞ்சினம் சாற்றுகின்றாள். அவ்விடத்தில்,

''நற்பகலே
வன்னிமரமும் மடைப்பள்ளியும் சான்றாக
முன்னிறுத்திக் காட்டிய மொய்குழலாள்''

எனவரும் வரிகள், சிலப்பதிகார காலத்திற்குப் பின்னர்த் திருஞான சம்பந்தப் பெருமான், வைப்பூர்த்தாமன் என்னும் வணிகனின் மகள் பால் இரக்கம்கொண்டு, அரவு தீண்ட் இறந்த அவள்தன் அருமைக் காதலனைத் திருமருகல் என்னும் தலத்தில் திருப்பதிகம் பாடி உயிர் பெற்றெழச் செய்து, காத்தருளியதாகப் போதரும் பெரியபுராண வரலாற்றினை, ஒரு புடைக் கதையொப்புமை பற்றி, ஒராற்றால் நினைவூட்டா நிற்கின்றன.

**மனுநீதிச் சோழன் :**

(10) இனி, ஆசிரியர் சேக்கிழாரடிகள் தமது பெரியபுராணத்துள் திருநகரச் சிறப்பின் கண், மனுநீதிச்சோழன் வரலாற்றினை மன முருகவும், சுவைநலங்கள் பெருகவும், அழகுறப் பாடியருளி இருக்கின்றார்! இவ்வாறு அவர் பாடியிருத்தற்கு அடிப்படைக் காரணமும்,

சான்றும் சிலப்பதிகாரமேயாகும் என நாம் தயங்காது துணிந்து கூறலாம்.

''புறவு நிறைபுக்கோன்,
கறவை முறைசெய்தோன்'' (1)

''எள்ளறு சிறப்பின்
இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண்
தீர்த்தோன்; அன்றியும்
ஆவின் கடைமணி உகும்நீர்
நெஞ்சுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை
ஆழியின் மடித்தோன்'' (2)

''புறவுநிறை புக்குப்
பொன்னுலகம் ஏத்தக்
குறைவில் உடம்பரிந்த
கொற்றவன்யார் அம்மானை?
குறைவில் உடம்பரிந்த
கொற்றவன்முன் வந்த
கறவை முறைசெய்த
காவலனகாண் அம்மானை! (3)

எனச் சிலப்பதிகாரத்துள், ஆங்காங்கு இடையிடையே வரும் சில வரிகளின் விரிவான பொருள் விளக்கமாகவே, பெரியபுராணத்துள் மனுநீதிச் சோழனின் வரலாறு, சோழநாட்டமைச்சராகிய சேக்கிழாராற் சிறப்புறப் பாடப் பெற்றுள்ளது. 'கறவை முறைசெய்த காவலன்' என்னும் குறிப்பு சிலப்பதிகாரத்தின்கண் தான் முதன்முதற் காணப்படுகின்றது. எனவே, சேக்கிழாரடிகள், நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தின் செஞ்சொற்சுவை நலங்களில் ஈடுபட்டு மகிழ்ந்ததன் பயனாகவே, மனுவேந்தனின் அரிய வரலாற்றினை அழகிய முறையில் தமது நூலுட் சுவை துளும்பப் பாடியருளினார் எனத் துணிதல் பொருந்துவதேயாகும்.

**மற்றும் சில மாட்சிகள்:**

(11) இம்மட்டோ! கோவலனும் கண்ணகியும் புணர்ந்து மகிழ்ந்தனர் என்னும் செய்தியினை இடக்கர் அடக்கித் ''தாரும் மாலையும் கையற்று மயங்க'' என நுட்பமும் சுருக்கமும் அமைய இளங்கோவடிகள் நுவன்றிட்டார். அவ்வாறே திருநீலகண்டர் பரத்தைபால் அணைந்து போந்த செய்தியினை ''இளமை மீதூர இன்பத் துறையினில் எளியரானார்'' எனச் சேக்கிழாரடிகள் நயத்தக்க நாகரிக நலம்தோன்றக் கூறியிருக்கும் மாட்சிமையினை என்னென்போம்!

(12) மதுரையிற் பாண்டிய மன்னன் உயிர் துறந்ததனையும் அவனுக்கு நேர்ந்த பழிச் சொல்லினையும், ''தென்னர் கோமான் தீத் திறம்'' என்றும் ''செம்மையின் இகந்த சொல்' என்றும் செங்குட்டுவன் குறிப்பிட்டதாக, இளங்கோவடிகள் இயம்புகின்றார். இம்முறைமைக்கு ஏற்பவே ''முன் நின்றபாதகனும் தன் கருத்தே முற்றுவித்தான்'' எனவும், ''தான் நினைந்த அப்பரிசே செய்தான்'' எனவும், ஆங்காங்கே சேக்கிழாரடிகள் தெரிவிக்கின்றார் இவ்வொருமைப்பாடு எண்ணுந்தோறும் நம் மனத்தை உருக்கி இன்பம் பயக்கின்றதன்றோ?

**முடிவுரை:**

இளங்கோவடிகளுக்கும், சேக்கிழாரடிகளுக்கும் இடையே, இன்னோரனைய பல கருத்தொப்புமைகளும், பண்பொப்புமைகளும் காணப்படுதலை, ஒப்புமையாய்வு முறையினாற் கண்டுணர்ந்து, அவ்விருவர் தம் நூல்களையும் பல்காற் பயின்றோதிச் செவ்விதிற் சுவைத்து மகிழ்ந்து, நாம் அனைவரும் தமிழ்ச் சைவ நலங்களெல்லாம் பெற்று, நன்கினிது வாழ்ந்து உய்ய முயலுவோமாக!.

---

# "ஏறார், இடர் அழுந்துவார்"

உயிர் என்னும் சொல்லுக்குப் பெரியோர்கள் பல பொருள் கூறுவர். உய்யும் தகுதி உடையது, உயிர் என்பது ஒரு பொருள். எல்லா உயிர்களுமே உய்யப்பெறும் தகுதி உடையனவாயினும், ஒருகாலும் உய்யப்பெறாதவர்கள் மூவகையினர் உண்டு. துவயம் என்னும் மந்திர உபதேசம் பெறாதவர்கள், அதனை உபதேசிக்கவல்ல ஆசாரியனை அடிபணியாதவர்கள், சரம சுலோகத்தில் நம்பிக்கையற்றவர்கள் ஆகிய மூவரும் உய்தியடைதல் அரிது.

பிறவிக் கடலைக் கடத்தற்கு உரிய வழி அறியாதவர்களும், அவ்வழியை அறிந்தவர்களிடத்துச் சென்று சேர்தல் இல்லாத தீய மனத்தவர்களும், எம்பெருமான் பகவத் கீதையிற் பணித்த சரமசுலோகத்தில் நம்பிக்கைத் தெளிவு இல்லாதவர்களும், திருமாலின் உலகமாகிய திருநாட்டிற்குச் சென்று சேரப் பெறாதவர்களாய், பிறவிக் கடலிலே விழுந்து இடர்ப்பட்டுக் கொண்டு கிடப்பார்கள்.

நெறியறியா தாரும், அறிந்தவர்பால் சென்று
செறிதல்செயாத் தீமனத்தார் தாமும்-இறையுரையைத்
தேறா தவரும், திருமடந்தை கோன்உலகத்து
ஏறார், இடர்அழுந்து வார்.

—ஞானசாரம்.

[நெறியறியாதவர்-துவயமந்திரத்தின் உபதேசம் பெறாதவர்கள். தீ மனத்தர்-ஆசாரியனின் அடிப்பணியாதவர்கள். இறைஉரையைத் தேறாதவர்கள்-கண்ணபிரான் அருளிய பகவத்கீதையின் சரம சுலோகத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள்.]

—ஆசிரியர்.

# இந்திய தத்துவ ஞானம்

பேராசிரியர் திரு கி. இலட்சுமணன், எம்.ஏ.,
'இராமாநுச வேதாந்தம்'

**வரலாறு :**

தத்துவ ஞானம் எனப்படுவது வேறு; சமயம் எனப்படுவது வேறு. ஆயினும் இவையிரண்டுக்கும் மூல இலக்கியம் ஒன்றுதான். தத்துவ ஞானம், சமயம் ஆகிய இரண்டுக்கும் வேத உபநிடதங்களே பொதுவான இலக்கிய ஆதாரம். ஆதாரம் ஒன்றானபோதும் இந்த ஆதாரத்தையொட்டி எழுந்த தத்துவஞானம், சமயம் ஆகிய இரு துறைகளும் தம்முள் வேறுபடுகின்றன. இப் பிரபஞ்சத்தின் இயல்பையும் அதன் மூலத்தையும் ஆராய்வது தத்துவஞானம். ஆனால் இந்த ஆராய்ச்சியோடு மட்டும் மக்கள் உள்ளம் திருப்திப்படுவதில்லை. வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோளையும், அந்தக் குறிக்கோளை அடையும் வழியையும் நாடுவதிலேயே மக்கள் உள்ளம் திருப்தியடைகிறது. அத்தகைய குறிக்கோளையும் அதனை அடையும் வழிகளையும் நல்குவதே சமயம். மக்களது வேண்டுதல்களைப் பூர்த்தி செய்து அவர்களை ஈடேற்ற வல்ல ஒரு முழு முதற் கடவுளைப் பற்றுக்கோடாகக் கொண்டவையே அநேகமாக எல்லாச் சமயங்களும். ஆகவே, சமயங்கள் பெரும்பாலும் கடவுட் கொள்கைகளாகவே இருந்து வந்திருக்கின்றன. எனவே, தத்துவ ஆராய்ச்சியின் முடிவு வேறு; சமயத்தின் முடிவு வேறு. இவ்வாறு வேறுபட்டிருந்த இரு துறைகளையும் ஒன்றுபடுத்தித் தத்துவ ஆராய்ச்சியின் முடிவாகிய மூலப்பொருளும், சமயிகள் பேசும் முழுமுதற் கடவுளும் ஒன்றே எனக் கொள்ள விரும்பினர் அறிஞர் சிலர். அவருள்ளே மிக முன்னணியில் நின்றவரே இராமாநுசர் எனப்படுவர். இதுவே இராமானுசரது கொள்கைகள் தோன்றிய வரலாறு என்கின்றனர் பேராசிரியர் இரியண்ணர். இத்தகைய ஒன்றே சைவ சித்தாந்தம் தோன்றிய வரலாறும் என்பது அவர் கருத்து.

**இராமநுசரும் சங்கரரும் :**

இராமாநுசரும் சங்கரரைப் போன்ற ஒரு மாபெரும் தத்துவஞானி. சங்கரரைப்போலவே இவரும் தமிழகத்திலே தோன்றித் தமிழகத்துக்கு ஒப்பற்ற பெருமையை ஈட்டித் தந்த உத்தமர். சங்கரர் பிரமசூத்திரத்துக்கும் பகவத் கீதைக்கும் அரிய விரிவுரைகள் எழுதியுள்ளார். இராமாநுசர் பிரம சூத்திரத்துக்கு எழுதிய விரிவுரை ஸ்ரீபாஷ்யம் என வழங்குகின்றது. இவைகளைத் தவிர இராமாநுசர் வேதாந்த சாரம், வேதாந்த சங்கிரகம், வேதாந்த தீபம் ஆகிய அரிய நூல்களையும் எழுதியுள்ளார்.

இராமாநுசர். காலத்தால் சங்கரருக்குப் பிற்பட்டவர். சங்கரர் எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். இராமாநுசர் பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். எனவே, சங்கரரது கொள்கைகளைக் கண்டிக்கும் வாய்ப்பை இராமாநுசருக்குக் காலமே கொடுத்தது. சங்கரரும் அவரைப் பின்பற்றியவர்களும் கொண்ட கருத்துக்களை இராமாநுசர் ஒப்புக் கொள்ளவில்லை. சங்கரரது கொள்கைகளுள்ளே மிக அடிப்படையானவற்றைக்கூட இராமாநுசர் ஆட்சேபிக்கின்றார். சங்கரர், இராமாநுசர் ஆகிய இருவரும் வேத உபநிடதங்களையே பரம பிரமாணமாக ஏற்றுக் கொண்டவர்கள். வேத உபநிடதங்களின் சுருக்கமாகிய பிரம சூத்திரத்துக்கே இருவரும் விளக்கம் கொடுக்கின்றார்கள். ஆனால், அவ் விளக்கத்திலே பெரிதும் மாறுபடுகின்றனர். இம் மாறுபாடு காரணமாக வேதாந்தமே இரண்டுபட்டது. சங்கரரது கொள்கைகளைக் கூறும் வேதாந்தத்தை அத்வைதம் என்ற பெயராலும், இராமாநுசரது கொள்கைகளைக் கூறும் வேதாந்தத்தை விசிஷ்டாத்வைதம் என்ற பெயராலும், வழங்கும் மரபும் ஏற்படலாயிற்று. சங்கரரது வேதாந்தம் பூரணத்துவம் பேசுகின்றது என்ற கருத்தும், இராமாநுசரது வேதாந்தம் கடவுளைப் பற்றியது என்ற கருத்தும் நிலைத்துவிட்டன. இக்கருத்துக்கள், கொள்கையிலே இவர்களுக்கிடையேயுள்ள வேற்றுமையை ஓரளவு புலப்படுத்துகின்றன.

**பிரதி பிம்பவாதம்:**

சங்கரரும் இராமாநுசரும் மாறுபடும் இடங்களுள் முக்கியமான சிலவற்றையாவது இங்குக் குறிப்பிடுவது அவசியம். உலகில் எண்ணில் கோடி உயிர்களைக் காண்கிறோம். இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு ஆன்மாக்கள்எனவே கருதுகின்றோம். இவை அனைத்தும் ஒரே ஆன்மா என நாம் கருதுவதில்லை. ஆனால்,

சங்கரர் கருத்துப்படி ஓர் ஆன்மா மட்டுமே உண்மையிலுள்ளது என வாதிப்பதால்தான் சங்கரர் வேதாந்தத்துக்கு ஏகான்மவாதம் என்ற பெயரும் ஏற்படலாயிற்று. இதனை விளக்குவதற்குச் சங்கர மதத்தினர் இரண்டு உவமைகளைக் கையாளுவது வழக்கம். அவற்றுள் ஒன்றுக்குப் பிரதி பிம்பவாதம் என்று பெயர். சந்திரனுடைய பிரதிபிம்பம் பூமியிலுள்ள கிணறுகள், குளங்கள், குட்டைகள் ஆகிய நீர் நிலைகளிலெல்லாம் தோன்றுகின்றது. நீர்நிலைகள் எத்தனையோ அத்தனை சந்திரன்களைக் காணலாம். ஆனால், அவற்றுள் எதுவும் உண்மைச் சந்திரன் அல்ல. உண்மையாக உள்ளது மேலே வானில் இருப்பது மட்டுமே. அதுபோலப் பரமாத்மாவாகிய பிம்பம் மட்டுமே உள்ள பொருள். சந்திரனின் பிரதிபிம்பம் விழ நீர்நிலைகள் உள்ளன; அதைப் போலப் பிரமத்தின் பிரதிபிம்பம் எதன்மேல் விழும் என்ற வினா எழலாம். பிரமத்தின் பிரதிபிம்பம் அவித்தையிலே படுகின்றது; பட்டு, பல சீவாத்மாக்களாகத் தோன்றுகின்றது. தெளிந்தநீரில் விழும் சந்திரனின் பிரதிபிம்பம் தெளிவாயிருக்கும். நீர் அசைந்தால் பிரதிபிம்பம் அசையும். நீரில் அசைவில்லாவிடில் பிரதிபிம்பத்திலும் அசைவு இராது. இதைப்போலவே ஒவ்வொர் ஆன்மாவையும் பற்றி நிற்கும் அவித்தையின் இயல்புக்குத் தக அந்த ஆன்மாவின் இயல்புகளும் வேறுபடும். நீர்நிலைகளை நீக்கினால் சந்திரன் ஒன்று என்பது புலனாகும். அதே போல அவித்தையை அழித்தால் ஆன்மா ஒன்றுதான் என்பது புலனாகும். ஏகான்மவாதத்தை விளக்கும் உவமைகளுள் இது ஒன்று.

### அவச்சேத வாதம்:

இனி, மற்றதைக் காண்போம். பூ முகம் எங்கும் வியாபித்திருப்பது ஒரே வெளிதான். ஆயினும் இவ்வெளி, உலகிலுள்ள எத்தனையோ அடைப்புக்களாலும், தடுப்புக்களாலும் தனித் தனிக் கூறுகளாகப் பிரிகின்றது. ஓர் அறையை நிரப்பும் வெளி அந்த அறையின் வடிவத்துக்கு ஏற்பவும், குடம் முதலிய பாத்திரங்களை நிரப்பி நிற்கும் வெளி அவற்றின் வடிவங்களுக்கு ஏற்பவும் பிரிந்து தனித்து நிற்கின்றது. குடத்துக்குள்ளேயுள்ள வெளியும் குடத்துக்குப் புறத்தே உள்ள வெளியும் ஒன்றுதான். ஆனால் தற்காலிகமான தடுப்பினால் அது வெவ்வேறாகின்றது. இதைப் போன்றதுதான் ஒரு பிரமம் பல ஆன்மாக்களாகத் தோன்றுவதும். எங்ஙனம் ஒரு வெளியே, பல அடைப்புக்களாலும் தடுக்கப்பட்டுப் பல வெளிகளாகின்றதோ, அங்ஙனமே ஓர் ஆன்மாவே பந்திக்கப்பட்டுப் பல ஆன்மாக்களாகக் காணப்படுகின்றது. இது தான் வேதாந்திகள் கையாளும் இரண்டாவது உவமை. இது 'அவச்சேத வாதம்' எனப்படும். சேதம் என்றால் பிரித்தல் அல்லது வெட்டுதல். ஒரு பரமான்மா பல சீவான்மாக்களாகக்காணப் படுவதற்கு மாயை தான் காரணம். ஒன்றைப் பல ஆக்கிக் காட்டும் இந்த மாயையை வசனங்களால் விளக்க முடியாது என்ற கருத்தில், அதனை 'அநிர்வசனீயம்' என வேதாந்திகள் குறிப்பிடுகின்றனர்.

### 1. ஆன்மாவும் மாயையும்:

மேலே குறிப்பிட்ட உவமைகள் எல்லா ஆன்மாக்களும் அடிப்படையில் ஒன்றுதான் என்பதை விளக்குவன. இராமாநுசர் இதனை ஒப்புக் கொள்ளவில்லை. மாயையை அறியாமை என்றும் கூறலாம். இந்த அறியாமைக்கு நிலைக்களன் எது? என்பது இராமாநுசர் எழுப்பும் ஆட்சேபங்களுள் ஒன்று. அறியாமை யாரிடத்தில் உள்ளது? அடிப்படையான பிரமத்திலே உள்ளதா? அல்லது ஆன்மாக்களிடத்தில் உள்ளதா? பிரமம்தான் அறியாமைக்கு நிலைக்களன் என்பது பொருந்தாது. பிரமம் அறிவே சொரூபமானது. அறிவே சொரூபமான பிரமத்தினிடம் அறியாமை தோன்றுகின்றது எனக் கொள்வது பொருந்தாது. அறியாமைக்கு ஆன்மாக்கள்தான் நிலைக்களன் என்று கூறவும் முடியாது. ஏனெனில் அறியாமைதான் ஆன்மாக்கள் தோன்றுவதற்குக் காரணம். எனவே, ஆன்மா பின்னது; அறியாமை முன்னது. பின்னர்த் தோன்றும் ஆன்மாதான் அதற்கு முன்னரே உள்ள அறியாமை தங்குமிடம் என்பதும் பொருந்தாதது. இவை இராமாநுசர் எழுப்பும் ஆட்சேபங்கள். இவற்றுக்குச் சங்கரரைப் பின்பற்றுவோர் சமாதானம் கூறாமல்விடவில்லை. எனினும் இராமநுசருக்கு அச்சமாதானம் எதுவும் பொருத்தமாகப்படவில்லை.

### 2. உலகம்:

ஆன்மாவைப் பற்றியும் மாயையைப் பற்றியும் சங்கர வேதாந்திகள் கொண்டுள்ள கருத்துக்களை இராமாநுசர் ஒப்புக் கொள்ளவில்லை என்பதை இதுவரை குறிப்பிட்டோம். இதைப் போலவே உலகைப்பற்றி அவர்கள் கூறுவன வற்றையும் இராமாநுசர் ஒப்புக் கொள்ளவில்லை. இந்த உலகம் உண்மையன்று. கயிறு பாம்பாகத் தோன்றுவது போலப் பிரமம் உலகமாகத் தோன்றுகிறது. எனவே உலகம் ஒரு தோற்றம் என்பது சங்கர வேதாந்திகளின் கொள்கை. உலகம் தோற்றமல்ல, அது உண்மையாகவே உள்ளது என்கின்றார் இராமாநுசர், சங்கரர் விவர்த்த வாதி; இராமாநுசர் பரிணாம வாதி; காரணமாகிய பிரமம் மட்டும் உண்மை; அக்காரணத்திலிருந்து உற்பத்தியாகும் காரியமாகிய உலகம் பொய் என்பது விவர்த்தவாதம். காரணமாகிய பிரமமும் உண்மை, அக்காரணத்திலிருந்து உற்பத்தியாகும் காரியமாகிய உலகமும் உண்மை என்பது பரிணாமவாதம்.

### மாறுபாடுகளும் ஆதாரமும்:

இவ்வாறு உண்மையாக உள்ள பொருள் ஒன்றே ஒன்றுதான்; ஏனை யாவும் தோற்றம் எனச் சங்கரர் கூற, அதனை முற்றாக மறுத்து, தோற்றமென எதுவுமே இல்லை; எல்லாம் உண்மையாகவே உள்ளவைதான் என வாதிக்கின்றனர் இராமாநுசர். இவர்கள் இருவரும் இக்கருத்துக்களைத் தங்கள் இஷ்டப்படி கூறவில்லை. இருவருக்கும் வேத உபநிடதங்கள்

தான் ஆதாரம். உபநிடத வசனங்கள், பொருள்கள் பல என்பதை மறுத்து, ஒன்று என்பதையே வற்புறுத்துகின்றன. இதன்படி சங்கரரது கொள்கையே சரியெனத் தோன்றும். ஆனால் உபநிடத வாக்கியங்கள், பல என்பதைமறுத்து ஒன்று என்பதை வலியுறுத்துவதற்கு இராமாநுசர் வேறு விளக்கம் கொடுக்கின்றார். அவர் கொடுக்கும் விளக்கம் மிக முக்கியமானது. சைவ சித்தாந்தத்துக்கும் அவ்விளக்கம் பயன்படத்தக்கது.

**உள்ளது ஒன்றுதான் என்பதன் கருத்து :**

இராமாநுசர் கருத்தின்படி இந்த உலகையும் உயிர்களையும் இயக்குபவன் இறைவன். அவன், இவை அனைத்துள்ளும் வியாபித்து நின்று இவற்றை இயக்குகின்றான். நமது உடலை உயிர் இயக்குகின்றது. இந்த உயிரை இறைவன் இயக்குகின்றான். எனவே, இறைவனைப் பொறுத்தமட்டிலே நமது உயிர்களும் அவனுக்கு உடலாகிவிடுகின்றன. நமது உடலை நோக்க உயிராக உள்ளது. இறைவனைநோக்க உடலாகின்றது. உயிர்கள் அனைத்தும் உலகமும் இறைவனது சரீரம். இறைவன் சரீரி. அதாவது அச்சரீரத்தை உடையவன். உயிரைச் சார்ந்தது உடல். உயிருக்குரிய சுதந்திரம் உடலுக்குக் கிடையாது. அதுபோலவே சரீரியாகிய இறைவனுக்குரிய சுதந்திரம் அவனது சரீரமாகிய உயிர்களுக்கும் உலகுக்கும் கிடையாது. எனவே, உபநிடதங்கள், 'உள்ளவை பல அல்ல; உள்ளது ஒன்றுதான்' என்பதன் கருத்து, ஒன்றுதான் சுதந்திரமுடைய பொருள் என்பதாகுமேயன்றி, உள்ளது ஒன்றுதான், ஏனையாவும் பொய் என்பதாகாது.

**இராமாநுச வேதாந்தம்**

இராமாநுசரது கொள்கைகளை விளக்குவதற்கு அவைகளைச் சங்கரருடைய கொள்கைகளோடு ஒப்பிடுவதே சுலபமான வழியாகும். அதன் பொருட்டு முதலில் அத்வைதம் என்ற சொல்லை ஆராய்வோம். இந்தியத் தத்துவ ஞான உலகிலே அடிக்கடி வழங்கும் சொற்களுள்ளே அத்வைதம் என்பதும் ஒன்று. இது மிக முக்கியமான சொல். எனவே, இதன் கருத்தை அறிவது அவசியம். இராமாநுசரது கொள்கைகளை விளக்குவதற்கும் அத்வைதம் என்ற இச் சொல்லின் பொருளை அறிவது அனுகூலமாகும். 'அ' வும் துவைதமும் சேர்ந்ததே அத்வைதம். 'அ' என்பதற்கு அல்லது என்பது கருத்து. இது அநீதி, அநியாயம் என்பனவற்றிலுள்ள 'அ' வைப் போன்றது. துவைதம் என்பது வடமொழியிலுள்ள 'துவி' என்னுஞ் சொல்லை அடிப்படையாகவுள்ளது. 'துவி' 'துவைதம்' என்னும் சொற்களுக்கு இரண்டு என்பது கருத்து. எனவே துவைதம் என்னும் சொல்லால் இரண்டு என்னும் பொருளும் அதற்கு முன்னாகவுள்ள 'அ' என்னும் பகுதியால் அல்ல என்னும் பொருளும் பெறப்படுகின்றன. 'இரண்டல்ல' என்னும் கருத்தையுடைய அத்வைதம் என்னும் பிரயோகம் எதைக் குறிக்கின்றது? இரண்டெனக் குறிப்பிடப்படுவன எவை? அவற்றை ஏன் இரண்டல்ல எனக் கருத வேண்டும்? என்பன போன்ற வினாக்கள் எழுவது இயல்பு.

இறைவனும் ஆன்மாவுமே இங்கு இரண்டெனக் குறிப்பிடப்படுவன. இறைவனும் ஆன்மாவும் வெவ்வேறான இரு பொருள்களாகத் தோன்றியபோதும் உண்மையில் அவை இரண்டும் இரண்டல்ல; ஒன்றே என்பதே அத்வைதம் என்பதன் பொருள்; இங்ஙனம் இரண்டாக உள்ளவற்றை இரண்டல்ல; ஒன்றுதான் என வற்புறுத்த வேண்டிய அவசியம் என்ன? என்பதே அடுத்தாற்போல் எழும் கேள்வி. உபநிடதங்களிலே சில வசனங்கள், 'உண்மையில் உள்ளது ஒரேயொரு பொருள்தான்' எனக் கூறுகின்றன. உபநிடத வசனங்களை விளக்கும் முகமாக எழுந்தவையே இந்திய மதங்களுள் பெரும்பான்மையும். இதனாலேதான் இறைவன், உயிர் என இரண்டாக உள்ளவை உண்மையில் இரண்டல்ல எனக்குறிக்கும் அத்வைதம் என்ற சொற்பிரயோகமும் ஏற்படலாயிற்று.

**அத்வைத வேறுபாடுகள் :**

கடைசியொடுக்கத்தில் உள்ளது ஒன்றே ஒன்றுதான்; இரண்டல்ல என்னும் இந்த அத்துவிதக் கொள்கையைச் சங்கரர், இராமாநுசர் மத்துவர், சைவ சித்தாந்திகள் ஆகிய நால்வருமே ஒப்புக்கொள்ளுகின்றனர். இதில் விசித்திரம் என்னவெனில், இந் நால்வரும் முக்கியமான அடிப்படைக் கொள்கைகள் சிலவற்றிலேயே தம்முள் மாறுபாடுடையவர்கள். இங்ஙனம் ஏனைய கொள்கைகளிலே தம்முள் மாறுபடும் இவர்கள் அத்துவிதக் கொள்கையில் மட்டும் எங்ஙனம் தம்முள் ஒற்றுமைப்படுகின்றார்கள் எனில், அத்துவிதக் கொள்கையிலும் இவர்களது ஒற்றுமை, சொல் அளவிலேதான். அச்சொல்லுக்குக் கொடுக்கும் விளக்கத்தில் இவர்களுக்கிடையே ஒற்றுமை கிடையாது. இதனாலேதான் இவர்கள் கொடுக்கும் விளக்கத்துக்குத்தக, இவர்கள் ஒவ்வொருவரும் பேசும் அத்வைதத்தையும் வெவ்வேறு அடைமொழிகளால் குறிப்பிடும் வழக்கமும் ஏற்பட்டது. சங்கரர் பேசும் அத்வைதத்தைக் கேவலாத்வைதம் என்றும், இராமாநுசரது அத்வைதத்தை விசிட்டாத்வைதம் என்றும், சைவ சித்தாந்திகள் கூறும் அத்வைதத்தைச் சுத்தாத்வைதம் என்றும் குறிப்பிடுவது வழக்கம். அடைமொழி எதுவுமேயன்றி வெறுமனே அத்வைதம் எனில், அது சங்கரரது அத்வைதத்தையே குறிக்கும்.

தமிழிலே, 'இல்லை', 'அல்ல' என இரு சொற்கள் உண்டு. இவையிரண்டும் ஒரே கருத்துடையன அல்ல. கருத்திலே இவைகளுக்குள்ளே வித்தியாசமுண்டு. அத்வைதம் என்ற சொல்லிலுள்ள 'அ' அல்ல என்ற கருத்திலும், இல்லை என்ற கருத்திலும் கையாளப்படுவதைச் சிவஞானமுனிவர் தமது சிவஞானபாடியத்திலே நன்கு விளக்குகின்றார். இவையிரண்டுமன்றி, எதிர் அல்லது மறுதலை என்ற கருத்திலும் இந்த 'அ' வை உபயோகிக்கலாம். இந்த மூன்று

கருத்துக்களையும் உதாரணங்களோடு விளக்கிய சிவஞான முனிவர் அத்வைதத்திலுள்ள 'அ'வைச் சங்கரரும் இராமாநுசரும் இல்லை என்ற கருத்திலும், மத்துவர் மறுதலை என்ற கருத்திலும், சைவ சித்தாந்திகள் அல்ல என்ற கருத்திலும் கையாளுவதையும் குறிப்பிடுகின்றனர். இவற்றுள் முதலிரு கருத்துக்களும் பொருத்தமற்றவை எனக் காட்டிச் சைவ சித்தாந்திகள் கொள்ளும் அல்ல என்னும் கருத்தே பொருத்தமானது என்பதையும் அவர் மிகத் திறமையாக நிலைநாட்டுகின்றார்.

''பரமாத்மா மட்டுமே உண்மை. அதைத் தவிர வேறு எதுவும் கிடையாது. நாம் காணும் இந்த உலகும் அதிலேயுள்ள அநந்த கோடி சீவாத்மாக்களும் உண்மையல்ல; அவை யாவும் அந்த பரமாத்மாவின் தோற்றம்''-இது சங்கரரது கொள்கை. இக் கொள்கையுடைய சங்கர அத்வைதத்தினை நிலைநாட்டுவது சுலபம். பரமான்மாவும் சீவாத்மாவும் வேறல்ல ;இரண்டும் ஒன்றுதான் என அவர் வாதிப்பது பொருத்தமாகப்படலாம். ஒரே ஒரு பொருளே உள்ளது; அதைத் தவிர இரண்டாவது பொருள் எதுவுமே இல்லை; இரண்டில்லை என இன்மை பேசுவது சங்கரருக்கு எளிது.

ஆனால், இராமாநுசர் 'தத்துவத்திரயம்' பேசுபவர். அதாவது அசித், சித், ஈசுவரன் ஆகிய முப்பொருளும் உண்மை எனக் கொள்பவர். எனவே, இறைவனும் வேறு; சீவனும் வேறு; இவையிரண்டும் நிலையான இரு பொருள்கள் என்பதே இராமாநுசர் கொள்கை. இரண்டும் வெவ்வேறு எனக் கொள்ளும் இராமாநுசர், அத்வைதத்துக்கு விளக்கம் கொடுப்பது சுலபமல்ல. இது இராமாநுசருக்கு மட்டும் உள்ள வில்லங்கமல்ல. உலகமும் உண்மை; உயிர்களும் உண்மை; இறைவனும் உண்மை; எல்லாம் நிலையானவை என்னும் பன்மைவாதிகள் அனைவருக்குமே இந்த வில்லங்கம் உண்டு. இப் பிரபஞ்சத்துக்கு அடிப்படையாகவுள்ள மூலப்பொருள் ஒன்றல்ல; பல என்னும் பன்மை வாதிகளுக்கு முக்கியமான இடர்ப்பாடுகள் இரண்டுண்டு. மூலப்பொருள் பல என்னும் தமது கொள்கைக்கும், மூலப்பொருள் ஒன்று என்னும் உபநிடதக் கூற்றுக்குமுள்ள முரண்பாட்டுக்குச் சமாதானம் தேடுவது ஒன்று. மூலப் பொருள் பலவாயின் அவற்றுக்கிடையேயுள்ள தொடர்பை நிர்ணயிப்பதும், அவற்றை மதிப்பிட்டு அவற்றுக்கிடையே ஏற்றத்தாழ்வு காண்பதும் மற்றஇடர்ப்பாடு. பொருள்களுக்கிடையேயுள்ள சம்பந்தத்தை ஆராயும் இந்த இரண்டாவது இடர்ப்பாடு தத்துவ ஞான உலகிலேயே மிக முக்கியமானது. ஒவ்வொரு மதத்தினரும் பேசும் சம்பந்தத்தை மட்டும் எடுத்துக் கொண்டாலே போதும். அதைக் கொண்டே அவர்களது உட்கிடையை அறிந்து கொள்ளுதல் கூடும். உள்ளது ஒன்றுமட்டுமே; ஏனைய யாவும் அதன் தோற்றம் எனச் சங்கரர் போன்றோர் வாதிப்பதன் நோக்கம், மேலே குறிப்பிட்ட இரு இடர்ப்பாடுகளையும் நீக்குவதே எனத் தோற்றுகின்றது. இரண்டு பொருள்களும் உண்மை எனக் கொண்டால் அவற்றுக் கிடையே உள்ள சம்பந்தத்தை விளக்கும் கஷ்டம் உண்டாகும் எனக் கருதி, ஒன்றுதான் உண்மை; மற்றது தோற்றம் எனக் கொள்வதால் சங்கரரது கஷ்டம் நீங்கவில்லை. உண்மைக்கும் தோற்றத்துக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்க வேண்டிய புதிய ஒரு கஷ்டம் ஏற்படுகின்றது. எனவே, ஒரு கஷ்டம் நீங்க அதற்குப் பதிலாக இன்னொன்று ஏற்படுவதே மிச்சமாகின்றது.

இனி, இந்த இரு இடர்ப்பாடுகளையும் இராமாநுசர் எங்ஙனம் நீக்குகின்றார் என்பதைக் கவனிப்போம். இராமாநுசர் கொள்கைப்படி உலகம், உயிர், இறைவன் ஆகிய மூன்றும் உண்மைப் பொருள்கள். எனினும் இறைவனை உயிர்கள் அனைத்துக்கும் உலகுக்கும் அந்தர்யாமியாய் அதாவது உள்நின்று அவையனைத்தையும் இயக்குகின்றான்; எனவே, ஆன்மாக்கள் பலவாயினும், அவ்வான்மாக்கள் அனைத்தையும் தனக்கு உடலாகக் கொண்டு, ஆன்மாக்களுக்கெல்லாம்ஆன்மாவாய் நிற்கும் பரமான்மா ஒன்றுதான் என்பது புலனாகின்றது. இறைவன் உயிருக்கு உயிராய் நிற்கும் காரணத்தால், இறைவன் வேறு; உயிர் வேறல்ல, இரண்டும் ஒன்றுதான் என்பதும் பெறப்படுகின்றது. இதுவே இராமாநுசர் பேசும் அத்வைதம். சங்கரர், இரண்டில்லை; உள்ளது ஒன்றுதான் என்னும்போது உயிர்கள் கிடையா; உலகு கிடையாது; பிரமம் ஒன்றே உள்ளது என்பதுகருத்து. ஆனால், இராமாநுசர் பேசும் அத்வைதத்தில் உலகும் உண்டு; உயிர்களும் உண்டு. ஆனால் அவை பிரமத்துக்கு விசேஷணங்கள். பிரமம் அவ் விசேஷணங்களையுடைய விசேஷியம். இந்த விசேஷணம் விசேஷியம் ஆகிய இரண்டும் சேர்ந்த விசிஷ்டமே இராமாநுசர் பேசும் பரம் பொருள். இதனாலேயே அவரது அத்வைதக் கொள்கைக்கு ''விசிஷ்டாத்வைதம்'' என்ற பெயர் ஏற்படலாயிற்று. சங்கரரும் ஒரேயொரு பொருளுக்கு மட்டுமே முதன்மை கொடுக்கின்றார். இராமாநுசரும் ஒரேயொரு பொருளுக்கே முதன்மை கொடுக்கின்றார். ஆனால் சங்கரர் ஏனைய யாவற்றையும் இல்லாதன ஆக்கித் தாம் பேசும் பொருளுக்கு முதன்மை தேடுகின்றார். இராமாநுசர் ஏனைய யாவற்றையும் தாம் பேசும் பரம்பொருளுக்குச் சரீரமாக்கி, அப்பரம் பொருளைச் சரீரியாக்கி அதற்கு முதன்மை கொடுக்கின்றார்.

உபநிடதங்கள் பிரமம் மட்டுமே உள்ளது எனக் கூறுவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. அதற்குப் புறம்பாக அதிலிருந்து வித்தியாசமான வேறு எப்பொருளுமே கிடையாது என்றும் கூறுகின்றன. ஆனால் இராமாநுசர் கூறும் உயிர்களும் உலகும் இறைவனிலிருந்து வித்தியாசமானவைகள் அல்லவோ என்ற ஐயம் எழலாம். வித்தியாசத்தை மூன்று பிரிவாகப் பிரிப்பதுண்டு. முதலாவது பிரிவு வேறுபட்ட இரு பொருள்களுக்கிடையேயுள்ள வித்தியாசம். உதாரணமாக ஒரு குதிரைக்கும் ஓர் எருதுக்குமுள்ள வித்தியாசம். இது விஜாதீய பேதம் எனப்படும். இரண்டாவது ஒரே இனத்திலுள்ள இரு பொருள்களுக்கிடையேயுள்ள வித்தியாசம். உதாரணம் ஒரு குதிரைக்கும் இன்னொரு குதிரைக்கும் இடையிலுள்ள வித்தியாசம்.இது

சஜாதிய பேதம் எனப்படும். மூன்றாவது ஒரே பொருளுள்ளே அதன் பகுதிகளுக்கிடையே யுள்ள வித்தியாசம். உதாரணம் ஒரு குதிரையின் உறுப்புக்களாகிய தலைக்கும் வாலுக்குமுள்ள வித்தியாசம். இது சுவகதபேதம் எனப்படும். இராமாநுசர் இறைவனைச் சரீரியாக்கி உலகையும் உயிர்களையும் அவ்விறைவனுக்குச் சரீரமாக்குவதால் அவனுக்குப் புறம்பாக அவனிலிருந்து வித்தியாசமான பொருள் எதுவுமே கிடையாது என வாதிப்பது சுலபமாகின்றது. பிரமம் மட்டுமே உண்மை என்பதற்கு விளக்கம் கொடுப்பதற்காகச் சங்கரர் உலகமும் உயிர்களும் உண்மையல்ல என்றார். ஆனால், உலகமும் உண்மை; உயிர்களும் உண்மை எனச் சாதித்து, அதே சமயம் பிரமம் மட்டுமே உண்மை என்பதற்கும் மிக நுட்பமான விளக்கம் கொடுத்த பெருமை இராமாநுசருக்கு உரியது.

உயிரை இறைவனது உடலாக்கி இறைவனை அவ்வுடலுக்குரிய உயிராக்குகின்றார் இராமாநுசர். இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள இந்தச் சரீர சரீரி சம்பந்தம் இராமாநுசரது கொள்கைகளிலே குறிப்பிடத்தக்க மிக முக்கியமானதோர் அம்சமாகும். அதே சமயம் இச் சட உலகையும், இறைவனது திருமேனியாக அவர் கொள்ளுகின்றார். இயற்கையே இறைவன் என்னும் கொள்கை ஒன்றுண்டு. இராமாநுசர் கொள்கை அது அல்ல; அக் கொள்கைப்படி இறைவனுள் இயற்கை அடங்கும். அதே சமயம் இயற்கையுள் இறைவனும் அடங்குவன். இயற்கைக்கு அப்பால் எதுவுமே கிடையாது. ஆனால் இராமாநுசர் கொள்கைப்படி இயற்கை இறைவனுள் அடங்கும்; இறைவன் இயற்கையுள் அடங்கான்; அவன் இயற்கைக்கு அப்பாலும் உள்ளான்.

அத்வைதம் என்பதன் கருத்து, அதற்கு விளக்கம் கூறுவதிலுள்ள கருத்து வேற்றுமைகள், அதனையொட்டி எழுந்த மத வேறுபாடுகள், விசிஷ்டாத்வைதம், மூலப்பொருள் பல எனக் கொள்வதிலுள்ள இடர்ப்பாடு, அதனை நீக்க ஒவ்வொரு மதத்தினரும் கையாளும் வழிகள், மூவித பேதங்கள், இராமாநுசர் கைக்கொள்ளும் சுவகத பேதம், இயற்கையை இறைவனாக்கும் கொள்கை, அதற்கும் இராமாநுசருக்கும் உள்ள வேற்றுமை ஆகியவை இங்கு விளக்கப்பட்டுள்ளன.

—தொடரும்.

# கடவுளின் கருணை

உலகில் பாமரமக்கள் மட்டுமே அன்றிப் பக்தர்களும்கூடப் பலவகைத் துன்பங்களை அனுபவிக்கக் காண்கின்றோம். அத் துன்பங்களைக் கடவுள் தன் அடியவர்களுக்கு ஏன் தருகின்றான்? என்று, நாம் நாம் எண்ணி ஐயுறுவது இயல்பு. கடவுள் தன் அடியவர்களுக்கு இன்பங்களையே தர விரும்புகின்றான். ஆனாலும் அடியவர்கள், தாம் முன்னைப் பிறப்புக்களில் செய்த தீவினைகளால் துன்பம் உழக்க நேர்கின்றது. அடியவர்களின் வினைகளைப் போக்கி, அவர்களுக்கு விரைவில் அருள் புரிவதற்காகவே இறைவன் அவர்களுக்குத் துன்பங்களைக் கொடுத்து, வினைகளை நுகரச் செய்து நலம்புரிகின்றான். பொன்னை நெருப்பிலிட்டுச் சுடுந்தோறும் சுடுந்தோறும், அதன் ஒளிமிகுதிப்படும். அதுபோலப் பக்தர்களுக்குத் துன்பங்கள் நேர்தலும், ஒருவகையில் அவர்களுக்குப் பின்னர்ப் பெருநன்மையே பயக்கும். ''சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம் சுடச்சுட நோற்கிற்பவர்க்கு'' என்பது திருக்குறள். அடியவர்களுக்குக் கடவுள் துன்பங்களைத் தருதலும், ஒருவகையில் கடவுளின் கருணைத் திறனையே உணர்த்துவதாகும்.

நறுமணம்மிக்க தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளின் கணவனாகிய திருமால், அடியவர்கள் திறத்தில் மிகப் பெரிய துன்பங்களையே விளைவித்தாலும், ஆராய்ந்துணருங்கால், அவைகள் யாவும், திருமால் தன் அடியவர்கள்பால் கொண்டுள்ள அளவற்ற உண்மையான பெருங்கருணையின் விளைவேயாகும். பொறுக்க முடியாத பல வேதனைகளைத் தருவதாக இருப்பினும், புதல்வனின் உடம்பில் எழுந்த புண்ணைக் கத்தியினால் இரக்கமின்றி அறுத்துத் தீர்ப்பதற்கு விரும்பி இசைவு அளிக்கின்ற ஒரு தந்தையின் செயலைப் போன்றதே, அடியவர்கள் பக்கலில் துன்பம் விளையச் செய்து, அருள்புரிகின்ற கடவுளின் செயலுமாகும்.

ஆரப் பெருந்துயரே செய்திடினும், அன்பர்கள்பால்
வேரிச் சரோருகைகோன் மெய்ந்நலமாம்;—தேருங்கால்
பொறுத்தற் கரிதெனினும், மைந்தன்உடற் புண்ணை
அறுத்தற் கிசைதாதை அற்று.

—ஞானசாரம்.

[ஆர-மிகுதியாக. வேரி-நறுமணம். சரோருகம்-தாமரை. சரோருகை-தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள். மெய்நலம்ஆம்-உண்மையான அன்பின் விளைவேயாகும். பொறுத்தற்கரிது-தாங்குதற்கு இயலாதது. இசை-சம்மதிக்கின்ற. தாதை-தந்தை. தாதையற்று-தந்தையின் செயலைப் போன்றது. நமக்கு வேண்டுவதைத் தா தா என்று பலகாலும் கேட்டுப் பெறுதற்கு உரிமையுடையவர் ஆதலால், தந்தைக்குத் தாதை என்பது பெயர் ஆயிற்று.]

—ஆசிரியர்.

# பசித்திரு-தனித்திரு-விழித்திரு

''சித்தாந்தசிகாமணி'' திரு. எஸ். இராமலிங்கம், B.Sc., B.L.,
வழக்குரைஞர், சேலம்.

தமிழகத்தில் தோன்றி மறைந்த மகான்களில் நமது அருட்பிரகாச வள்ளலார் கடந்த காலத்தில் இறுதியானவராகும். அவர் உலக ஒருமைப்பாட்டினை ஆன்மநேய ஒருமைப்பாடு மூலம் அடைய முடியும் என்று அறிவுறுத்தினார். ''எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி'' நடத்தல் வேண்டும் என்றும், அப்படி எவன் ஒருவன் மன்னுயிரெல்லாம் தன்னுயிர்போல் கருதி மனப்பூர்வமாக அன்பு செலுத்துகின்றானோ, அவனது உள்ளமே நடராசப்பெருமான் திரு நடம் புரியும் இடம் என்றும் திண்ணமாக நம்பினார். அதற்கென மூன்று தலையாய நெறிகளை வகுத்துத் தந்துள்ளார். அதுவே பசித்திரு-தனித்திரு-விழித்திரு என்பதாகும். இம் மூன்றின் முதன் எழுத்துக்களைச் சேர்த்துப் பார்த்தால் கிடைப்பது ''பதவி'' ஆகும். அப்பதவி பேரின்பப் பதவியாகும்.

**பசித்திரு :**

வள்ளற்பெருமான் மிகவும் அழுத்தமாகக் கூறியது சீவகாருண்யமே ஆகும். முதலில் பசிப்பிணியைப் போக்க வேண்டும் எனப் புகல்வார். அப்படியிருக்கும்போது பசித்திரு என்று ஏன் அவர் கூறினார்? பசி போக உண்ணுதல் வேண்டும். ஆனால் பசி முழுதும் அடங்கி விடும்படியாக அதிகம் உண்ணுதல் கூடாது. அது உடல் ஆரோக்கியத்திற்கும் நல்லதல்ல, அதாவது உயிர் வாழ்ந்திருக்க உண்ண வேண்டுமே அல்லாமல் உண்பதற்காக உயிர் வாழக் கூடாது. இப்படி ஒரு பொருள் கொள்ளலாம். மற்றொன்று நாம் எப்பொழுதும் இறைவனை அடையவேண்டும் என்ற பசியைக் கொண்டிருக்க வேண்டும். அந்தப் பசி அருட்பசியாகும். இறைவனை அடைய வேண்டும் என்னும் வேட்கைதான் பசியென்று பொருளாகிறது.

ஒருவர், துறவி ஒருவரிடம் தான் இறைவனைக் காண வழியாது? என்று கேட்க, அப்பெருந்துறவியார் அவரை ஆற்றுத் தண்ணீரில் ஆழ அமுக்கிப் பிடித்துக் கொண்டாராம். அமுங்கி இருந்தவர் மூச்சுத் திணறி அலறி எழுந்தாராம். அதுகண்ட துறவியார், ''ஐயா நீர் தண்ணீரில் அமுங்கி இருந்தபோது எதைத் தீவிரமாக உமக்கு வேண்டும் என்று எண்ணியிருந்தீர்'' என்று கேட்டார்.

''நான் மூச்சுவிட வேண்டும் என்றுதான் தீவிரமாக நினைத்திருந்தேன்'' என்றார் அவர். உடனே துறவியார் ஐயனே இதுபோன்றே நீ இறைவனை எண்ணி வேட்கை கொள்ள வேண்டும். அப்போதுதான் உனக்கு இறைவன் அருள் புரிவான் என்றாராம். மற்றவரும் ஒத்துக் கொண்டாராம். இந்தப் பொருள் இதற்குச் சாலப் பொருந்துவதாகும்.

**தனித்திரு :**

இந்த உலகில் உயிர் கொண்டு வாழும் நான் யார் என்பதை ஆராய வேண்டும். அப்போது நான் வேறு, இந்த உடல்வேறு, பஞ்ச பூதங்கள் வேறு முதலிய பாகுபாடு செய்து வந்தோமானால், நான் என்பது தனித்து நிற்கும். நம்முடன் தொடர்புடையவராய்க் காணும் தாய், தந்தை, உற்றார் சுற்றம் எல்லாம் யார் என்று புலனாகிவிடும். அப்பர்சுவாமிகள் தாம் பாடிய தேவாரத்தில் தாய் யார்? தந்தையார்? தாரம் யார்? தாம் தாம் யாரோ? என்றும், எல்லாம் வந்தவாறே போக வேண்டியதுதானே என்றும் கூறுகின்றார்.

இப்படி எண்ணி எண்ணி விடை கண்டு, தான் தனி என்று கண்டு கொள்ள வேண்டும். சீவன் முத்தர் மற்றவரைப் போலவும் வருவார் போவார். ஆனால் இறைவனோடு ஒன்றிய நிலையில் தனித்தும் இருப்பார்கள். இதைப் பற்றிச் சைவ சித்தாந்த நூல்கள் அணைந்தோர் தன்மை என்று விளக்குகின்றன.

பட்டினத்தடிகள், ''தனி முதலைப் பார்த்துத் தனித்திருந்து வாழாமல் அநியாயமாய்ப் பிறந்திங் கலைந்து நின்றேன் பூரணமே'' என்று அழுது புலம்பியுள்ளார். இந்த முறையில் நாம் தனித்திருந்து வாழவேண்டும். பசுஞானம் பாசஞானம் என்று தனித்திருக்கின்ற நிலை வரும்போது, பதிஞானம் சித்தியாகின்றது என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

**விழித்திரு :**

இப் பிரபஞ்ச வாழ்க்கையில் ஆணவம், மலம், மாயை முதலிய குற்றங்கள் ஆன்மாவைக் கட்டுப்படுத்தும். அவைகள், ஆன்மா இறைவனை நோக்கிச் செல்லும் வழியை மறைத்திருக்கும். மேலும் அவைகள் ஆன்மாவை உலக பந்தத்தில் ஆழ்த்தும். ஆகையால் நாம் எப்பொழுதும் விழிப்புடன் இருத்தல் வேண்டும். சித்திரத்து விளக்குப் போல மனத்தை வைத்திருத்தல் வேண்டும். இதைக் கொண்டே பட்டினத்தடிகள், ''இதையெல்லாம் விழித்திருந்து பாராமல் கெட்டழிந்தேன்' என்று புலம்புகிறார். அவரது புலம்பல் நம்மைப் போன்றவர்கட்காகப் புலம்பிய புலம்பலாகும்.

''மகேசுவரனை விழி திறந்து பாராமல்''
''நிர்மலசதாசிவத்தைப் புத்தியுடன் பாராமல்''
''மூக்கு முனையை விழித்திருந்து பாராமல்''
என்று பாடுகின்றார்.

விழி திறந்து பார்க்க வேண்டுமென்பது அறிவுக்கண் கொண்டு பார்க்க வேண்டும் என்பதாகும். அறிவுக்கண் மூடாமல் விழித்திருக்கும் நிலையே அருட் பிரகாச வள்ளலார் கூறிய விழித்திரு என்ற மந்திரமாகும் என்பதில் யாவருக்கும் ஐயம் எழ நியாயம் இல்லை.

**

அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

# திருஞானசம்பந்தர்

'செந்தமிழ் வித்தகர்'

**திரு அ. ச. ஞானசம்பந்தன், M. A.**

சைவ சமய குரவர்கள் நால்வர் என்பது அனைவரும் அறிந்ததே. அந்நால்வருள்ளும் மூவர் பாடியதைத் தேவாரம் என்றும், மாணிக்க வாசகர் பாடியதைத் திருவாசகம் என்றும் கூறுவார்கள். தேவாரம் பாடிய மூவரையும் ''மூவர் முதலிகள்'' என்று கூறும் வழக்கமும் உண்டு. மேல் நாட்டைப் பொறுத்த வரையில் ''வேர்ட்ஸ்வொர்த்'' என்ற கவிஞன் இயற்கையையே கடவுளாகக் கண்டு பாடினான். இந் நாட்டைப் பொறுத்தவரை ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்கு முன்னர், மூவர் முதலிகளுள் ஒருவராகிய ஞானசம்பந்தர் இயற்கையை இறைவனாகக் கண்டு பாடினார். தேவார, திருவாசக, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களாகிய அனைத்தையும் பார்த்தாலுங்கூட, ஞானசம்பந்தரைப்போல் இயற்கையை வழிபட்டவர் வேறு யாரும் இல்லை என்று துணிவாகக் கூறலாம். குழந்தை உள்ளத்தோடு, மலை கடல் ஆறு முதலிய அளப்பருங் காட்சிகளைக் காணும்போதெல்லாம், ஞானசம்பந்தர் தனிப்பட்ட முறையில் கண்டிருக்கிறார். மலை கடல் ஆறு முதலியவற்றை அப்படியே நாம் காண்கின்றோம். அவற்றினுடைய பரிமாணம், அஞ்சத்தகும் காட்சி முதலியவற்றைக் கண்டு வியக்கின்றோமானாலும், அவற்றின் மூலமாக வெளிப்படுகின்ற கம்பீரத் தன்மையில் முழுமுதற் பொருளாகிய, இறைவனைக் காண்கின்ற பழக்கம் நம்மில் பலருக்கு இல்லை.

''ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும்
மிக்குச்சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன்
எங்கள் சோதி''

என்ற பாடற் பகுதி அவருடைய மனநிலையை ஓரளவு நன்கு தெரிவிக்கின்றது. சுடர் விட்டு நிற்கும் பரம்பொருள் பஞ்சபூதங்களுள் ஒன்றான நெருப்பின் மூலாதாரமாக இருத்தலின், அந்த ஐந்து பூதங்களாலான உலகம், இறைவனின் பல்வேறு தோற்றம் என்று சொல்வது, தவறில்லை அல்லவா?

ஐந்து பொறி புலன்களோடு படைக்கப்பட்ட மனிதன் அப்புலன்களால் இவ்வுலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் கண்டு, கேட்டு உற்று, உய்த்து அனுபவிக்க வேண்டுமென்பது தானே படைப்பின் அடிப்படை. இதை உணராத ஒருசில கூட்டத்தார், உலகத்தில் அழகான பொருள் எதனையும் காணக்கூடாது; இனியவற்றைக் கேட்கக் கூடாது என்றெல்லாம் கூறினார்கள். ஆனால் நம் தமிழர்களைப் பொறுத்த மட்டில் இக்கருத்துப் பொருத்தமில்லாதது என்பதனை நம் முன்னோர்கள் நன்கு அறிவித்திருக்கின்றனர். இதனை மிகுதியாக வலியுறுத்திய பெருமை ஞானசம்பந்தருக்கு உரியதாகும். இறைவனே இசை வடிவான வீணையைக் கையில் வைத்து ஓயாது இசைக்கின்றான் என்ற கருத்தை ''எம் இறை வீணை வாசிக்குமே'' என்றும், ஓயாது நடனமாடிக் கொண்டிருக்கிறானென்றும் கூறுகின்றாராதலினால் இசை மூலமாகவும், கூத்தின் மூலமாகவுங்கூட இறைவனை அடைய முடியும் என்ற புதிய கருத்தை வெளியிட்ட பெருமை, ஞானசம்பந்தருக்கு உரியது.

''கோழைமிடறாக கவி கோளும் இலவாக.....
இசைகூடும் வகையால்
ஏழை அடியார்கள் யாவை சொன சொல்
மகிழும் ஈசன் இடமாம்''

என்ற பகுதி இக்கருத்தை வலியுறுத்துகின்றது.

தமிழ்நாட்டில் சமய உணர்ச்சி குன்றி, வறட்டு ஆராய்ச்சியும் 'இந்நாட்டுப் பண்புக்கு இயலாத சமய வாத தத்துவக் கருத்துக்களும், மிகுதியாக வழங்கத் தொடங்கிய காலத்தில் உண்மை சமயக் கருத்துக்களை மக்களுக்கு இனிய இசையின் மூலம் எடுத்துக் காட்டி ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்'' தன்மையை அடைவதற்கு வழி காட்டிய பெருமை, ஞானசம்பந்தருக்கும் அவர் தேவாரத்துக்கும் உரியதாகும். **

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ,எல்.




மன்மதன்



ரதி

 பதிவு எண். எம். 7039



மோகினி